பக்கங்கள்: இருபத்திநான்கு

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 சித்திரை 18 சனிக்கிழமை (01.05.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 156

# இனப்பிரச்சினைக்கான தீர்வை ஆராய விசேட குழு; சகல தமிழ்த் தரப்புடனும் பேச்சு

## பூட்டானில் மன்மோகன் சிங்கிடம் மஹிந்த எடுத்துரைப்பு





கொழும்பு, மே1

இலங்கையின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது தொடர்பாக ஆராய்வதற்கு விசேட குழு ஒன்றை அமைப்பதற்குத் தாம் தீர்மானித்துள்ளதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கிடம் தெரிவித்திருக்கிறார். நாடாளுமன்றத்துக்குத் தெரிவுசெய்யப்பட்டவர்கள் உட்பட சகல தமிழ்த் தரப்பினருடனும் பேசியே பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் என்றும் ஜனாதிபதி மஹிந்த இந்தியப் பிரதமரிடம் எடுத்துரைத்துள்ளார்.

'சார்க்' மாநாட்டுக்காக பூட்டான் சென்றிருந்த ஜனாதிபதி அங்கு இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங்கைச் சந்தித்து விரிவாகப் பேசினார்.

இந்தச் சந்திப்புத் தொடர்பாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

இலங்கையின் தமிழ் சமூகத்துக்கான அரசியல் தீர்வுத் திட்டங்கள் குறித்துப் பிரதமர் மன்மோகன் சிங்கிற்குத் தெரிவித்துள்ள மஹிந்த ராஜபக்ஷ, பிரச்சினைக்குரிய சகல விவகாரங்கள் தொடர்பாகவும் ஆராய்வதற்காக முக்கிய பிரமுகர்கள் அடங்கிய குழுவொன்றை அமைக்கப் போகிறார் எனவும் குறிப்பிட்டார்.

இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங்குடனான 30 நிமிட பேச்சுகளின்போது இலங்கையின் அனைத்து சமூகத்தவர்களுக்கும் அதிகளவு பிரதிநிதித்துவத்தை வழங்கும் வகையில் நாடாளுமன்றத்தில் மேல்சபையொன்றை (24ஆம் பக்கம் பார்க்க)

## நாடு திரும்பினார் ஜனாதிபதி

கொழும்பு,மே1

பூட்டானின் திம்பு நகரில் நடைபெற்ற 16 ஆவது சார்க் உச்சி மாநாட்டில் கலந்து கொள்வதற்காகச் சென்றிருந்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, நேற்று நண்பகல் 12 மணியளவில் நாடு திரும்பினார் என ஜனாதிபதிச் செயலகம் தெரிவித்தது.

பூட்டானில் ஜனாதிபதி சார்க் வலய நாடுகளின் தலைவர்களைச் சந்தித்து முக்கியமான பேச்சுகளில் ஈடுபட்டார். மாநாட்டில் ஜனாதிபதி ஆற்றிய ஆரம்ப உரை,

(24ஆம் பக்கம் பார்க்க)

## பொன்சேகாவின் உதவியாளர் பிணையில் செல்ல அனுமதி

கொழும்பு,மே1

பிரிகேடியர் துமிந்த கெப்பட்டிவலனவை, கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றம் நேற்றுப் பிணையில் விடுதலை செய்தது.

ஜெனரல் சரத் பொன்சேகாவுக்கு உதவியாளராக கடமையாற்றியமையே இவர் கைது செய்யப்பட்டமைக்கான காரணமாகும்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் பயங்கரவாதப் புலனாய்வுப் பிரிவினரால்

(24ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எம்.பிக்களை திங்களன்று சந்திக்கிறார் இந்தியத் தூதுவர்

கொழும்பு,மே1

கடந்த பொதுத் தேர்தலில் வடக்கு கிழக்கு மாகாணத் தமிழ் மக்களின் அதிக வாக்குகளைப் பெற்று நாடாளுமன்றத்துக்குத் தெரிவுசெய்யப்பட்டிருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருடன் நல்லெண்ணச் சந்திப்பு ஒன்றை நடத்த இந்தியத் தரப்பு அழைப்பு விடுத்துள்ளது.

கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகத்தில் நாளை மறுதினம் திங்கட்கிழமை நண்பகல் இரு தரப்பினரும் பரஸ்பரம் நேரில் சந்தித்துப் பேச உள்ளார்கள்.

இந்தியத் தூதுவர் அசோக் கே.காந்தா தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுக்கு இது தொடர்பாக அழைப்பு விடுத்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் 14 பேரும் இச்சந்திப்பில் கலந்துகொள்கின்றார் கள். கடந்த தேர்தலுக்குப் பின்னர் தமிழ்த் தேசியக் கூட்மைப்பினருக்கும், இந்தியத் தரப்பினருக்கும் இடையில் இடம்பெறுகின்ற முதலாவது சந்திப்பு இதுவாகும்.

இரு தரப்பினரும் இலங்கையின் தற்கால அரசியல், மனித உரிமை நிலைவரங்கள், தமிழர் பிரச்சினைகள் குறித்து பரஸ்பரம் உரையாடுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இச்சந்திப்பின் போது தமிழர்களின் அரசியல் அபிலாஷைகளைக் கூட்டமைப்பினர் வலியுறுத்துவார்கள் என்றும் அறியப்பட்டது. (அ-சி)

## குடாநாட்டில் தனியார் காணிகளிலிருந்து விரைவில் படையினர் படிப்படியாக விலகுவர்!

### பாதுகாப்புச் செயலர் கோத்தபாய தெரிவிப்பு

கொழும்பு,மே1

யாழ்.குடாநாட்டில் பாதுகாப்புப் படையினர் தாம் தங்கியுள்ள தனியார் காணிகளிலிருந்து படிப்படியாக வெளியேறுவார்கள் எனப் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

யாழ்.குடாநாடு மற்றும் ஆனையிறவுக்கான தனது விஜயத்தின் போதே அவர் இதனைத்தெரிவித்துள்ளார்.

நேற்றுக் காலை ஆனையிறவில் யுத்த நினைவுத்தூபியைத் திறந்து வைக்கும் நிகழ்வில் கலந்துகொண்ட வேளையே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளுடனான தீவிர யுத்த காலத்தில் படையினர் யாழ். குடாநாட்டில் தாம் பயன்படுத்துவதற்காக எடுத்துக் கொண்ட காணிகளிலிருந்து படிப்படியாக வெளியேறுவர் என அவர் தெரிவித்துள்ளார்.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளின் அபிவிருத்தியில் படையினர் முக்கிய பங்களிப்பை வழங்குவார்கள் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, மே 12ஆம் திகதி முதல் 18ஆம் திகதிவரையிலான ஒருவார காலப் பகுதியை யுத்த வீரர்கள் வாரமாக அனுஷ்டிப்பதற்குத் தீர்மானித்துள்ளதாகவும் பாதுகாப்புச் செயலாளர் தெரிவித்தார்.

ஒருவார நிகழ்வுகள் கொழும்பில் வெற்றித் தினக் கொண்டாட்டங்களுடன் முடிவடையும்

(24ஆம் பக்கம் பார்க்க)

## ஆசியாவின் ஆச்சரியமாக இலங்கையை மாற்றியமைப்பதற்கு உறுதிபூணுவோம்!

### மேதினச் செய்தியில் ஜனாதிபதி அழைப்பு

கொழும்பு,மே1

தேசிய அபிவிருத்தியினூடாக இலங்கையை ஆசியாவின் ஆச்சரியமாக மாற்றியமைக்க இன்றைய தொழிலாளார் தினத்தில் நாம் அனைவரும் உறுதிபூணுவோமாக. - என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ விடுத்துள்ள மேதினச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

அந்தச் செய்தியில் ஜனாதிபதி மேலும் கூறியுள்ளவை வருமாறு:-

உலக தொழிலாளார் தினத்தைக் கொண்டாடி மகிழும் உலக மக்களுடன், இணைந்து கொள்ளும் இலங்கையின் உழைக்கும் மக்களுக்குப் பெரும் மகிழ்ச்சியுடன் எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எமது நாட்டின் உழைக்கும் மக்கள் மத்தியில் பயங்கரவாதமே (24ஆம் பக்கம் பார்க்க)

## சகல மாகாண சபைகளின் தேர்தல்களையும் இவ்வருடத்தில் நடத்துவதற்கு அரசு உத்தேசம்

### நாடாளுமன்றுக்கு சட்ட திருத்தப் பிரேரணை வருகிறது

கொழும்பு,மே1

அடுத்த வருடம் மார்ச் மாதம் வரை ஒரு வருடத்தால் நீடிக்கப்பட்டிருந்த மாகாண சபைத் தேர்தல்களை இவ்வருடமே நடத்தி முடிக்க அரசு தீர்மானித்துள்ளது எனத் தெரியவருகிறது.

மாகாணசபைத் தேர்தல்களை வலயரீதியாக நடத்துவதற்குத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது எனவும், இதற்கான பிரேரணையை அடுத்த வாரம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க அரசு உத்தேசித்துள்ளது எனவும் உயரதிகாரியொருவர் தெரிவித்தார்.

மாகாண சபைகளின் தேர்தல்களை வலயரீதியாக நடத்துவதற்கான சட்டமூலத்துக்கான பிரேரணை சில மாதங்களுக்கு முன்பு நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தபோதும் அத்தகைய சட்டமூலத்தை நிறைவேற்ற மாகாண சபைகளின் அனுமதி பெறப்பட வேண்டுமென உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்ததால் அச்சட்டமூலத்தை நிறைவேற்றுவது தற்காலிகமாக ஒத்திவைக்கப்பட்டிருந்தது.

தற்போது கிழக்கு மாகாணசபையைத் தவிர்ந்த ஏனைய மாகாணங்களிலும் [illegible]

## சாவகச்சேரி மாணவன் கொலை பற்றி விசாரிக்கும் நீதிவானின் வாசஸ்தலப் பகுதியில் ஆயுதத்துடன் ஈ.பி.டி.பியினர் நடமாட்டம் என முறைப்பாடு

யாழ்ப்பாணம்,மே1

சாவகச்சேரி இந்துக்கல்லூரி மாணவன் திருச்செல்வம் கபிலநாத் படுகொலை தொடர்பாக விசாரித்துவரும் சாவகச்சேரி நீதிமன்ற நீதிவானின் [illegible]

மூன்று தினங்களாக [illegible] வர் நடமாடுகின்றனர் [illegible] கள் நீதிமன்றுக்கு கடிதம் அனுப்பியுள்ளமையை அடுத்து நேற்று இவ்விவகாரம் [illegible]

[illegible] மோட்டார் சைக்கிளில் ஆயு[illegible] அங்கு நடமாடித்திரிகின்றனர் என்று கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருப்பதாக நீதிமன்றில் தெரிவிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அரியாலை சனசமூகநிலைய 61ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு நடத்தப்படவுள்ள மாவட்ட ரீதியிலான சுற்றுப்போட்டிகள்**

1) துடுப்பாட்டம் - (6பேர், 5 ஓவர்கள் கொண்டது)
2) துடுப்பாட்டம் - (16 வயதின் கீழ் - உள்ளூர்) (7 பேர், 12 ஓவர்கள்)
3) கரப்பந்தாட்டம் - (செற்றப் முறையிலானது)
4) கரப்பந்தாட்டம் - (ஓவர் கேம்)
5) உதைபந்தாட்டம் - (அரச திணைக்களங்களிற்கிடையிலானது, 7 பேர் கொண்ட போட்டி)

★ விண்ணப்பக் கட்டணம் : 300/-
★ விண்ணப்ப முடிவு திகதி : 15-05-2010.

**விண்ணப்பங்களைப் பெற்று ஒப்படைக்க வேண்டிய இடங்கள் :**
1. அரியாலை சனசமூக நிலையம், புங்கன்குளம், அரியாலை.
2. டாப் என்ரபிறைசஸ், நவீன சந்தை உட்புறம், யாழ்ப்பாணம்.
3. சிறிமுருகன் நகைமாளிகை - 68, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

# ஓராண்டு நினைவஞ்சலி



அமரர்
## தங்கராசா றதீபன்
*(சித்த மருத்துவத்துறை இறுதியாண்டு மாணவன்)*

தோற்றம் 05.10.1977 மறைவு 11.05.2009

திதி: 01.05.2010

ஒளிவிளக்காயிருந்து எமக்கு
வழிகாட்டிய அன்பின்
அண்ணாவே!
பண்பின் சிகரமாயிருந்து
- எமை
உயரவைத்த அன்புச் செல்வமே!
பாசத்தினால் எம்மை ஆண்ட எம் அன்பு அப்பாவே!.
எம்மைத் தவிக்கவிட்டுச் சென்று
ஓராண்டல்ல எத்தனை ஆண்டுகள் ஆனாலும்
உங்கள் நினைவும் எம்மோடிருக்கும்.

கேணியடி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

என்றும் உங்கள் நினைவுகளுடன்:
குடும்பத்தினர்.

(97634)

# மரண அறிவித்தல்

## திருமதி ஜெயவீரசிங்கம் பூமணி

குப்பிளான் தெற்கு, கேணியடியைச் சேர்ந்த திருமதி ஜெயவீரசிங்கம் பூமணி நேற்று (30.04.2010) வெள்ளிக் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற மாணிக்கர்-நாகம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற ஜெயவீரசிங்கத்தின் (ஓய்வு பெற்ற முதலியார்) அன்பு மனைவியும் காலஞ்சென்ற இராசையா (உக்கிளாங்குளம், வவுனியா) மற்றும் நடராசா, தங்கம்மா, சிவ பாக்கியம், தம்பிப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரியும் நித்தியானந்தி (ஜேர்மனி), சர்வானந்தி (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயும் யோகராசா (ஜேர்மனி), யோகநாதன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும் மீலா, மீரா, மீனா, றனோஜன், கிறிஸ்லி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் அஜன், கஜன் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.05.2010) சனிக்கிழமை பி.ப.1 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக குப்பிளான் காடா கரம்பை மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

குப்பிளான் தெற்கு,
குப்பிளான்.

தகவல்:
மா.தம்பிப்பிள்ளை
(சகோதரன்).

# யாழ்.மாவட்ட பாடசாலைகளின் மென்பந்தாட்டப் போட்டிகள் நாளை

யாழ்ப்பாணம், மே. 01

யாழ்.மாவட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான மென்பந்தாட்டப் போட்டிகள் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு கனகரத்தினம் மகா வித்தியாலய மைதானத்தில் இடம்பெறவுள்ளன.

இந்தப் போட்டிகளில் பங்குபற்றும் அணிகள் விவரம் வருமாறு:

ஸ்கந்தா எதிர் நெல்லியடி ம.வி, இணுவில் இந்து எதிர் வேலணை துரைச்சாமி ம.வி, மகாஜனா எதிர் நயினாதீவு ம.வி, தொண்டைமானாறு வீரகத்தி ம.வி எதிர் ஊர்காவற்றுறை சென்.அன்ரனீஸ்.

கரவெட்டி விக்னேஸ்வரா எதிர் சாவகச்சேரி றிபேர்க், மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதயா எதிர் கோண்டாவில் இந்து ம.வி, யாழ்.சென்றல் எதிர் 5ஆவது போட்டியில் வெற்றிபெறும் அணி. (ஒ-1)

# அளவெட்டியில் இன்றும் நாளையும் கலை நிகழ்வுகள்

அளவெட்டி மகாஜனசபை கலைஞர் வட்டம் மாதாந்தம் பூரண தினத்தையொட்டி நடத்தும் நிலாக்காலம் எனும் மூன்றுநாள் கலை நிகழ்வின் இரண்டாம் நாளான இன்று இயல் அரங்கமும், நாளை மூன்றாம் நாள் நாடக அரங்கும் இடம்பெறவுள்ளன.

தினமும் மாலை 4.30 மணியளவில் அளவெட்டி சிவாய ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமிகள் கலாசார நிலையத்தில் இந்த நிகழ்வுகள் இடம்பெறுகின்றன. கவியோகி அருட்கவி சீ. விநாசித்தம்பிப் புலவர் ஞாபகார்த்தமாக இடம்பெறும் இன்றைய இயலரங்கம் மகாஜன சபை கலைஞர் வட்டத்தின் தலைவர் வை. விஜயபாஸ்கரன் தலைமையில் நடைபெறும். செஞ்சொற் செல்வர் ஆறு. திருமுருகன் முதன்மை விருந்தினராகக் கலந்து கொள்வார். (ஒ-14)

# கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி ஆசிரியை திருமதி
பகீரதி கேசவன் அவர்களின்
அன்புத் தந்தை

## சபாபதிப்பிள்ளை மயில்வாகனம்

அவர்களின் மரணச்செய்தி அறிந்து துயர் அடைகின்றோம். அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறுவதுடன், அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யா/இராமநாதன் கல்லூரிச் சமூகம்,
சுன்னாகம்.

# முதலாம் ஆண்டு நினைவலைகள்



## கந்தசாமி தர்மகுலசிங்கம்
(நிர்வாக அதிகாரி, வைத்திய பணிமனை, முல்லைத்தீவு)

திதி: (01.05.2010)

ஓராண்டு மறைந்தாலும்
மறையவில்லை
உனது திருமுகம் இப்பூவுலகில்

(97632)

தம்பி: க.மனோகரன்

# மரண அறிவித்தல்கள்

## மாணிக்கவாசகர் சிவபாதசுந்தரம்



கரணவாயைப் பிறப்பிடமாகவும், இல.19, மூத்தவிநாயகர் வீதி, நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட மாணிக்கவாசகர் சிவபாதசுந்தரம் (இளைப்பாறிய பிரதம லிகிதர், விவசாய இலாகா) நேற்று (30.04.2010) வெள்ளிக்கிழமை காலை 9 மணியளவில் இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் மாணிக்கவாசகர்- செல்லாச்சி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான மாரிமுத்து-மாணிக்கம் தம்பதியரின் அருமை மருமகனும் அமரர் செல்வராணியின் அன்புக் கணவரும் ஏகாம்பரம், காலஞ்சென்ற தியாகராசா, திருமதி பவளம் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்றவர்களான கனகலிங்கம், இரத்தினம், அன்னபூரணம், குழந்தைவேலு, சுப்பிரமணியம், இராசம், துரையம்மா, இராசலட்சுமி ஆகியோரின் மைத்துனரும் சிவனேசராசா (பிரான்ஸ்), நிர்மலா ஆகியோரின் அன்புத் தந்தையும் சந்திரசேகரம் (இளைப்பாறிய பதில்பிரதம பாதுகாப்பு அதிகாரி, யாழ்.பல்கலைக்கழகம்), நீத்தா (பிரான்ஸ்) ஆகியோரின் மாமனாரும் கோணேஸ்வரன் (கனடா), கைலைநேசன் (கனடா), நிறஞ்சன் (அவுஸ்திரேலியா), கஸ்தூரி (கனடா), கிறிஸ்ணா, லக்ஷ்மி (பிரான்ஸ்), சாளினி (கனடா), காயத்திரி (அவுஸ்திரேலியா), கங்கைஅமரன் ( போலண்ட்) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆகேஷின் அருமைப் பூட்ட னும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (02.05.2010) ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று மு.ப. 10 மணியளவில் பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

19, மூத்தவிநாயகர் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

(97623)

தகவல்:
சிவனேசராசா (மகன்),
சந்திரசேகரம் (மருமகன்).

## திருமதி கனகலட்சுமி ஐயாத்துரை



ஏழாலை மேற்கைப் பிறப்பிடமாகவும், தட்டாதெருவில் வசித்தவருமாகிய ஐயாத்துரை கனகலட்சுமி 28.04.2010 புதன்கிழமை ஏழாலையில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா-வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை-லட்சுமி தம்பதியரின் மருமகளும் ஐயாத்துரையின் பாசமிகு மனைவியும் சிவகுமாரன் (பிரான்ஸ்), தேவமலர் (பிரான்ஸ்), ஜீவமலர் (ஏழாலை), ஜலஜா (கனடா), வதனி (கனடா), சதீஸ்குமார் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத்தாயும் சத்தியபாமா, அருமைச் செல்வம், இளங்கோவன், கணேசலிங்கம், ஸ்ரீரஞ்சன், தர்ஷிகா ஆகியோரின் அன்பு மாமியாரும் சிவாந்துஜா, சிந்துஜன், சிந்தூரன், தாரணி, தனுஜா, தர்ஷனா, சுபேகா, சோபிகா, தீபிகா, றம்ஸன், ஜதுசன், அர்ஜீன், பிரசாந், பானுஜா, அனித், ஆரபி, அனிஷன், சர்மிகா, சஞ்சய் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (02.05.2010) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று ஏழாலை உசத்தியோடை இந்து மயானத்தில் பூதவுடல் தகனஞ்செய்யப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பள்ளஞ்சீமா,
ஏழாலை மேற்கு, ஏழாலை.
[பாடசாலைக்கு அருகில்]

(97625)

தகவல்:
சி.இளங்கோவன்.
(மருமகன்)

**SIAT ACADEMY**

**சான்றிதழ் வழங்கும் வைபவம்**

கடந்த 24.04.2010, 25.04.2010 ஆகிய திகதிகளில் யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற Animation கற்கை நெறிக்கான கருத்தரங்கிலும், பயிற்சிப் பட்டறையிலும் பங்குபற்றிய அனைவருக்குமான சான்றிதழ் வழங்கும் வைபவம் நாளை (02.05.2010) ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியளவில் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இப்பயிற்சிப் பட்டறையில் பங்குபற்றிய அனைவரையும் தவறாது சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

பணிப்பாளர் சபை.

MAG NET Academy (Pvt) Ltd.

**யப்பான் றேடர்ஸ்**

நம்பிக்கை நாணயம்

உறுதி உத்தரவாதம்

எமது நிறுவனத்தின் ஆண்டு நிறைவை
முன்னிட்டு விசேட விலைக்குறைப்பு



இச்சலுகை இம்மாத இறுதிவரை மட்டுமே

புதிய அறிமுகம் SPORTS ELECTRIC BIKES



யப்பான் தொழில்நுட்ப
மின்சார மோட்டார் சைக்கிள்கள்

★ எரிபொருள் தேவையில்லை.
★ சாரதி அனுமதிப்பத்திரம் தேவையில்லை.

இரண்டு வருட உத்தரவாதம்

★ பெற்றோல் மோ.சைக்கிள் ஒரு லீற்றர் பெற்றோலிற்கு 40-70 km. செலவு-119 ரூபா
★ மின்சார மோ.சைக்கிள் ஒருதடவை மின்னேற்றத்திற்கு 40-70 km. செலவு-13 ரூபா

சேமிப்பு- 116 ரூபா

யாழ்.மாவட்டத்துக்குப் பிராந்திய முகவர்கள் தேவை.

யாழ்.மாவட்ட அங்கீகாரம் பெற்ற ஏக விநியோகஸ்தர்:

JAPAN TRADERS

இல.10-14, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
HOT LINE: 0770868079.

[விவேகானந்தா அச்சகக் கட்டடம்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944


## விடுதலைக்கான புரட்சி அவசியம்

உழைக்கும் வர்க்கத்தினரான தொழிலாளர்களை ஏற்றி, போற்றி மகிழும் நாள் இன்று. மேதினியின் மேன் மக்கள் குறித்து பூமிப்பந்து சிந்திக்கும் நாளும் கூட.

அயர்வின்றிப் பாடுபடும் பாட்டாளி வர்க்கத்தின் அயராப் பங்களிப்பில்தான் உலகம் இன்று இயங்கிக்கொண்டிருக்கின்றது.

உழைக்கும் மனிதன். அவன் உழைப்பு சக்தி. அந்த உழைப்பு சக்தியிலிருந்து உருவாக்கம் பெறும் உற்பத்தி உலகம். அந்த உற்பத்தி உலகத்திலிருந்து உருப்பெறும் உற்பத்தி உறவுகள். அந்த உற்பத்தி உறவுகளில் இருந்து தோற்றம் பெறும் வர்க்கப் பிரிவுகள். அந்த வர்க்கங்கள் மத்தியில் முனைப்புறும் முரண்பாடுகள். அந்த முரண்பாடுகளிலிருந்து வெடிக்கும் புரட்சிகள். அந்தப் புரட்சிகளால் தோற்றம் கொள்ளும் சமூக மாற்றங்கள். அந்த சமூக மாற்றங்களை உள்வாங்கியதாக அசையும் வரலாறு. - இப்படியாக உழைக்கும் கரங்களில் இருந்து கட்டவிழ்கிறது மனித சரித்திரம் என்கிறார் ஒரு தத்துவாசிரியர்.

இந்த வரலாற்றின் ஒரு முக்கிய நிகழ்வாக, அரங்கேறிய தொழிலாளர் வெற்றியை நினைவு கூர்ந்து இறும்பூதெய்துவதற்காக அனுஷ்டிக்கப்படுவதே மேதினம்.

முதலாளி வர்க்கத்தின் அடக்குமுறைக்கு எதிராக உலகத் தொழிலாளர்கள் - உழைப்பாளர்கள் - ஒன்றுபட்டதன் மூலம் தமது உரிமைகளை நிலைநாட்டியதன் சிறப்பாகவே மேதினம் கொண்டாடப்படுகின்றது.

தேசங்கள், தேசியங்கள், சமூக எல்லைகளை எல்லாம் கடந்து இந்த நாள் உலகப் பெருவிழாவாகக் கொண்டாடப்படுவது இதற்குத் தனிச்சிறப்பாகும்.

நாடுகள் கடந்து பூகோளப் பந்தின் பெரு நிகழ்வாக மேதினத்தைக் கொண்டாடும் அளவுக்குத் தொழிலாளர் துயர் இந்த மேதினியில் துடைக்கப்பட்டு அவர்களுக்குப் பிரகாசமான வாழ்வு உறுதிப்படுத்தப்பட்டு விட்டதா? முதலாளித்துவம் தோற்று அடங்கிப்போய்விட்டதா? உழைப்பாளர் தினமான இன்று அதனைப் பற்றிய சிந்தனை மீட்டல் பொருத்தமானதாக இருக்கும்.

பூமிக் கோளத்தில் சமூகப் பிராணியான மனிதனின் வரலாறு கொந்தளிப்பு மிக்க போராட்டங்களோடு முன்நகர்கின்றது. சுதந்திரத்தையும், சமத்துவத்தையும், உரிமைகளையும், நியாயத்தையும் நிலைநாட்ட வேண்டி சமூகங்கள், இனங்கள், தேசியங்கள் புரட்சிகளை நடத்துகின்றன; கிளர்ச்சிகளை முன்னெடுக்கின்றன; வன்முறைப் புயல் வீசும் போராட்டங்களில் இரத்தத்தில் நனைகின்றன.

மனித சமூகத்தை சாசுவதமாகப் பற்றிநிற்கும் வர்க்க வகைப்பாடுகளே இந்தப் போராட்டங்கள், கிளர்ச்சிகள், புரட்சிகளுக்கு அடித்தளமிட்டு நிற்கின்றன.

ஏழை - பணக்காரன், ஆள்பவன் - ஆளப்படுபவன், ஒடுக்குபவன் - ஒடுக்கப்படுபவன், சுரண்டுபவன் - சுரண்டப்படுபவன் என்று உலக சமூகங்கள் எங்கும் ப்ரவிப் பரந்து விரிந்து கிடக்கும் முரண்பாடுகளே இப்போராட்டங்களுக்கு எல்லாம் உயிரூட்டி வித்தாகி நிற்கின்றன.

ஆறறிவு பெற்ற மானிட சமூகம் விவசாயத்தில் பட்டறிவு பெற்று, நிலத்தைப் பகிர்ந்து, விவசாய உற்பத்தியில் ஈடுபடத் தொடங்கியதுமே சொத்துப் பிரச்சினைகள் தோன்றிவிட்டன. வர்க்கங்கள் பிறந்தன. வர்க்க முரண்பாடுகளும் உருவாக்கம் பெற்றன. ஆண்டான் - அடிமை என்ற இழிநிலை வகைப்படுத்தலும் தோற்றம் பெற்றுவிட்டது.

இத்தகைய ஆளுகை - ஆளப்படுதல் என்ற அடிமைச் சமுதாயத்தின் பரிணாமப் போக்கில் பிரபுத்துவ அடக்குமுறைப் பிறப்பாக்கம் பெற்றது. ஆரம்பத்தில் பிரபுக்கள் - கூலி விவசாயிகள் என இந்த முரண்பாடு இரு வகைப்படுத்தலுக்குள் விஸ்வரூபம் எடுக்கத் தொடங்கியது.

அடிமைகளான கூலிகளின் உற்பத்தியை - உழைப்பை - சுரண்டி விவசாயம், கைத்தொழில்துறைகள் பேரெழுச்சி பெற்றன. கைத்தொழில் புரட்சியும், விஞ்ஞானத் தொழில்நுட்ப விருத்தியில் ஏற்பட்ட பாய்ச்சலும் மனித வாழ்விற்கு ஆதாரமான பொருளுற்பத்திப் போக்கில் பெரு மாற்றங்களைக் கொண்டுவர, முதலாளி - தொழிலாளி என இரு பெரும் வர்க்கங்கள் இயல்பாகவே தோற்றம் பெற்றன.

வியர்வை சிந்தி உழைக்கும் மனிதனின் உழைப்பு சக்தி பொருளாக மாறுகின்றது. அந்தப் பொருள்களிலிருந்து ஒரு பண்ட உலகம் தோன்றுகின்றது. அந்தப் பண்ட உலகத்தில், உழைப்பவனுக்கு, அவனால் உருவாக்கப்படும் பொருள் அந்நியமாகின்றது. அவனது ஆக்கம், அவனது படைப்பு, அவனுக்கே அந்நியமாகி அவனிடமிருந்து புறம்பாகி, பண்டமாகி, பணமாகி, லாபமாகி, இன்னொருவரின் செல்வமாகிறது. முதலாளிய பொருளுலகில் உழைக்கும் மனிதன் தனது ஆக்கத்தைத் தானே இழக்கும் பரிதாபமும், முதலாளியம் வலுவாகும் அநீதியும் இப்படித் தொடர் நிகழ்வாக நீடிக்கின்றன.

இத்தகைய முதலாளித்துவத்தின் வளர்ச்சி பாட்டாளி வர்க்கமாகிய தொழிலாளர்களை - உழைப்பாளர்களை - அடக்கி, ஒடுக்கி, சுரண்டி வறுமையின் விளிம்புக்குத் தள்ள, அதற்கு எதிராகப் பாட்டாளி மக்களின் புரட்சி வெடிக்கும் என பொதுவுடமைவாதிகள் கனவு கண்டனர்.

பாட்டாளி மக்களின் புரட்சியில் முதலாளித்துவம் தனக்குத் தானே புதைகுழி தோண்டும். அந்தப் புதைகுழியிலிருந்து புதிய சோசலிஸ சமுதாயம் பிறக்கும். அத்தகைய சமுதாயத்தில் அனைத்து உற்பத்தி சாதனங்களும், உடைமைகளும் பொதுவானவையாகி, சமூக முரணிய வேதங்கள் நீங்கும். சுதந்திரமும் சமத்துவமும் மிக்க மனுக்குலம் நிலைக்கும் என்றெல்லாம் முன்னர் கூறப்பட்ட - நம்பப்பட்ட - எதிர்ப்புகள் எல்லாம் நிஜத்தில் நடக்கவேயில்லை. வெறும் கனவாகிப் போயின.

மாறாக, முதலாளித்துவம் மென்மேலும் பலமாகி விஸ்வரூபம் எடுத்து வருகிறது. அது தேசங்களின் எல்லை கடந்து சர்வதேச சக்தியாக - சிலந்திவலைப் பின்னலாக - இந்தப் பூமிப் பந்தைக் கவ்வி, விஞ்சி, எழுந்து நிற்கின்றது. வர்க்க முரண்பாடுகளை உள்வாங்கியபடி, விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சிகளால் மேலும் செழுமை பெற்றபடி, உழைப்பாளர்களிடமிருந்து உறிஞ்சும் உற்பத்தி இலாபம் என்ற இரத்தத்தால் முதலாளித்துவ ஜந்துகள் மென்மேலும் வீங்கிப் பருக்க, உழைப்பாளர் சமூகம் நசியுண்டு ஒடுங்கி வருகின்றது. முதலாளிய பொருளுற்பத்தி, கைத்தொழில் மயமாதல், நவீனத்துவமாக்கல், உலகமயமாதல் என்று பூமிக்கிரகத்தையே பற்றிப் படர்ந்து வரும் புதிய போக்கு இங்கு வர்க்க முரண்பாட்டை மேலும் கூர்மையடையச் செய்து, அதனை மானிட வாழ்வு முறையிலிருந்து அகற்ற முடியாத இரும்புச் சட்ட சிறையாக்கி வருகிறது.

இத்தகைய முதலாளித்துவப் பிடியிலிருந்து உலகை விடுவிக்கப் புதிய புரட்சி ஒன்று உலகெங்கும் வியாபித்து வெடிக்க வேண்டும். அப்போதுதான் உழைப்பாளர்களுக்கு உண்மை விடுதலைக்கு சாத்தியம் கிட்டும். ஆனால் அந்தப் பிடிக்கான ஒளிக்கீற்றுக்கூடத் தென்படுவதாக இல்லை என்பதுதான் வருத்தம் தரும் உண்மையாகும்.

# குற்றச்செயல்கள் தொடர்பாக ஆராய்வதற்கு விரைவில் கலந்துரையாடல் ஒன்றை ஏற்பாடு செய்க

## யாழ்.அரச அதிபரிடம் அரச சார்பற்ற இணையம் கோரிக்கை

யாழ்ப்பாணம், மே 1

குடாநாட்டில் இடம்பெறுவதாகக் கூறப்படும் குற்றச் செயல்கள் குறித்து ஆராய்வதற்கு விரைவில் கலந்துரையாடல் ஒன்றை ஏற்பாடு செய்யுமாறு யாழ்.மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் யாழ்.அரச அதிபரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது தொடர்பாக இணையத்தின் தலைவர் வி.கேசவன், யாழ்.அரச அதிபருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:

அண்மைக் காலமாக யாழ்ப்பாண மாவட்டத்தில் இடம்பெறுவதாகக் கூறப்படும் ஆள்கடத்தல், கப்பம் கோரல், திருட்டுக்கள் போன்ற பல்வேறு சமூகவிரோத நடவடிக்கைகள் பற்றி பத்திரிகைகளில் வெளிவரும் செய்திகள் பற்றியும், பத்திரிகைகளில் வெளிவராத குற்றச் செயல்கள் சம்பந்தமாகவும் தங்களின் கவனத்தை ஈர்க்க விரும்புகின்றோம்.

யாழ்.குடாநாட்டில் பல்வேறு பகுதிகளிலும் பரவலாக இடம்பெறும் குற்றச் செயல்கள் மக்களைப் பயப்பிராந்தியிலும், அச்சத்திலும் வாழும் சூழ்நிலையை உருவாக்கி உள்ளது.

இவ்வாறான சகல குற்றச்செயல்களையும் தடுப்பதற்கான ஒருங்கிணைந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொருட்டு கலந் துரையாடலை ஒன்றை விரைவில் நடத்துமாறு தங்களை வேண்டிக் கொள்கிறோம் - என்றுள்ளது. (50)

# வீதிகளை அகலமாக்கும்போது பாதிக்கப்படும் மக்களுக்கு நட்டஈடு வழங்குவது தொடர்பாக விரைவில் அறிவிப்பு

## யாழ்.அரச அதிபர் கூறுகிறார்

யாழ்ப்பாணம்,மே1

வீதிகளை விசாலமாக்கி அகலிக்கும் போது காணி மற்றும் கட்டட இழப்புக்களால் பாதிக்கப்படு வோருக்கு நட்டஈடு வழங்குவது தொடர்பாக உரிய தரப்பினருடன் ஏற்கனவே கலந்துரையாடப்பட்டுள்ளது. இது தொடர்பான முடிவு கூடிய விரைவில் அறிவிக்கப்படும் என யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் தெரிவித்துள்ளார்.

வீதிகளை விசாலமாக்கும்போது பாதிக்கப்படும் மக்களுக்கு நட்டஈடு வழங்க நட வடிக்கை எடுக்க வேண்டும் எனக்கோரி கடந்த 15 ஆம் திகதி தமிழரசுக் கட்சியின் துணைச் செயலாளர் சீ.வி.கே.சிவஞானம் அனுப்பி வைத்த கடிதத்துக்கு அனுப்பியுள்ள பதில் கடிதத்திலேயே அரசஅதிபர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் முக்கிய வீதிகளை விசாலமாக்கி அகலிக்கும் நடவடிக்கை களை மேற்கொள்ளும்போது காணி மற்றும் கட்டட இழப்புக்களால் பாதிக்கப்படும் மக்களுக்கு நட்டஈடு வழங்குமாறு கோரி தமிழரசுக் கட்சியின் பொருளாதார, புனர்வாழ்வு மற்றும் அபிவிருத்திக்குப் பொறுப்பான துணைச் செயலாளர் அரச அதிபருக்குக் கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தார்.

இதற்குப் பதிலளித்து யாழ.அரச அதிபர் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார். அந்தக் கடிதத்திலேயே அரச அதியர் மேறகண்டவாறு தெரிவித்துள்ளார். (50-16)

## வன்னியில் மீளக் குடியமர்ந்த மக்களின்

# சீ.டி.எம்.ஏ. தொலைபேசிகளுக்கு மின்னேற்றுவதற்கு 10 ரூபா!

யாழ்ப்பாணம்,மே01

வன்னிப் பிரதேசத்தில் மீளக் குடியமர்ந்துள்ளவர்களில் சீ.டி.எம்.ஏ. தொலைபேசிகளைப் பாவிக்கும் மக்கள் தமது தொலைபேசிகளுக்கு மின்னேற்றுவதற்கு 10 ரூபா கட்டணமாக அறவிடப்படுவதாகத் தெரிவிக்கின்றனர்.

வன்னிப் பிரதேசத்தில் பொதுமக்கள் மீளக் குடியமர்ந்துள்ள இடங்களில் சிலவற்றுக்கு இதுவரை மின்சார வசதிகள் ஏற்படுத்தப்படவில்லை. இதனால் அப்பகுதிகளில் உள்ள மக்கள் இரவில் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாகக் கூறப்படுகின்றது. இவர்களில் சீ.டி.எம்.ஏ. தொலைபேசிகளைத் தமது பாவனைக்காகப் பெற்றுக் கொண்ட மக்கள் அவற்றுக்கு மின்னேற்ற முடியாமல் திண்டாடுகிறார்கள்.

இந்தத் தொலைபேசிகளுக்கு மின்னேற்றிக் கொடுக்கும் நடவடிக்கையில் சிலர் ஈடுபட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது. ஒரு தொலைபேசிக்கு மின்னேற்றுவதற்குப் 10 ரூபா கட்டணமாக அறவிடப்படுவதாகத் தொலைபேசிப் பாவனையாளர்கள் தெரிவிக்கின்றனர். (50-224)

# வடக்கு - கிழக்கில் உள்ள வளங்களையும் வினைத்திறனையும் அப்பகுதி மக்களுக்குப் பயன்படச் செய்வதே எமது நோக்கம்

## பாட்லீட் குழுமத்தின் பணிப்பாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மே 1

நாட்டின் வடக்கு - கிழக்குப் பிரதேச மக்களின் பயன்படுத்தப்படாதிருக்கும் வளங்களையும் வினைத்திறனையும் அவர்களுக்குப் பயன்படச் செய்வதே எமது பிரதான நோக்கம்.

இவ்வாறு தெரிவித்தார் பாட்லீட் பினான்ஸ்லிமிட்டட் குழுமத்தின் பணிப்பாளரும் கொமர்ஷல் வங்கியின் முன்னாள் தலைமை அதிகாரியு மான எஸ்.இராகவன்.

பாட்லீட் பினான்ஸ் லிமிட்டெட்டின் கிளை நேற்று யாழ்.நகரில் திறந்து வைக்கப்பட்டது. அங்கு தலைமை உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு-

இலங்கையின் நூறு வருடங்களுக்கும் மேலாக வாடிக்கையாளர்களுடன் இணைந்திருக்கும் பாட்லீட் குழுமத்தின் ஓர் அங்கமே பாட்லீட் பினான்ஸ் நிறுவனமாகும்.

சாதாரண பாரம்பரிய நிதிநிறுவனங்களின் சேவைகளுடன் ஒப்பிடும்போது நாம் மேலும் பல சேவைகளை வழங்குகின்றோம், அந்த வகையில் நிலையான வைப்புக்கள், லீசிங் மற்றும் பினான்ஸ், பொருள்வள முகாமைத்துவம், ரியல் எஸ்டேட், பங்குச்சந்தை முதலீடுகள், தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் ஆகிய சேவைகளை வழங்குகின்றோம்.

விசேடமாக எமது 104 வருட பழமையான பாரம்பரியத்திற்கு ஏற்ப முதியோருக்கு விசேட சலுகைகளும் உரிமைகளும் வழங்குகின்றோம்.

நிலையான வைப்புக்கள் மீதான வட்டி வீதம் சந்தை நிலைவரப்படி குறைந்தாலும் உங்கள் வருமானமானது நிலையாக இருக்கும் விதத்தில் நிதித்தெரிவுகளை மேற்கொள்ள நாம் ஒரு ஒழுங்கு முறையை அறிமுகப்படுத்தியுள்ளோம்.

அத்தோடு நாம் இலங்கையர்களை நிதி மூலமாக வலுவூட்டும் பொறுப்பினைக் கொண்டுள்ளதோடு உங்கள் நிதி தொடர்பான ஒளிமயமான எதிர்காலத்தை உறுதி செய்கிறோம் - என்றார்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக இலங்கை மத்திய வங்கி ஆளுநர் அஜித்நிவாட்கப்ரால் கலந்து கொண்டார். சிறப்பு விருந்தினர்களாக பாட்லீட் பினான்ஸ் லிமிட்டட்டின் தலைவர் எராச் விக்கிரமசிங்க, மத்திய வங்கி உதவி ஆளுநர் ராணி மஹால் யாழ். மேலதிக அரச அதிபர் ரூபினி வரதலிங்கம் ஆகியோரும் அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.

கிளையின் கட்டடத்தை மத்திய வங்கி ஆளுநர் நாடாவெட்டி திறந்து வைத்தார்.

வன்னியில் இடம்பெற்ற மோதலில் பாதிக்கப்பட்ட ஒருவருக்குச் சுயதொழிலை மேம்படுத்தும் முகமாக தையல் இயந்திரம் ஒன்றும் வழங்கப்பட்டது. (50-16)

(படங்கள் 20ஆம் பக்கத்தில்)

# மூத்த ஊடகவியலாளர் கண்டி ரஸாக் காலமானார்



கொழும்பு,மே1

'சுடர் ஒளி' பத்திரிகையில் ஸ்தாபக காலம் தொட்டும், 'உதயன்' பத்திரிகையில் கடந்த பத்து ஆண்டுகளாகவும் கண்டிப் பிரதேச செய்தியாளராக விளங்கிய அப்துல் ரஸாக் (வயது - 73) நேற்று முன்தினம் இரவு காலமானார் என்ற செய்தியை மனவருத்தத்துடன் அறியத் தருகின்றோம்.

இரு பிள்ளைகளின் தந்தையான ரஸாக், மத்திய மாகாணத்தில் மிகவும் மதிப்பு வாய்ந்த மூத்த ஊடகவியலாளராவார். பழகுவதற்கு இனிமையும், எளிமையும், மென்மையுமான சுபாவம் கொண்ட ரஸாக் ஊடகத்துறையில் எல்லோராலும் பெரிதும் மதிக்கப்பட்ட திறமைசாலி.

படாடோபம், ஆரவாரம் ஏதுமின்றி - சத்தம், சந்தடி செய்யாமல் - தமக்கே உரித்தான அமைதியுடன், அதேநேரம் சுறுசுறுப்பாகவும், விரைந்தும் செய்திகளைத் தேடிப் பெற்று வெளியிடுவதில் அவர் கைதேர்ந்தவராக விளங்கினார்.

தமது பாடசாலைக் கல்வியை முடித்துக்கொண்டு வெளியேறிய காலத்தில் - இளைஞராக இருந்தபோது - பொலிஸ் சேவையில் பணியாற்றிய ரஸாக், பின்னர் ஆசிரிய சேவையில் இணைந்து பல தசாப்த காலமான உயரிய பணியின் பின் ஓய்வுபெற்றிருந்தார்.

1966இல் 'தினபதி', 'சிந்தாமணி' பத்திரிகைகளுடன் தமது ஊடகப் பயணத்தை ஆரம்பித்த ரஸாக், 'உதயன்', 'சுடர் ஒளி' ஊடகக் குடும்பத்தில் தம்மை ஒருவராக்கிக் கொண்டு பலரும் மெச்சப் பணிபுரிந்தார்.

சிறிது காலம் சுகவீனமுற்றிருந்த அவர் நேற்று முன்தினம் இரவு கண்டி வைத்தியசாலையில் காலமானார். அவரின் ஜனாஸா அவரது சொந்த இடமான கண்டி, உகுரஸ்ஸபிட்டியவில் நேற்று மாலை நல்லடக்கம் செய்யப்பட்டது.

## நாளை

| | |
|---|---|
| சித்திரை 19 | 02.05.2010 |
| | ஞாயிற்றுக்கிழமை |
| திதி | : சதுர்த்தி |
| | பி.ப. 05.31 வரை |
| நட்சத்திரம் : | கேட்டை |
| | காலை 06.06 வரை |
| சுபநேரம் : | 08.57 -10.27 வரை |
| ராகுகாலம்: | 04.27-05.57 வரை |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மானிப்பாய் கோவில்பற்று பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வது)
## பொது முகாமையாளர் பதவிக்கான விண்ணப்ப முடிவு திகதி நீடிப்பு

20.04.2010 திகதிய தினக்குரல், உதயன், பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட பொதுமுகாமையாளர் பதவிக்கான விண்ணப்பம் கோரல் முடிவுதிகதி 29.04.2010 எனக்குறிப்பிடப்பட்டிருந்தது. இவ்விண்ணப்ப முடிவுதிகதி 10.05.2010 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

தலைவர்,
பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்.
மானிப்பாய்

## யாழ்ப்பாணத்தில்

JCB Backhoe Loader



மணித்தியால அடிப்படையில்
வாடகைக்கு பெறலாம்

தொடர்புகளுக்கு:

நிமோவி ரெடிமிக்ஸ் நிறுவனம்
Nimovi Readymix (Pvt) Ltd

இல.25 இராமகிருஸ்ண வீதி,
வெள்ளவத்தை,
கொழும்பு-06
011-2363435

கேரதீவு வீதி,
நாவற்குழி,
யாழ்ப்பாணம்.
071-3680291
0777252722

## துயர் பகிர்வு



நாட்டின் இக்கட்டான காலத்திலே பல வருடங்களாக சாவகச்சேரி நகரசபையின் விசேட ஆணையாளராக நேர்மையாகவும் செயற்திறனோடும் நிகரற்ற சேவையாற்றி சாவகச்சேரி நகரத்திற்கே பெருமை சேர்த்த

**அமரர் த. நவரத்தினராசா**

தனது வாழ் நாளில் பல பணிகளை மேற்கொண்டிருந்தார். அந்த வரிசையில் சாவகச்சேரி வைத்தியசாலை அபிவிருத்திச் சங்கத் தலைவராக பல ஆண்டுகள் பணியாற்றியதை இந்நாளில் நினைவு கூர்வதோடு அவரது ஆத்ம சாந்திக்கும் பிரார்த்திக்கின்றோம்.

சாந்தி!

சாவகச்சேரி வைத்தியசாலை அபிவிருத்திச் சபை.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

**அமரர் கந்தசாமி தர்மகுலசிங்கம்**

(நிர்வாக அதிகாரி, சுகாதார வைத்திய பணிமனை, முல்லைத்தீவு)



தோற்றம்
02-11-1948

மறைவு
12-05-2009

உயிரே உனை நாம் இழந்து ஓராண்டு உருண்டதுவோ?
உணர்வில் நிறைந்தவரே உமை நாம் மறப்போமா?
இறப்பே இல்லை உமக்கு எங்கள் மனமாளிகையில்
கணமும் பிரியாது வாழ்ந்திருப்பீர்.

வராகி அம்மன் வீதி,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்

இந்திரன் சசிகாந்த் (மருமகன்) குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி குலமணி தம்பித்துரை



வண்ணார்பண்ணை வடமேற்கு, ஆனைக்கோட்டை, நாலுகால்மடம், வைரவர் கோவிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி குலமணி தம்பித்துரை நேற்று (30.04.2010) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இளைப்பாறிய பொலிஸ் சார்ஜண்ட் ஜே.எஸ்.தம்பித்துரையின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான பொன்னையா - முத்தாச்சி தம்பதியரின் சிரேஷ்ட புத்திரியும் காலஞ்சென்றவர்களான சுந்தரம் - வைநாஅக்கா தம்பதியரின் மருமகளும் குலச்சந்திரன், தவரஞ்சனி, குலரஞ்சனி, சந்திரகலாரஞ்சனி, பாலரஞ்சனி, தயாளச்சந்திரன், தயாளரஞ்சினி, அற்புதரஞ்சனி, கருணைச்சந்திரன்(ரோகான்) ஆகியோரின் அன்புத் தாயாரும் அங்கிஸ், கதிர்காமநாதன், திருநாவுக்கரசு, லோகேந்திரராஜா, பூமிநாதன், அக்நஸ், மகிந்த, சுரேந்திரன், பிரபா ஆகியோரின் பாசமிகு மாமியும் டில்ஷான், ரிசான், நேரு, சர்வா, சாமினி, ஜானு, அருள்ராஜ், விஜயகலா, உதயகலா, அனந்தபாலன், பாலநாதன், இலங்க நாதன், யோகானந்த், இந்திராபிரியதர்ஷினி, ஆர்னோல்ட், இஷானி, கணீஷா, டில்ருக்ஷீ, ஷாகினியா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் திவ்யன், யதுர்ஷன், டிலானி, மாலிக், அக்ஸயன், டிலக்ஷன், ஜிவிஸன், அபிஷானியா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.05.2010) சனிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நாலுகால் மடம், வைரவர் கோவிலடி,
வண்ணார்பண்ணை வடமேற்கு, ஆனைக்கோட்டை

தகவல்:
குடும்பத்தினர்.

(97622)

## சமுர்த்தி நிவாரணம்

நவாலி, மே 1

மானிப்பாய் ப.நோ. கூ. சங்கங்களில் பெப்ரவரி, மார்ச் மாதங்களுக்குரிய இரு கட்ட சமுர்த்தி நிவாரணம் வழங்கப்பட்டு வருகின்றது. (ஒ- 100)

## சுகாதார வைத்திய அதிகாரியாக ஆளுநரால் நியமனம்

யாழ்ப்பாணம், மே 1

ஊர்காவற்றுறை ஆதார வைத்திய சாலையில் மாவட்ட வைத்திய அதிகாரியாகச் சேவைபுரியும் டாக்டர் அருண புண்ணியமூர்த்தி ஊர்காவற்றுறை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் சுகாதார வைத்திய அதிகாரியாக வடமாகாண ஆளுநரால் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

இவர் மாவட்ட வைத்திய அதிகாரி கடமையுடன் இப் பதவியையும் பதில் கடமையுடன் கடந்த 29 ஆம் திகதி முதல் பொறுப்பேற்றுள்ளார் என ஊர்காவற்றுறை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை தெரிவித்தது. (ஒ- 300)

## தமிழரசுக் கட்சியின் மேதினக் கூட்டம்

யாழ்ப்பாணம், மே 1

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மேதினக் கூட்டம் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு யாழ். மாட்டீன் வீதியிலுள்ள கட்சியின் தலைமை அலுவலகத்தில் நடைபெறும்.

விவசாய சங்கங்களின் சம்மேளனத் தலைவர் செ.இலகுநாதனின் தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில் தொழிற் சங்கங்களின் பிரதிநிதிகளும் தமிழரசுக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களும் கலந்துகொண்டு உரையாற்றுவார்கள்

மாவட்டத்தின் பல பாகங்களில் இருந்தும் வருகை தரும் தொழிலாளர்கள் மத்தியில் கட்சியின் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை. சோ. சேனாதிராசா விசேட உரையாற்றுவார்.

## மற்றொரு தொகுதி சி.டி.எம்.ஏ. தொலைபேசி

யாழ்ப்பாணம், மே 1

யாழ். ரெலிக்கொம் நிறுவனத்தினருக்கு மேலும் ஒரு தொகுதி சி.டி.எம்.ஏ. தொலைபேசிகள் எடுத்துவரப்பட்டுள்ளன.

சுமார் 15 ஆயிரம் வரையிலான தொலைபேசிகள் எடுத்து வரப்பட்டுள்ளதாக ரெலிக்கொம் வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த சி.டி.எம்.ஏ. தொலைபேசிகளை வன்னியில் மீளக்குடியமர்ந்த மக்களுக்கு விநியோகிக்கவும் ஏற்பாடாகி உள்ளது. (ஒ- 224)

## மோ. சைக்கிள் வழித்துணையுடன் சட்டவிரோத மணல் அகழ்வு

கொழும்புத்துறை, மே 1

அரியாலை மணியந்தோட்டப் பகுதிகளில் சட்ட விரோத மணல் அகழ்வு அதிகரித்து வருகிறது.

நள்ளிரவு மற்றும் அதிகாலை கைத்தொலைபேசி தொடர்புகளுடன் மோட்டார் சைக்கிளின் வழித்துணையுடன் இந்தத் திருட்டு மணல் அகழ்வு இடம் பெற்று வருகிறது.

தனியாருக்குச் சொந்தமான காணிகளில் மணல் அகழ்வு இடம்பெறுவதால் அவர்கள் குடிமனைகளை அமைக்கும் போது பல இடையூறுகளை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. இவ்வாறு களவாக எடுக்கப்பட்ட மணல் பெருந்தொகை பணத்துக்கு விற்பனை செய்யப்படுவதாகவும் கூறப்படுகிறது.

அதேவேளை, தற்போது பார்வையிட அனுமதிக்கப்பட்ட மணியந்தோட்டப் பகுதியில் தமது காணிகளைத் துப்புரவு செய்துவிட்டு அடுத்த நாள் சென்று பார்த்தால் மணல் அகழ்தெடுக்கப்பட்டு பெரும் குழிகளையே காணமுடிகின்றது. இந்தக் குழிகளை நிரப்ப நாங்கள் எங்கே மண்ணைத் தேடுவது என்று பாதிக்கப்பட்டவர்கள் வேதனையுடன் கேட்கிறார்கள். (ஒ- 135)

## மரண அறிவித்தல்கள்

### முருகேசு நந்தகுமார்

(முன்னைநாள் கட்டட பரிசோதகரும் பிரபல உதைபந்தாட்ட வீரரும்)

மாதகல் மேற்கைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாக கொண்டவரும் தற்போது கனடாவில் வசித்து வந்தவருமான முருகேசு நந்தகுமார் 28.04.2010 அன்று ஜேர்மனியில் காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

சென். ஆன்ஸ் வீதி,
மானிப்பாய்.

தகவல்:
திருமதி ஜயந்தி சபாரட்ணம் (மருமகள்),

### வல்லிபுரம் செல்லையா



சந்தாதோட்டம், புலோலி வடகிழக்கைச் சேர்ந்த வல்லி புரம் செல்லையா நேற்று(30.04.2010) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் அமரர்களான வல்லிபுரம் - பார்வதி தம்பதியரின் அன்பு மகனும் அக்கினேஸ், வள்ளிப்பிள்ளை, மாணிக்கம் ஆகியோரது சகோதரனும் இலட்சுமிப்பிள்ளையின் அன்புக் கணவரும் பிறேமராணி, பிறேமரஞ்சினி, சசிந்திரா (ஆதார வைத்தியசாலை, பருத்தித்துறை), பிறேமராசா, பிறேமவதனி, பிறேமறாகினி ஆகியோரது அன்புத் தந்தையும் அமரர் ஜேசுதாசன், கிருபாகரசூரியன் (ஜே.பி.), செல்வராசா ஆகியோரின் அருமை மாமனாரும் ஜெபினா, பிறேமினா, லக்கி, சுரேந் திரா, விஜேந்திரா, கபீரன், சர்மினி, பிறேமினி ஆகியோ ரின் அன்புப் பேரனும் அஸ்வின், காஞ்சனி, ஸ்ரேயன் ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.05.2010) சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆனைவிழுந்தான் மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மருதங்கேணி வீதி,
புலோலி வட கிழக்கு, புலோலி.
தொ.பே.: 0774747954

(97631)

தகவல்:
குடும்பத்தினர்.

### திருமதி சரோசா சாந்தலிங்கம்



வலந்தலை, காரைநகரைப் பிறப்பிடமாகவும், பொன்னாலை தெற்கு, சுழிபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சரோசா சாந்தலிங்கம் நேற்று (30.04.2010) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் சாந்தலிங்கம் (கட்டடக் கூலி ஒப்பந்தக்காரர்) அவர்களின் அன்பு மனைவியும், ரவிகுலன் (பாபு), யதுகுலன் (மோகன்), ரகுகுலன் (ஜெயா), சபரீசன் ஆகியோரின் அன்புத் தாயுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.05.2010) சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மூளாய் பித்தனை மயானத் திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பொன்னாலை தெற்கு,
சுழிபுரம்.

(97615)

தகவல்:
குடும்பத்தினர்

### கந்தையா தருமலிங்கம்

(முன்னாள் முகாமையாளர், வலி.கிழக்கு தெ.ப. ப.நோ.கூ.சங்கம், நீர்வேலி)



பழைய கோட்டை வீதி, கோப்பாய் வடக்கு, கோப்பாயைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா தருமலிங்கம் நேற்று (30.04.2010) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - செல்ல முத்து தம்பதிகளின் மகனும், காலஞ்சென்றவர்களான நடராசா - இராசம்மா தம்பதிகளின் மருமக னும், சிவனேஸ்வரியின் அன்புக் கணவரும், யோகேஸ்வரன் (கணக்காளர், நகரசபை, திருகோணமலை), சிவோதரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், கீமாவின் (நிகழ்ச்சித்திட்ட உதவியாளர், வடக்கு மாகாணத் திறைசேரி, திருகோணமலை) அன்பு மாமனாரும், மாதுரியனின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.05.2010) சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, கோப்பாய் கந்தன்காடு இந்துமயானத்தில் பூதவுடல் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பழைய கோட்டை வீதி,
கோப்பாய் வடக்கு,
கோப்பாய்.

(97625)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்,
மருமகன்.




**Al Distributers**

**மொத்த சில்லறை வியாபாரம்**

SHABAS IMPEX - DAM STREET COLOMBO,
2nd CROSS STREET VAVUNIYA,
MAIN STREET MANNAR

இன்றும்(சனி) நாளையும் (ஞாயிறு) மாபெரும் நியாய விற்பனையுடன் ஆரம்பமாகிறது.

சமையலறைப்பொருட்கள், இலத்திரனியல் பொருட்கள், சில்வர் பொருட்கள்,
மேலும் பல வீட்டுப் பாவனைப் பொருட்கள் உத்தரவாதத்துடன்





மொத்த வியாபாரிகளுக்கு விசேட
விலைக்கழிவு

நிறுவனங்களின் யாழ்ப்பாண கிளை
இல,1 பிறவுன் வீதி, நாவலர் வீதி
என்னும் முகவரியில் இன்று முதல்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

TP.No: 021 222 6113


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பிரபாகரனின் தாயார் விவகாரம்: தமிழக அரசின் நிலை என்ன?

## பதிலளிக்குமாறு உயர்நீதிமன்று உத்தரவு

சென்னை, மே 01

பிரபாகரனின் தாயார் பார்வதியம்மாள் திருப்பி அனுப்பப்பட்ட விவகாரத்தில் தமிழக அரசின் தற்போதைய நிலை என்ன என்பதை தெரிவிக்க வேண்டும் - என்று உயர்நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் தாயார் பார்வதியம்மாள் மருத்துவ சிகிச்சைக்காக விமானம் மூலம் சென்னை அழைத்து வரப்பட்டார். அவரை விமான நிலையத்தில் இருந்தபடியே அரசு அதிகாரிகள் மலேஷியாவுக்கு திருப்பி அனுப்பி விட்டனர். இதை எதிர்த்து சென்னை உயர் நீதிமன்றில் மனுத் தாக்கல் செய்யப்பட்டது. நீதிபதிகள் தர்மாராவ், கே.கே.சசிதரன் ஆகியோர் இந்த மனுவை விசாரித்தனர்.

மத்திய அரசு சார்பில் கூடுதல் சொலிசிட்டர் ஜெனரல் ரவீந்திரன் ஆஜராகி, தமிழக அரசு கேட்டுக் கொண்டதன் பேரில் தான் பார்வதியம்மாள் இந்தியாவிற்குள் நுழைவதற்கு தடை விதித்து கடந்த 2003 ஆம் ஆண்டு மத்திய அரசு எச்சரிக்கை சுற்றறிக்கையை அனைத்து இந்தியத் தூதரகங்களுக்கும் அனுப்பியது.

அந்த அடிப்படையிலே சென்னை வந்த பார்வதியம்மாள் திருப்பி அனுப்பப்பட்டு உள்ளார் - என்று தெரிவித்தார்.

அதையடுத்து நீதிபதிகள் கூறுகையில், கடந்த 7 ஆண்டுகளில் சூழ்நிலைகள் மாறியிருக்கின்றன. இதுகுறித்து தமிழக அரசின் தற்போதைய நிலை என்ன என்பதை அரச சட்டத்தரணி தெரிவிக்க வேண்டும் என்றும், விசாரணை தொடர்ந்து நடைபெறும் என்றும் உத்தரவிட்டனர்.

இதற்கிடையே இந்த வழக்கு தொடர்பாக மத்திய அரசு சார்பில் குடியேற்ற அதிகாரி அவி பிரகாஷ் உயர்நீதிமன்றில் நேற்று முன்தினம் தாக்கல் செய்த பதில் மனுவில் மனுதாரருக்கு இந்த மனுவை தாக்கல் செய்ய தகுதி இல்லை. அவர் பார்வதியம்மாளின் உறவினர் இல்லை. அவருக்கு வேறு எந்த விதத்திலும் தொடர்பும் கிடையாது. பார்வதியம்மாளை திருப்பி அனுப்பியமையில் குடியேற்ற அதிகாரிகள் சட்டப்படிதான் நடந்துள்ளனர். பார்வதியம்மாள் இந்தியப் பிரஜை என்பது உறுதி செய்யப்படவில்லை. எந்த வெளிநாட்டவரையும் திருப்பி அனுப்பும் உரிமை குடியேற்ற அதிகாரிகளுக்கு உண்டு.

தமிழக அரசு கேட்டுக் கொண்டதன் பேரிலே கடந்த 2003ஆம் ஆண்டு பார்வதியம்மாளுக்கு எதிராக எச்சரிக்கை சுற்றறிக்கையை அனைத்து இந்தியத் தூதரகங்களுக்கும் மத்திய அரசு அனுப்பியது.

அதன்படி பார்த்தால் கோலாலம்பூரில் உள்ள தூதகரம் பார்வதியம்மாளுக்கு விசா வழங்கியிருக்கக்கூடாது. வெளிநாட்டவராக இருப்பதால் அவருக்கு இந்தியாவில் அடிப்படை உரிமை எதுவும் இல்லை. எனவே, அவரைத் திருப்பி அனுப்பிய விவகாரத்தில் குடியேற்ற அதிகாரிகள் எடுத்த நடவடிக்கையை குறைகூற முடியாது - என்று தெரிவித்தள்ளார்.

# நான் ஆண் அல்லன் என்கிறார் நித்தி; பரிசோதனை நடத்த பொலிஸார் முடிவு!

## வங்கிக்கணக்கில் ரூ. 35 கோடி இருந்தது கண்டுபிடிப்பு



பெங்களூர், மே 01

'நான் ஆண் அல்லன்' என்று நித்தியானந்தா வாக்குமூலம் அளித்ததையடுத்து அவர் ஆணா, பெண்ணா என் பதை அறியும் பாலினச் சோதனையை நடத்த கர்நாடகப் பொலிஸார் தீர்மானித்துள்ளனர்.

கடந்த 21ஆம் திகதி கைதுசெய்யப்பட்ட நித்தியானந்தாவிடம் தொடர்ந்து விசாரணை நடைபெற்று வருகிறது.

விசாரணைக்கு அவர் சரிவர ஒத்துழைக்காமல் இழுத்தடித்து வருகிறார். அவரிடம் இத்தனை நாட்களாக நடந்த விசாரணையில் ரஞ்சிதா இருப்பிடத்தைத் தெரிவித்தமைதான் முக்கியமான திருப்பமாகும்.

இந்நிலையில், 'நான் ஆணே அல்லன்' என்றும், இதனால் நான் யாரையும் கற்பழிக்கவில்லை என்றும் பொலிஸாரிடம் நித்தியானந்தா வாக்குமூலம் தந்தார்.

இதையடுத்து அவர் ஆணா, பெண்ணா என்பதைக் கண்டறியும் பாலினச் சோதனை நடத்த பொலிஸார் முடிவுசெய்துள்ளனர்.

நீதிமன்றத்தில் அவரை ஆஜர்படுத்தி அதற்கான அனுமதியைக் கோரி பொலிஸார் மனுத் தாக்கல் செய்யவுள்ளனராம்.

இதற்கிடையே, இந்த வழக்கில் தனக்கு பிணை கோரி ராம்நகர் மாவட்ட அமர்வு நீதிமன்றத்தல் நித்தியானந்தா தாக்கல் மனு மீது நேற்றுமுன்தினம் விசாரணை நடைபெற்றது.

பொலிஸ் விசாரணைக்கு ஒத்துழைக்க தொடர்ந்து நித்தியானந்தா மறுத்து வருவதால், பிணை வழக்குவதற்கு அரசு தரப்பில் ஆட்சேபம் தெரிவிக்கப்பட்டது. இதைத்தொடர்ந்து நித்தியானந்தாவின் பிணை மனு மீதான விசாரணை மே மாதம் 3ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப் பட்டுள்ளது.

இதே நீதிமன்றத்தில் சந்தனக் கட்டைகளை ஆசிரமத்தில் பதுக்கிய வழக்கில், தம்மை கைதுசெய்யாமல் இருக்கக் கோரி நித்தியானந்தா தாக்கல் செய்த முன்பிணை மனு மீதான விசாரணையும் நடைபெற்றது. பின்னர் அது இன்றைக்கு ஒத்திவைக்கப்பட்டது.

இதற்கிடையே, ஆசிரமத்தின் சொத்து விவரங்கள் தொடர்பான சில தகவல்களை நித்தியானந்தா கூறினார் என கர்நாடக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. மேலும் கர்நாடக பொலிஸின் தணிக்கைப் பிரிவைச் சேர்ந்த 10 பேர் கொண்ட குழு நித்தியானந்தா ஆசிரமத்தின் சொத்து விவரங்கள் தொடர்பாக விசாரணையை நடத்தி வருகிறது.

நித்தியானந்தா ஆசிரமத்தின் பெயரில் 10 வங்கிகளில் ரூபா 35 கோடி பணம் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

மேலும் நித்தியானந்தா ஆசிரமத்தின் கடந்த 8 ஆண்டுகால வரவு செலவுகளையும் தணிக்கை குழு ஆராய்ந்து வருகிறது. இதில் நித்தியானந்தா உல்லாசமாக இருக்க மட்டும் ஒரு ஆண்டுக்கு பல கோடி ரூபா செலவழித்துள்ளமை கண்டுபிடிக்கப் பட்டுள்ளது எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## ரைம்ஸ் பத்திரிகை வெளியிட்டுள்ள

# உலகத் தலைவர்கள் பட்டியலில் மன்மோகன் சிங், டெண்டுல்கர்

வாஷிங்டன், மே 01

'ரைம்ஸ்' பத்திரிகை வெளியிட்டுள்ள சிறந்த உலகத் தலைவர்கள் பட்டியலில் பிரதமர் மன்மோகன் சிங்குக்கு 19 ஆவது இடம் கிடைத்துள்ளது.

இப்பட்டியலில் பிரேஸில் ஜனாதிபதி லூயிஸ் இனேசியோ லூலா டிசில்வாவுக்கு முதலிடம் கிடைத்துள்ளது. அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா நான்காவது இடத்தில் உள்ளார்.

பிரதமர் மன்மோகன் சிங் குறித்து இந்திய அமெரிக்கரும், பெப்சிகோ நிறுவனத்தின் தலைவருமான இந்திரா நூயி எழுதுகையில், 1991 முதல் 96 வரை இந்தியாவின் நிதியமைச்சராக இருந்து இந்திய மக்களுக்கு பெரும் பணியாற்றியவர் மன்மோகன் சிங். தற்போது பிரதமராக உலக வல்லரசு நாடுகளின் தலைவர்களுக்கு இணையான மதிப்பை மன்மோகன் சிங் பெற்றுள்ளார் என்று புகழாரம் சூட்டியுள்ளார்.

சிறந்த 25 ஹீரோக்கள் பட்டியலில் 6 ஆவது இடத்தில் தமிழகத்தின் டாக்டர் பெருமாள்சாமி நம்பெருமாள்சாமி இடம் பெற்றுள்ளார். 70 வயதான இவர் மதுரை அரவிந்த் கண் மருத் துவமனை தலைவர் ஆவார். 1970 ஆம் ஆண்டு முதல் இது வரை 30.6 லட்சம் கண்புரை அறுவைச் சிகிச்சைகளை இவர் மேற்கொண்டு சாதனை படைத்துள்ளார்.



சராசரியாக கால் மணி நேரத்திற்கு ஒரு அறுவைச் சிகிச்சையை இவர் செய்துள்ளார் எனப் புகழாரம் சூட்டியுள்ளது 'ரைம்' இதழ்.

இப்பட்டியலில் டெண்டுல்கருக்கு 13 ஆவது இடம் கிடைத்துள்ளது. இந்தியத் தொழிலதிபர் கிரண் மஜூம்தார் 16 ஆவது இடத்தைப் பெற்றுள்ளார்.

## இந்தியச் செய்திகள்

# யாழ்ப்பாணத்தில் விரைவில் இந்தியன் வங்கிக் கிளை

## அதன் தலைவர் அறிவிப்பு

புதுடில்லி, மே 01

இலங்கையில் யாழ்ப்பாணம் உட்பட 200 கிளைகள் நடப்பு ஆண்டில் திறக்கப்படும் - என்று இந்தியன் வங்கி தலைவர் டி.எம்.பாசின் கூறினார்.

தமிழகத்தை தலைமை இடமாக கொண்டு செயற்பட்டுவரும் இந்தியன் வங்கியின் புதிய தலைவராக டி.எம்.பாசின் சில நாள்களுக்கு முன் பதவி ஏற்றார்.

நேற்றுமுன்தினம் அவர் டில்லியில் செய்தியாளர்களிடம் கூறியவை வருமாறு-

இந்தியன் வங்கி, தென் இந்தியாவில் மிக சிறந்த வங்கியாகச் செயற்பட்டு வருகிறது. இந்த வங்கியை வட இந்தியாவிலும், மேற்கு இந்தியாவிலும் சிறந்த வங்கியாகக் கொண்டு வரத் திட்டமிட்டு இருக்கிறோம்.

இலங்கையில் யாழ்ப்பாணத்தில் விரைவில் இந்தியன் வங்கி கிளை தொடங்கப்படும். நடப்பு ஆண்டில் மட்டும் ஏறத்தாழ 200 கிளைகளை திறக்க இருக்கிறோம். இன்னும் 2 ஆண்டுகளில் வட இந்தியா மற்றும் மேற்கு இந்தியாவில் 400 கிளைகளை தொடங்க திட்டமிட்டிருக்கிறோம்.

ஒகஸ்டு மாதம் 11 ஆம் திகதி இந்தியன் வங்கி தனது 104 ஆவது ஆண்டு நிறுவனர் தினத்தைத் கொண்டாடுகிறது.

அப்போது புதியதாக 104 ஏ.டி.எம். சென்டர்களையும், மற்றும் ஈ - கவர்னர்னிங் அடிப்படையிலான 104 புதிய கிளைகளையும் தொடங்க இருக்கிறோம்.

தமிழக விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட விவ சாயக் கடன்களில் சுமார் 98.50 சதவீத விவசாயிகள் தங்கள் பெற்ற கடன்களைத் திருப்பி அளித்தமையைப் பாராட்டுகிறேன் - என்றார்.

# விசாரணைகளுக்குத் தயார்: ரஞ்சிதாவின் தாயார் தகவல்



சென்னை, மே 01

நித்தியானந்தா விவகாரம் தொடர்பாக சாட்சியளிக்க நடிகை ரஞ்சிதா தயாராக இருக்கிறார் என அவரது தாயார் கர்நாடக சி.ஐ.டி. பொலிஸாரிடம் தொலைபேசி மூலம் தெரிவித்துள்ளார்.

இந்தவிடயம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

நடிகை ரஞ்சிதாவின் தாயார் நேற்று கர்நாடக சி.ஐ.டி. பொலிஸாரிடம் தொடர்பு கொண்டு பேசினார். அப்போது சி.ஐ.டி. பொலிஸாரின் அனைத்துக் கேள்விகளுக்கும் பதில் அளிக்க நடிகை ரஞ்சிதா தயாராக இருக்கிறார் எனவும், ரஞ்சிதாவுக்கு போதுமான பாதுகாப்பு அளிக்கப்படுமா என்றும் கேள்வி எழுப்பியுள்ளார்.

ரஞ்சிதா புறப்படும் இடத்திலிருந்து விசாரணை முடியும் வரை முழு பாதுகாப்பு அளிக்கப்படும் எனவும், ரஞ்சிதா வருகை மற்றும் சாட்சி பற்றிய தகவல்கள் ரகசியமாக வைத்திருக்கப்படும் என்று கர்நாடக சி.ஐ.டி. பொலிஸார் ரஞ்சிதாவின் தாயாருக்கு உத்தரவாதம் அளித்துள்ளனர்.

இதனால் ரஞ்சிதா எப்போது வேண்டுமானாலும் பெங்களூர் அழைத்துவரப் படுவார் என்பது உறுதியானமையால் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

# பீஹாரில் படகு கவிழ்ந்து 8 பேர் பரிதாப உயிரிழப்பு

பீஹார், மே 01

பீஹாரில் படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் அதில் பயணம் செய்த ஐந்து குழந்தைகள் உட்பட எட்டுப்பேர் ஆற்றில் மூழ்கி உயிரிழந்தனர்.

சாஹர்ஸா மாவட்டம் சமரியாகாட் அருகே புதன்கிழமை இரவு.இந்த விபத்து நடந்தது. படகில் மொத்தம் 12 பேர் பயணம் செய்துள்ளனர். அவர்களில் நான்கு பேர் மட்டும் படகு கவிழ்ந்ததும் நீந்தி பாதுகாப்பாக கரைசேர்ந்தனர். மற்ற எட்டு பேரும் ஆற்றில் மூழ்கி இறந்தனர். இவர்களில் ஐந்து குழந்தைகளும் அடங்குவர்.

ஆற்றில் மூழ்கியவர்களில் ஆறு பேரின் உடல்கள் வியாழக்கிழமை காலை மீட்கப் பட்டன. மீதமுள்ள இரண்டு பேரின் உடல்களை தேடும் பணி நடைபெற்று வருகிறது என பொலிஸ் அதிகாரிகள் தெரி வித்தனர்.

பயணிகள் ஆற்றின் மறுகரையில் நடைபெற்ற விருந்து நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டுவிட்டு, தங்கள் வீடுகளுக்கு திரும்பும்போது இந்த விபத்து நடந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரதநிருத்திய கற்றல், கற்பித்தற் செயற்பாடுகளில் ஆளுமையின் சுவடுகள்

இன்றைய பாடசாலைகளில் அழகியற் கல்விப்போதனை ஒரு பிரதான அம்சமாக இருக்கின்றது. அதில் நடனம் பலதரப்பட்ட பாடங்களைப் பயிலும் மாணவர்களுக்கு இன்பமூட்டுவதாக அமைகின்றது. மற்றைய பாடங்களைப் போன்று நடனக் கல்வியும் ஒரு மாணவரின் உடல், உள சமூக பொருளாதார விருத்தியை வளர்ப்பதோடு நயப்புணர்ச்சியையும் விருத்தி செய்ய வழிவகுக்கின்றது. அழகியற் கலையில் நடனம் எல்லோரின் பார்வைக்கும் நல்விருந்து அளிக்கின்றது. நடனக்கலையில் மெய்ஞானமும், விஞ்ஞானமும் இருக்கின்றது. தேவாலயங்களில் ஆலயப்பணிக்கென நியமிக்கப்பட்ட தேவரடியார்கள் இறைவனை மகிழ்விக்க ஆடல், பாடல்களிலும் ஈடுபட்டனர். உடற்கல்வியில் ஈடுபடும் ஒரு மாணவன் நடனத்திறனை வளர்க்கக் கூடிய ஆரோக்கியத்தைப் பெறுகின்றான். ஆகவே அழகியற்கல்வி கற்கும் மாணவர் சிறந்த ஆளுமை உடையவனாகவும், ஆக்கத்திறன் உள்ளவனாகவும் வளர்கிறான்.

எனவே பலதரப்பட்ட பாடங்களுக்கும் நடனம் ஒரு தொடர்புப் பாடமாக இருப்பதனால் நடனம் கற்பிக்கும் முறையில் நடன ஆசிரியர்கள் அதிக கவனம் செலுத்துவது அவசியமாகின்றது.

நான்கு அம்சங்கள் ஒரு நடன வகுப்பைப் பூரணப்படுத்த உதவுகின்றது.



ஆசிரியர், மாணவர், விஷய அடக்கம், கற்பித்தல் முறை ஆகியவைகளே இந் நான்கும் ஆகும். கற்றலும், கற்பித்தலும் செவ்வனே நிகழ இந்நான்கு அம்சங்களும் அவதானிக்கப்பட வேண்டியவையாகின்றன. விஷய அடக்கமும், கற்பிக்கும் முறையும் அனுசரிக்கப்படாவிட்டால் மாணவர்கள் முன்னேற்றம் தடைப்படும். இச் சந்தர்ப்பத்தில் சூழலையும் நாம் மனதில் கவனித்துக் கொள்ளுதல் வேண்டும். இவையாவும் ஒருவருக்கு அமையும்போது ஆசிரியர், மாணவர் தொடர்பு வலுப்பெற வாய்ப்புக் கிடைக்கின்றது. நுண்கலைகள் பாடப்போதனையில் ஆசிரியர், மாணவர் தொடர்பு மிகவும் அவசியமானது.

நடனம் கற்பிக்கும் போது வகுப்பு நல்லதொரு சூழலில் அமைந்திருக்கின்றதா என்பதில் கவனம் செலுத்தப்படவேண்டும். நல்ல காற்றோட்ட வசதியுள்ள, இரைச்சல் அற்ற கட்புல, செவிப்புல சாதனங்களைப் பயன்படுத்தக்கூடிய இடமாக வகுப்பு அமைத்தல் வேண்டும். நடனம் கற்பிக்கும் முறையை அவதானிக்கும்போது இயல்பாக நடனத்தில் நாட்டம் உள்ள மாணவர்கள் சுலபமாகக் கிரகித்துக் கொள்வர் என்பதையும் காணக்கூடியதாக இருக்கின்றது. இருப்பினும் சகல அம்சங்களும் ஒரு மாணவனுக்குச் சாதகமாக அமைந்திருப்பினும் திறன்வளர்த்தல் என்னும் பகுதியை நோக்குமிடத்துக் கற்பித்தல் முறையே பிரதானமாகக் காணப்படுகின்றது. சாஸ்திர அறிவு மேம்பாடு, திறன் வளர்த்தல், நயப்புணர்ச்சி விருத்தி, பரீட்சை ஆகியவற்றை முன்வைத்தே கற்பித்தல் முறை அமைவது சிறப்பு.

நடன ஆசிரியர் முதற்கண் பாடத்திட்டத்திலும் பாடக்குறிப்பிலும் கவனம் செலுத்துதல் வேண்டும். குறிப்பிட்ட பாடவிதானத்தை முன்வைத்துப் பாடத்திட்டத்தை அமைத்து ஒவ்வொரு வகுப்புக்கும் ஏற்ற பாடவேளைக்கமைந்த பாடக்குறிப்பைத் தயார் செய்தல் வேண்டும். உதாரணமாக ஒருவகுப்பை எடுத்துக் கொள்ளும்போது பொதுவான கோட்பாடுகளை ஆனுசரித்துத் தேடல், பதித்தல், பிரயோகித்தல் என்னும் அடிப்படையிலேயே பாடக்குறிப்பைத் தயார் செய்தல் வேண்டும். இம்முறை மிகப் பழமையான தாயினும், கலையைப் பொறுத்த மட்டில் சந்தர்ப்பத்திற்கேற்பவும், மாணவர் திறமைக்கேற்பவும் இது மாறுபடும். சாஸ்திர வகுப்பாயினும் சரி, பயிற்சி வகுப்பாயினும் சரி மாணவர்கள் கிரகித்துக் கொண்டார்களா என்னும் வினாவுக்கு விடை கிடைத்தால் பூரண கற்றலும், கற்பித்தலும் நிகழ்ந்ததாக எடுத்துக்கொள்ளலாம்.

எமது நாட்டுக் கல்வி முறைக்கு அமைய ஆறாம் தரத்திலிருந்து, உயர்தரம், ஆசிரிய கலாசாலை, பல்கலைக்கழகம், கல்வியற்கல்லூரி வரைக்கும் நடனம் ஒரு பிரதான பாடமாக அமைந்திருக்கின்றது. பாடங்கள் அறிவையூட்டும் பாடம் (Aequisition of Knowledge), திறனை வளர்க்கும் பாடம் (Aequisition of Skill), நயப்புணர்ச்சியை வளர்க்கும் பாடம் (Aeslhetie Appreciation) என மூன்று வகைப்படும். நடனத்துறையிலும், நடனக்கல்வியிலும் போதனை நிகழ்த்தும் போது இம் மூன்று பகுதிகளையும் கவனித்தே போதனை நிகழ்த்தவேண்டும்.

அதற்கு அமைவாகவே பாடக்குறிப்பையும் தயார் செய்து கொள்ளல் வேண்டும். பாடக்குறிப்பைத் தயார் செய்யும்போது வகுப்பின் தரம் அறிந்து அதற்கு ஏற்ற முறையில் அமைத்துக்கொள்ளுதல் வேண்டும். நோக்கம் என்ன என்பதைக் குறிப்பிட்டு மாணவர்கள் தரத்தை ஒவ்வோர் வகுப்பிலும் ஆசிரியர் அறிந்து கொள்வதற்கும் ஏதுவாக அவர்கள் முன்னறிவை மீட்டு எடுத்துக்கொண்ட பாட அலகை முழுமையாகவும், பகுதி, பகுதியாகவும் மாணவர்களுக்கு உற்சாகம் ஊடுட்டி நடன வகுப்பில் ஆர்வம் காட்டி ஆசிரியர் எடுத்துக்கொண்ட பகுதியை அறிமுகம் செய்தல் வேண்டும்.

பாடசாலைக் கற்பித்தலானாலும் சரி, பிரத்தியோக நிறுவனக் கற்பித்தலானாலும் சரி, நடனத்தின் அடிப்படை அலகுகளான அ்டவுகளைக் கற்பிக்கும்போது மிகவும் நுணுக்கமாகக் கற்பிக்கவேண்டும். அதாவது தாளம், லயம், அரைமண்டி, பாவம், அங்கசுத்தம், இயல்பான ஆடல்முறைமை, என்பவற்றைக் கருத்தில்கொண்டு கற்பிக்க வேண்டும். அடவுகளைக் கற்பிக்கும் ஆசிரியர்கள் சரியான அரைமண்டி நிலையினையோ, லயத்தினிலோ ஈடுபாடு காட்டத்தவறும் பட்சத்தில் மாணவர்களின் தரம் எதிர்காலத்தில் குறைந்துவிடும். தற்போது நடனம் உயர்கல்வி பட்டப்படிப்பு நெறியாக வளர்ச்சிகண்டுள்ள வேளையில் மாணவரின் தரமும் குறைவுபடாது வளரவேண்டும். எனவே மாணவரின் அடிப்படையில் கவனம் செலுத்தி நல்மாணாக்கரை உருவாக்குவதில் ஈடுபாடு காட்டி வளர்ப்பது நடன ஆசிரியரின் தலையாய கடமையாகும். லயத்தில் கூடிய கவனம் எடுத்தால் தான் தாளஞானம் வளரும். அடவுகள் மூன்று காலங்களிலும் பயிற்சி கொடுக்கும் போது அதன் கைநிலைகள், அதன் அசைவு, உடல்நிலை, திருப்பும் அசைவு, கால்தட்டு, முடிவு (Finishing) இவை சீரான வழியில் இயங்க ஆசிரியரினால் (குரு)

**சாந்தினி சிவநேசன்**

தான் வழிப்படுத்த முடியும். அறிமுறையில் தேர்ச்சி அடைய வேண்டுமானால் பாட நூல்களைத் தேடி எடுத்து அதனை வாசித்து மனனம் செய்து திறன்விருத்தி பெறலாம். அத்துடன் பரீட்சையிலும் நல்ல தேர்ச்சியை அடையலாம். ஆனால் செய்முறையில் தரமான ஆசிரியரது வழிகாட்டலோ, நெறிப்படுத்தலோ இல்லாமல் செய்முறைப் பயிற்சித்திறன் வளர்ச்சி பெறாது இதற்குத் தான் 'குருவில்லா வித்தை பாழ்' தாரமும் குருவும் தலைவி[illegible] வேறு நம்முன்னோர்கள் [illegible] சென்றுள்ளனர். ஆகவே செய்முறைப் பயிற்சியில் அதிக ஈடுபாட்டுடன் ஆசிரியர் கற்பிக்கவேண்டும். அத்துடன் போதிய அளவு இசைஞானத்துடன் ஆசிரியர் இருந்தால் தான் நடனத்தை பாடலுக்கேற்ப அபிநயித்து ஆட வழிப்படுத்தலாம். இதற்குத்தான் பிரபல நாட்டிய மேதை பத்மஸ்ரீ.ஸ்ரீமதி பாலசரஸ்வதி அம்மையார் தனது பரதநாட்டியம் என்ற நூலில்

''தொண்டையால்
பாட்டைத்தாங்கவேண்டும்
**கைகளினால் பொருளைக் காட்டவேண்டும்**
**கண்களால் பாவத்தை விளக்கவேண்டும்,**
**கைகளால் தாளத்தை காண்பிக்கவேண்டும்''**

என்று கூறியுள்ளார். வசனத்திற்கு அபிநயத்தைக் கற்பிக்கக்கூடாது. பாட்டில் (இசை) வரும் இராகபாவம், சங்கதி, கமகம் போன்றவற்றைக் கவனித்து கற்பித்தால் பாடலுடன் ஆடல் இணையும் போது ஆடல் தானாகமிளிரும். இதுவே இயல்பான ஆத்மார்த்த ரீதியிலான ஆடலாக வெளிப்படும். இம்முறை எத்தனையோ மாணவர்களுக்கு விளங்குவதில்லைப் போலும். எனவே தான் கற்ற செயன்முறை அறிவை அப்படியே வரையறையாக ஒப்புவித்து விட்டால் அது தான் நடனம் ஆகாது. அதற்கும் வேண்டிய வளர்ச்சி நிலைகள் இருக்கின்றன. இதை கலாநிதி செல்வி பத்மா சுப்பிரமணியம் அவர்கள் தனது பேட்டி ஒன்றில் குறிப்பிட்டுள்ளார். அதில் முதலாவது அதி உச்சப்பயிற்சி மூலம் பெறப்படுவது. அதாவது சரீரத்தைப் பழக்குவது பிஸிக்கல் லெவல் (Physical Leval) என்பது முதல் வகுப்பு. அடுத்தபடி இன்ட லெக்சுவல் என்கிற அறிவு பூர்வமான இரண்டாம் வகுப்பு. அதற்கு அடுத்தநிலை தான் இமோஷனல் இன்வால்வ்மன்ட் என்கிற உணர்ச்சி பூர்வமான தன்மயமான நிலை. இதையும் தாண்டி எல்லாவற்றிற்கும் மேலாக உள்ளது. ஸ்பிரிசுவல் லெவல் ( Spiritual Leval) என்கிற ஆத்மானுபவமான நிலை, எல்லோருக்குமே திடீர் என்று ஆத்மானுபவம் வந்துவிடும் என்று எதிர்பாக்க முடியாது. இந்த உடலைப் பழக்குவதே அதை மறந்து விட்டு ஆத்மானுபவத்தை அடைய முயற்சி செய்வதற்குத்தான் என்று தனது விரிவுரைகளில் நாட்டிய மேதை கலாநிதி பத்மா சுப்பிரமணியம் குறிப்பிட்டுள்ளது ஈண்டு கவனத்திற்குரியது. (வளரும்)

# யாழ்.இந்து அன்னை

''நமக்கும் பின்வருபவர்கள் மகிழ்ச்சியோடும், பெருமையோடும் நம்செயல்களைத் தங்கள் முன்னோர்களின் காரியமாய்ப் போற்றட்டும்....''
-சுவாமி விவேகானந்தர்.



மேற்படி வாசகங்கள் 1897 ஜனவரி 23இல் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் பிரார்த்தனை மண்டபத்தில் சுவாமி விவேகாந்தரினால் கூறப்பட்டவை. ''விடயமோ மிகப் பெரியது, காலமோ மிகவும் குறைவாகவுள்ளது...'' என ஆரம்பிக்கும் இந் நீண்ட உரை அவரது மேற்குலப் பிரவேசத்தின் பின்பு, மீண்டும் அவரது தாய் நாடு திரும்பும் வழியில் இலங்கைத்தீவில் வசிக்கும் இந்துக்களின் அழைப்பின் பேரில் இங்கு வருகை தந்தபோது ஆற்றப்பட்டது.



சுவாமி விவேகானந்தர் மட்டுமன்றி கவியரசர் தாகூரும், கலாயோகி ஆனந்தக் குமாரசுவாமியும், காந்தியடிகளும் இன்னும் பல பெரியார்களும் மாகான்களும் கூட மேற்படி இந்துக் கல்லூரியின் மண்டபத்தில் பேசியுள்ளனர். இந்த வகையில் யாழ்ப்பாணத்தின் பண்பாட்டு வரலாற்று முதன்மையுடைய செயற்பாடுகளின் சாட்சி கட்டுமானங்களுள் ஒன்றாக மேற்படி மண்டபம் காணப்படுகின்றது.

அடிப்படையில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி என்பது நாவலரியகத்தின்

# வரட்டுக்கௌரவத்தால்...

''அந்தப் பிறின்சிப்பலோட இருந்து என்னால படிக்கேலாது என்று ஒற்றைக் காலில் நின்றாள் மகள்'' சேர்ட்பிக்கரை எடுத்து என்னை வேற பள்ளிக்கூடத்திற்கு மாற்றுங்கோ என்று அடம்பிடித்துக் கொண்டேயிருந்தாள்.

நான் போய் பிறின்சிப்பலோட கதைச்சு 'சேட்டிபிக்கரை' எடுத்துவாறன் என்று கூறிச் சென்றதாய் சொன்னமாதிரி சேட்டிபிக்கரோடு வீடு வந்தாள்.

நினைத்தவாறு அவள் அயல் பாடசாலையொன்றில் உயர்தர அனுமதிக்காகத் தன் தாயாருடன் சென்றிருந்தாள்.

அங்கு அந்தப் பாடசாலையில் அதிபர் புன்முறுவலுடன் வரவேற்றார்.

''என்ர மகள் இங்கதானாம் ஏ.எல்.படிக்கப் போறதாய் அடம்பிடிக்கிறாள்'' என்று அனுமதியினைக்கோரினாள் தாய்.




அந்தப் பாடசாலையின் அதிபர் அனுமதி கோரி நின்ற குறிப்பிட்ட மாணவியின் சாதாரண பெறுபேற்றுச் சான்றி தழை வேண்டிப் பார்த்தார்.

பார்த்துக் கொண்டிருந்த போது சற்று நேரத்தில் 'ஏன் பிள்ளை நல்ல றிசல்ட் எடுத்திருக்கிறீர்' சயன்சுக்கும் இங்கிலிசுக்கும் எந்த றிசல்ட்டும் இல்லாமலிருக்குது.. என்று கேட்டபோது..

அந்த மாணவி மௌனம் காத்தாள். 'ஏன் பிள்ளை அமைதியாய் நிற்கிறாய்' ஏதாவது பதில் சொல்லன் என்று அதிபர் மீண்டும் அன்பாய் வினாவினார்.

அப்போதுதான் அவள் நடந்ததைச் சொன்னாள். 'நான் இரண்டாந்தடவை ஓ.எல் பரீட்சை எடுக்க ஸ்கூலில் அப்பிளிகேஷன் போடேக்க சித்திவீதம் குறைந்து போடும் என்று சயன்சுக்கும், இங்கிலிசுக்கும் பிறின்சிப்பல் போடவிடவில்லை. ஆனால் அந்தப் பாடங்கள் இரண்டையும் எழுதியிருந்தால் 'சி', 'எஸ் 'பெறுபேறாவது எடுத்திருப்பன் என்று அடைத்த குரலில் மெதுவாக கண்ணீர்த் தூறல்களுடன் பதில் சொல்லி முடித்தாள்.

வலிகாமம் கல்வி வலயத்தில் சில பாடசாலைகளில் பல மாணவர்களுக்கு அண்மையில் இந்த அனுபவம் கிடைத்திருக்கிறது. பார்த்தீர்களா? மாணவர்கள் சாதாரணதரப் பரீட்சையில் ஒரு தடவை சித்தியடையத் தவறிவிட்டால் மறுமுறை முயற்சி செய்து சிறந்த பெறுபேற்றினை எடுக்க வேண்டும் என்பதில் பல மாணவர்கள் தீவிரமாக தம்மை அர்ப்பணித்து கல்வி கற்றுக் கொண்டிருக்கையில் -

**கவிநேசன்**

பாடசாலையின் கௌரவம், சித்திவீதம் என்று வரட்டுக் கௌரவம் பேசி மாணவர்களின் எதிர்காலத்தை இருட்டடிக்கச் செய்வதில் பாடசாலைகளின் அதிபர்கள் சிலர் அக்கறையாக உள்ளனர்.

இத்தகைய அதிபர்களின் நடவடிக்கைகளை உயர் அதிகாரிகளும் கண்டும் காணாமலும் விட்டுவிடுகிறார்கள்.

இ[illegible]வது இத்தகைய தவறுகள் நடக்காமல் இருக்க கல்வி அதிகாரிகள் [illegible]ரிக்கையாக பாடசாலை அதிபர்கள் மீது நடவடிக்கை எடுப்பார்களா? வெள்ளம் வரும் முன் அணைகட்டுவது நல்லதல்லவா? ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சென்ரல் இன்வெஸ்மன்ட் பினான்ஸ் நிறுவனத்தின் யாழ்ப்பாணக் கிளை நேற்று ஸ்ரான்லி வீதியில் திறந்து வைக்கப்பட்டபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால், உதவி ஆளுநர் டபிள்யூ.எம்.கருணாரட்ண, சென்ரல் இன்வெஸ்ற்மன்ட் பினான்ஸ் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்றுப் பணிப்பாளர் ஜெயந்த விக்கிரமரட்ண, குழுமத் தலைவர் டிப்தி பெரேரா, பதில் தலைவர் சார்லி பெரேரா உள்ளிட்டோர் மாலை அணிவித்து வரவேற்கப்படுவதை முதல் படத்திலும் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் மங்கள விளக்கேற்றி நிகழ்வினை ஆரம்பித்து வைப்பதனை இரண்டாவது படத்திலும்-

சென்ரல் இன்வெற்மன்ட் பினான்ஸ் நிறுவனத்தின் பதில் தலைவர் சார்லி பெரேரா, குழுமத் தலைவர் டிப்தி பெரேரா ஆகியோர் உரை நிகழ்த்துவதை மூன்றாவது நான்காவது படங்களிலும், பினான்ஸ் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி ஜெயந்த விக்கிரமரட்ண, வாடிக்கையாளரிடமிருந்து பணத்தைப்பெற்றுக் கிளையின் செயற்பாட்டை ஆரம்பித்து வைப்பதை இறுதிப் படத்திலும் காணலாம். (படங்கள்:ரட்ணம்)

# சென்றல் இன்வெஸ்ற்மன்ட் பினான்ஸ் யாழ்.மக்களுக்கு அர்ப்பணிப்புடன் சேவையாற்றும்

## அதன் தலைவர் டிப்தி பெரேரா தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,மே.1

சென்ரல் இன்வெஸ்றமன்ட் பினான்ஸ் நிறுவனம் யாழ். மாவட்டத்தில் தனது கிளையைத் திறந்துள்ளதன் மூலம் யாழ். மக்களுக்கு அர்ப்பணிப்புடன் சேவையாற்றவுள்ளது.

சென்ரல் இன்வெஸ்றமன்ட் பினான்ஸ் குழுமத்தின் தலைவர் டிப்தி பெரேரா இவ்வாறு தெரிவித்தார்.

சென்ரல் இன்வெஸ்றமன்ட் பினான்ஸ் நிறுவனத்தில் யாழ்ப்பாணத்தின் முதலாவது கிளைத் திறப்புவிழா நிகழ்வு நேற்று ஸ்ரான்லி வீதியில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் உரை நிகழ்த்தும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இலங்கை மத்திய வங்கியில் பதிவு செய்யப்பட்டுள்ள நிதி நிறுவனங்களில் எம்முடைய நிறுவனம் மிகப் பழமையானதுகளில் ஒன்றாகும். பதிவு செய்யப்பட்ட எல்லா நிதி நிறுவனங்களும் கடந்த வருடம் மோசமான காலகட்டத்தை எதிர்கொள்ள நேர்ந்தது. இரண்டு பதிவுசெய்யப்படாத நிதி நிறுவனங்கள் வீழ்ச்சியடைந்ததைத் தொடர்ந்து இந்த நிலை ஏற்படலாயிற்று. இதனால் மிகவும் சிறப்பாக முகாமைத்துவம் செய்யப்பட்டு வந்த பதிவு செய்யப்பட்ட நிதி நிறுவனங்கள் மத்தியிலும் பதற்றமான நிலைமை உருவாகியது.

இருந்த போதிலும் சரியான நேரத்தில் மத்திய வங்கியின் தலையீட்டினாலும், எமது பிரதம விருந்தினர் அஜித் நிவார்ட் கப்ராலின் வேறு பல நடவடிக்கைகளாலும் எல்லா நிதி நிறுவனங்களும் இப்பொழுது சகஜ நிலைக்கு வருகின்றன, மீட்சிபெற்று வருகின்றன.

நிதித் தொழில்துறையில் ஏற்படவிருந்த பாரிய தாக்கம் பிரதம விருந்தினரின் காலம் அறிந்த செயற்பாடுகளினால் தவிர்க்கப்பட்டுவிட்டன. அதற்காக அவருக்கு நாங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம் என்றார். (ப-14)

## கண்டிய நடன கற்கை இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம்,மே.1

திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது அழகியல் கல்லூரியினால் அவுஸ்திரேலிய உயர் ஸ்தானியராலயத்தின் அனுசரணையுடன் நடைபெறவுள்ள கண்டிய நடன இலவச சான்றிதழ் கற்கைநெறியின் ஆரம்ப வைபவம் இன்று சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு மன்றத்தின் கலைத்தூது கலையகத்தில் இடம்பெறவுள்ளது.

தென்னிலங்கையிலிருந்து வருகை தரும் ஆசிரியர்களால் நடத்தப்படவுள்ள இக்கற்கைநெறி டிசெம்பர் மாதம் வரை நடைபெறவுள்ளது. (50)




## சித்திர பாட மாணவருக்கு செயலமர்வு

யாழ்ப்பாணம்,மே.1

யாழ்.பல்கலைக்கழக கலைப்பீடத்தின் நுண்கலைத் துறையின் ஏற்பாட்டில் ஜி.சீ.ஈ.உயர்தரத்தில் சித்தரபாடநெறியைப் பயிலும் மாணவர்களுக்கான செயலமர்வு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணிவரை கலைப்பீடக் கட்டடத் தொகுதியில் நடைபெறவுள்ளது.

இந்தக் கருத்தரங்கு நவீன ஓவிய இயக்கப் போக்குத் தொடர்பான பகுதியை (ஜி.சீ.ஈ உயர்தர சித்திரபாடத் திட்டப்படி ஐரோப்பிய ஓவியக் கலைஞர்கள், கலைப் படைப்புக்கள்) முன்னிறுத்தும் காட்சி விளக்க நிலைக் கருத்தரங்காக அமையவுள்ளது.எனவே இந்தக் கருத்தரங்கில் யாழ். மாவட்டப் பாடசாலைகளில் ஜி.சீ.ஈ. உயர்தரத்தில் சித்திர பாடநெறியைப் பயிலும் மாணவர்கள், ஆசிரியர்கள் ஆகியோரைக் கலந்துகொள்ளுமாறு நுண்கலைத்துறைத் தலைவர் கலாநிதி ஏ.என். கிருஷ்ணவேணி கேட்டுள்ளார். (50-201)

# அறிக்கைகள் விட்டுக் கொண்டிருப்பதைத் தவிர்த்து நெடுந்தீவுக்கான போக்குவரத்தைச் சீர் செய்யுங்கள்

## உரிய தரப்புகளிடம் பொதுமக்கள் கோரிக்கை

நெடுந்தீவு,மே.1

வீதி அபிவிருத்தி அதிகாரசபை புதிய படகுகளில் வரும். குமுதினி அடுத்த வாரம் திருத்தப்படும் என அறிக்கைகள் விட்டுக் கொண்டிருப்பதைத் தவிர்த்து செயலில் இறங்க வேண்டும் என நெடுந்தீவு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பாக அவர்கள் மேலும் தெரிவித்தவை வருமாறு,

நெடுந்தீவுச் சேவைக்கென புதிய படகு வரவுள்ளதாக கடந்த 4ஆண்டுகளாகக் கூறப்பட்டு வந்தது. எனினும் படகு கட்டுவதற்கான கேள்விப் பத்திரம் சமீபத்தில்தான் கோரப்பட்டதாகச் செய்திகள் வெளியாகியிருந்தன.

குமுதினிப்படகின் சேவை கடந்த பெப்ரவரி மாதம் முதல் ஸ்தம்பிதமடைந்துள்ளது. அன்று முதல் படகு திருத்த வேலைகளுக்கென நெடுந்தீவிலும், குறிகாட்டுவானிலும் இன்றுவரை காத்து நிற்கின்றது. இந்த நிலையில் நெடுந்தீவு மக்களின் பயண அவலங்கள் குறித்து அனைவரும் சிந்திக்க வேண்டும். அதனை விடுத்து இந்தவாரம் படகுத் திருத்த வேலைகள் ஆரம்பிக்கும். அடுத்தமாதம் புதிய படகு வரும் என்று வெறும் அறிக்கைகளை விடுப்பதன் மூலம் நெடுந்தீவு மக்களைத் திருப்திப்படுத்த முனைவது மக்கள் ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (50-111)

# தென்மேல் பருவப் பெயர்ச்சிக் காலநிலை இம்மாதம் நடுப்பகுதியில் ஆரம்பிக்கும் சாத்தியம்

## வானிலை அவதான நிலையம் தகவல்

யாழ்ப்பாணம்,மே.1

தென்மேல் பருவப்பெயர்ச்சிக் காற்றுக்காலநிலை, இந்தமாதம் நடுப்பகுதியில் ஆரம்பிப்பதற்குரிய சாத்தியக் கூறுகள் தென்படுவதாக வளிமண்டலவியல் ஆராய்ச்சித் திணைக்களத்தின் யாழ்.அலுவலகப் பொறுப்பதிகாரி வே.புஸ்பநாதன் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக மேலும் அவர் தெரிவித்த விடயங்கள் வருமாறு:-

இந்த மாதம் முதல் செம்ரெம்பர் வரையான காலப்பகுதியில் தென்மேல் பருவப் பெயர்ச்சிக் காற்று வீசும் காலப்பகுதியாகும். இந்தக் காலப் பகுதியில் மணிக்கு 15 முதல் 20 கிலோ மீற்றர் வேகத்தில் காற்று பலமாக வீசும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தென்மேல் பருவப் பெயர்ச்சிக் காற்று வீசும்போது புழுதிப் புயல் ஏற்படுவதற்கும், வாழை மரங்கள் மற்றும் கிளைகளற்ற உயரமான மரங்கள் முறிந்து விழுவதற்கும் சந்தர்ப்பங்கள் உள்ளன.பாரிய மரங்களின் கிளைகளும் முறிந்து விழலாம். எனவே பொதுமக்கள் அவதானமாக இருக்க வேண்டும்.

இதேவேளை இன்றிலிருந்து மூன்று, நான்கு தினங்களுக்குள் யாழ்ப்பாணத்தில் இடியுடன் கூடிய மழைபெய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த 28 ஆம் திகதி 30.5 மில்லி மீற்றர் மழை பதிவாகியுள்ளது.

தென்மேல் பருவப் பெயர்ச்சி காற்றுக் கால நிலை ஆரம்பிக்கும்போது தற்போது நிலவும் கடும் வெப்பநிலை குறைவடையும். அதன்போது 28 முதல் 30 பாகை செல்சியஸ் ஆக வெப்பகால நிலை இருக்கும்- என்றார். (50-14)

# சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் பதவிக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம்,மே.1

யாழ்.கல்வி வலயக் கல்வி அலுவலகத்தில் ஆரம்பக்கல்வி, விஞ்ஞானம், சுகாதாரமும் உடற்கல்வியும், வழிகாட்டலும் ஆலோசனையும், இரண்டாம் மொழி (சிங்களம்) ஆகிய பாடங்களுக்கு நிலவும் சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாக யாழ்.கல்வி வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி.அ.வேதநாயகம் அறிவித்துள்ளார்.

மேற்படி பதவிகளுக்கு வீண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் இலங்கை ஆசிரிய சேவை வகுப்பு 1, அல்லது 2-1 ஐச் சேர்ந்த பின்வரும் தகைமைகளைக் கொண்ட யாழ்.வலயத்திற்குட்பட்ட ஆசிரியர்களாக இருத்தல் வேண்டும்.

அதாவது குறிப்பிட்ட பாடத்தினை அல்லது அந்தப் பாடம் சார்ந்த ஏற்புடைய பாடத்துறையை ஒரு பாடமாகக் கொண்டு பட்டம் பெற்றிருப்பதோடு விண்ணப்பிக்கும் பாடங்களில் விண்ணப்பதாரி 7 வருடங்களுக்குக் குறையாத கற்பித்தல் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும். அத்துடன் பட்டப்பின் கல்வி டிப்ளோமா சான்றிதழ் பெற்றிருப்பவராக இருத்தல் வேண்டும்.

அல்லது விண்ணப்பிக்கும் பாடத்துறையில் அரசினர் ஆசிரிய கலாசாலையில் அல்லது தேசிய கல்வி நிறுவகத்தில் ஆசிரிய பயிற்சி பெற்றிருப்பதோடு விண்ணப்ப முடிவுத் திகதியன்று குறித்த பாடத்தில் பயிற்றப்பட்ட ஆசிரியராக 10வருடங்களுக்குக் குறையாது தரம் 6 தொடக்கம் தரம் 11வரையான கற்பித்தல் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

விண்ணப்பிக்க விரும்புபவர்கள் மாதிரி விண்ணப்பப் படிவங்களை வலயக் கல்வி அலுவலகத்தில் பெற்று இம்மாதம் 3 ஆம் திகதிக்கு முன்பாக உரிய முறைப்படி யாழ். வலயக் கல்வி அலுவலகத்துக்கு அனுப்பி வைக்குமாறும், குறித்த திகதிக்குப் பின்னர் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது எனவும் யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் மேலும் தெரிவித்துள்ளார். (50-16)

## குடாநாட்டில் தொடரும்

# கடத்தல்,கப்பம் கோரல் போன்றவற்றை கண்டித்து நாளை நகரில் பேரணி

யாழ்ப்பாணம்,மே.1

குடாநாட்டில் சிறுவர்கள் கடத்தப்படுதல், யுவதிகள் கடத்தப்பட்டு பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தல், கப்பம் கோரி கடத்தல் ஆகிய சம்பவங்களைக் கண்டித்து நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு கண்டனப் பேரணி நடத்தப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

'மக்கள் சக்தி' என்ற அமைப்பின் பேரில் இந்தப் பேரணி நடத்தப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அன்று காலை 9 மணிக்கு கோட்டை முனியப்பர் கோவில் முன்பாக ஆரம்பமாகும் இந்தப் பேரணி மனித உரிமைகள் ஆணைக்குழு, யாழ்.அலுவலகம், யாழ். செயலகம் ஆகியவற்றுக்குச் சென்று யு.என்.எச்.சி.ஆர். அலுவலகத்தில் முடிவடையும் என்று மக்கள் சக்தி சார்பில் மு.குமாரவேல் அறிவித்துள்ளார். (ஒ-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




முல்லைத்தீவு ஐயன்குளம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் இல்ல மெய்வன்மைப்போட்டி அண்மையில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட துணுக்காய் கல்வி வலய கல்விப் பணிப்பாளர் த.மோகநாதன் மங்கள விளக்கேற்றுவதையும் அருகில் வித்தியாலய அதிபர் மற்றும் துணுக்காய் கோட்டக் கல்வி அதிகாரி ஆ.சுந்தரமூர்த்தி, கிராம அலுவலர் க.ஜெயக்குமார் ஆகியோர் நிற்பதையும்-போட்டியில் வெற்றிபெற்ற வீரர்களுக்கு வெற்றி மேடையில் வைத்து சான்றிதழ் வழங்கிக் கௌரவிப்பதையும், மாணவர்கள் உடற்பயிற்சி காண்காட்சியையும் படங்களில் காணலாம். (11)


## 10ஆம் ஆண்டு நினைவு தினம்

மலர்வு 16 . 05 . 1950



உதிர்வு 21 . 04 . 2000

**திருமதி தர்மராஜா சண்முகமலர்**

திதி: திருதியை (01.05.2010)

அம்மா நீங்கள் இன்றும் இருந்திருக்கலாம்....
உங்களுக்கு எங்கள் கடமையைச் செய்யும்
நினைவுகளில் எங்கள் கவலைகள்
குறைந்து போக பத்து ஆண்டுகள் ஓடிப்போயின
கைபொருத்து வணங்க எண்ணுகையில் கண்ணங்கள்
கண்ணீரில் நனைகிறதே அம்மா நீங்கள் இன்றும்
எங்களுடன் இருந்திருக்கலாம்!

இணுவில் மேற்கு, சுன்னாகம். குடும்பத்தினர்.

(சி/567096)


## மகாபாரதம் அகலத் திரையில்

யாழ்ப்பாணம், மே1

யாழ்.திருமறைக் கலாமன்றத்தின் திரைப்படப் பிரிவின் ஏற்பாட்டில் மகாபாரதம் இதிகாச காவியம் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் மன்றத்தின் கலைத் தூது கலையகத்தில் அகலத் திரையில் திரையிடப்படவுள்ளது.

இச் செயற்பாட்டிற்கமைவாக முதலாவது காட்சி நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு காண்பிக்கப்படவுள்ளது. இதன் போது 'மகாபாரதம்' முதலாம், இரண்டாம் பாகங்கள் திரையிடப்படவுள்ளன.

ஆர்வமுள்ளவர்கள் அனுமதியைப் பெற்று இக்காட்சியைப் பார்வையிடலாம் என்று திருமறைக்கலாமன்ற திரைப்படப் பிரிவினர் அறிவித்துள்ளார்கள். (50)


## நெஞ்சகலா நினைவஞ்சலி

பதினாறாம் ஆண்டு முதலாம் ஆண்டு

தோற்றம் 12 . 12 . 1925
மறைவு 12 . 08 . 1994



தோற்றம் 07 . 12 . 1932
மறைவு 12 . 05 . 2009

**பொன்னம்பலம் நடராசா** **திருமதி சற்குணம் நடராசா**

திதி: 01.05.2010

எல்லோர்க்கும் இனியவர்களாக அவனியிலே வந்துதித்த தெய்வங்களே!
இளம் பொழுதில் எம்மைவிட்டுப் பிரிந்ததேனோ
அன்புடனே எம்மை அரவணைத்து அவனியிலே வாழ வைத்தீர்கள்
தாங்கள் எம்மை விட்டுப் பிரிந்தாலும்
என்றும் எம் நெஞ்சங்களில் நீங்காமல் நிலைத்துள்ளீர்கள்.

'அறிவகம்',
பூதவராயர் வீதி,
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம்.
021 2226808

என்றும் தங்கள் நினைவுகளுடன்:
பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(97750)



# 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்: 19.04.1932
மறைவு: 01.04.2010



அமரர்
## சின்னத்தம்பி பாலசிங்கம்

நெடுந்தீவு
(ஓய்வுபெற்ற பரிசாரகர், யாழ்.போதனா வைத்தியசாலை)



'நல்லாண்மை என்பது ஒருவற்குத் தான் பிறந்த
இல்லாண்மை ஆக்கிக்கொளல்'

என்ற வள்ளுவன் கூற்றை மெய்ப்பித்து
தனக்கென வாழாப் பிறர்க்குரியாளனாய்
உற்றார், உறவினர், ஊரவர் அன்பனாய்
சமயத் தொண்டனாய் சாந்தசொரூபியாய்
வாழ்வாங்கு வாழ்ந்த அன்புத் தந்தையே
எம் இல்லத்துப் பேரொளியே
நீங்கள் மறைந்தாலும் - உங்கள்
நினைவுகள் என்றுமே மறையாது
நீங்கள் பாடியேற்றும் பரமன் பாதத்தில்
உங்கள் ஆத்மா அமைதிகொள்ள பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்,
உடன்பிறப்புகள், சுற்றத்தவர்கள்.

36/11, பீ.ஏ.தம்பி ஒழுங்கை,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

(97386)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வுகாண அரசியல் தரப்புக்கள் கைகோர்க்க வேண்டும்

## அரியநேந்திரன் எம்.பி. கோரிக்கை

மட்டக்களப்பு,மே.1

''நாடாளுமன்றத்தில் சபாநாயகரைத் தெரிவு செய்வதிலும் ஆளும் கட்சியும் எதிர்க்கட்சியும் கை கோர்த்து செயற்பட்டது போல் தமிழர் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வைப் பெற்றுக்கொடுக்க இரு சாராரும் இதய சுத்தியுடன் இணைய வேண்டும்.''

-இவ்வாறு மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பா. அரியநேந்திரன் தெரிவித்தார்.

போரதீவு உதயதாரகை விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற விளையாட்டு விழா நிகழ்வின்போது பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

தொடர்ந்தும் அவர் அங்கு உரையாற்றுகையில் மேலும் கூறியவை வருமாறு:-

தமிழர்கள் மீதான அடக்கு முறை இன்னும் முடிந்தபாடில்லை 30 வருட யுத்த முடிவின் பின்னர் 7ஆவது நாடாளுமன்ற அமர்வு நடைபெறுவது சந்தோசமாகவுள்ளது என புதிய பிரதமர் தமது உரையில் தெரிவித்தார். இது உண்மையெனில் அவசரகாலச் சட்டம் இன்னும் ஏன் நீடிக்கப்பட வேண்டும் என்பது புதிராகவே உள்ளது இதனை நீக்க அரசு உடனடியாக, செயற்பட வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும் இவற்றைச் செய்யாமல் போலி வார்த்தை ஜாலங்களை வெளியிடுவதில் எவ்வித பிரயோசனமும் இல்லை.

நடந்து முடிந்த தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் திட்டமிட்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைத் தோற்கடிக்க அரசு பல சுயேச்சைக் குழுக்களைக் களமிறக்கியது. ஆயினும் தமிழ் மக்கள் இத்திட்டத்திற்கு தகுந்த பாடம் புகட்டியுள்ளனர். இலங்கையில் மூன்றாவது பெரிய கட்சியாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளது என்பதை அரசு விளக்கிக்கொள்ள வேண்டும்.

எங்கிருந்து கொண்டு யார் என்ன சொன்னாலும் தமிழ் மக்கள் அவர்களின் பிரதிநிதிகளாகவுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைத் தவிர வேறு எந்தக் கட்சிக்கும் வாக்களிக்க மாட்டார்கள். காலப் போக்கில் இந்நிலை முழுமைப் படுத்தப்பட்டதாக மாறும் ஏமாற்று வார்த்தைகளால் மயங்கியுள்ள சிறு பகுதியினரும் எம்முடன் கைகோர்க்கும் காலம் வெகு தொலைவில் இல்லை -என்றார். (எ)

# காரைதீவு கோட்டக் கல்வி பணிப்பாளர் வெற்றிடத்தை நிரப்புமாறு கோரிக்கை

அம்பாறை, மே. 1

காரைதீவு கோட்டக்கல்விப் பணிப்பாளர் பதவி வெற்றிடத்தை உடனடியாக நிரப்புமாறு காரைதீவு கல்விச்சமூகம் கோரிக்கை விடுத்துள்ளது.

கல்முனை வலயத்திலுள்ள 5 கோட்டங்களில் காரைதீவுக் கோட்டமும் ஒன்றாகும். 1993 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட இக்கல் விக் கோட்டத்தின் கோட்டக் கல்விப் பணிப்பாளராகவிருந்த பி. சிவப்பிரகாசம் இலங்கை கல்வி நிர்வாக சேவைக்கு, உள்ளீர்க்கப்பட்டு பிரதிக் கல்விப் பணிப்பாளராகவும் பதவியுயர்வு பெற்றதனால் இவ்வெற்றிடம் ஏற்பட்டது.

கல்முனை வலய பிரதிக்கல்விப் பணிப் பணிப்பாளராக பதவியுயர்வு பெற்றுச்சென்ற பி. சிவப்பிரகாசம் கடந்த மூன்று மாதகாலமாக காரைதீவுக் கோட்டக்கல்விப் பணிப்பாளராகப் பதில் கடமையாற்றி வந்தார்.

இருபதவிகளையும் ஒருவர் கவனிப்பதால் ஏற்பட்டுள்ள நடைமுறைசிக்கல்களைக் கருத்திற்கொண்டு வெற்றிடத்தை நிரப்புமாறு கோரப்படுகிறது.

காரைதீவுக் கோட்டத்தின் முதல் கோட்டக் கல்விப்பணிப்பாளராக இலங்கை கல்வி நிர்வாக சேவையைச் சேர்ந்த திருமதி சுலோஜனா ஆனந்தராஜா கடமையாற்றியிருந்தார். அவர் பதவியுயர்வை பெற்று இன்று திருகோணமலை வலயக்கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றி வருகிறார்.

காரைதீவுக் கோட்டக்கல்விப் பணிப்பாளராக இதுவரை இலங்கை கல்வி நிர்வாக சேவையைச் சேர்ந்தோரும், இலங்கை அதிபர் சேவை தரம் ஐ ஐச் சேர்ந்தோரும் கடமையாற்றி வந்தனர்.

இதுவரை திருமதி எஸ்.கே. ஆனந்தராஜா, திருமதி சத்தியதேவா, வி. ஜெயநாதன், வி. ஜெயகுமார், பி. சிவப்பிரகாசம் ஆகியோர் கடமையாற்றி வந்துள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த 3 மாதங்களாக வெற்றிடமாகவுள்ள இப்பதவி வெற்றிடத்தை உடனடியாக நிரப்ப காரைதீவுப் பாடசாலைகளின் கல்வி அபிவிருத்தினர் சீர்செய்யுமாறு கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளரை கல்விச்சமூகம் கேட்டுக்கொண்டுள்ளது. (எ)

# அட்டாளைச்சேனைப் பகுதியில் மீனவருக்கு வாடிகள் அமைப்பு

மட்டக்களப்பு, மே. 1

அட்டாளச்சேனை கரையோரப் பிரதேசத்தில் வாழ்ந்துவரும் மீனவர்களின் நன்மை கருதி மீனவவாடி அமைக்கும் திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

மீனவக் குடும்பங்களின் வாழ்வாதார மேம்பாட்டை கருத்திற்கொண்டு கிழக்கு மாகாண வீதி அபிவருத்தி நீர்ப்பாசனம் வீடமைப்பு நிர்மாணமும், கிராமிய மின்சாரம் மற்றும் நீர்வழங்கல் அமைச்சர் எம். எஸ். உதுமாவெப்பை இதற்கான நடவடிக்கையை மேற்கொண்டுள்ளார்.

அண்மையில் அவர் மீன்பிடி துறைகளுக்கு நேரடியாகச் சென்று மீனவர்களின் குறைகளைக் கேட்டறிந்தார். இதன் பிரகாரம் அட்டாளைச்சேனையில் உள்ள நான்கு மீன்பிடித் துறைகளையும் சேர்ந்த தெரிவு செய்யப்பட்ட 102 மீனவர்களுக்கு மீனவ வாடிகளை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ஒருவாடியை அமைப்பதற்கு 60ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

காலப்போக்கில் ஏனைய மீனவர்களுக்கு மீனவ வாடி அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் அவர் தெரிவித்தார். ஆழிப்பேரலை அனர்த்தத்தின் போது பாதிக்கப்பட்டு இது வரைக்கும் எதுவும் பெறாத மீனவர் களுக்கு இவ்மீனவ வாடி அமைப்புக்கான நிதி வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ)

# கட்சி மாற வேண்டிய எந்த அவசியமும் தமக்கு இல்லை என்கிறார் பியசேன எம்.பி.

அம்பாறை, மே.1

''தந்தை செல்வா, அண்ணன் அமிர்தலிங்கம் முதலான தமிழ் பெருந்தலைவர்கள் கட்டியெழுப்பிய கட்சிக்குத் துரோகமிழைத்து கட்சிமாற வேண்டிய எந்த அவசியமோ, தேவையோ எனக்கில்லை.''

-இவ்வாறு அக்கரைப்பற்றை அடுத்துள்ள கோளாவில் கிராமத்தில் தனக்கு அளிக் கப்பட்ட வரவேற்பு விழாவில் கலந்து கொண்டு பேசிய தமிழரசுக் கட்சியின் அம்பாறை மாவட்ட எம்.பி. பொ. பியசேன தெரிவித்தார்.

கோளாவில் பொதுமக்களால் புதிய எம்.பி. பியசேனவுக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது. கோளாவில் விநாயகர் வித்தியாலயத்தில், முன்னாள் பொது முகாமையாளர் ரி. சபாபதிப்பிள்ளை தலைமையில் கடந்த திங்களன்று இந்த நிகழ்வு நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:-

யுத்தத்தில் சிக்கி அகதிமுகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளவர்களை மீட்டெடுத்து மீளக்குடியேற்றும் முக்கிய போராட்டத்தில் எமது கட்சி முனைப்போடு செயற்பட்டு வருகிறது.

எமது கட்சிக்கென பாரம்பரியம் உண்டு. அற்ப சொற்ப சலுகைகளுக்காக நாம் சோரம் போக முடியாது. துரோகிப்பட்டம் கேட்க நான் தயாரில்லை. அண்ணன் எம்.ஜி.ஆர் தான் எனது மனசீகத் தலைவர். அவர் காட்டிய வழியிலேயே சேவையாற்றுவேன்.

தமிழ் மக்கள் நலன் தொடர்பாக நல்ல முடிவை எடுக்க வேண்டிய பொறுப்பு எமது தலைவர்களிடமுள்ளது. நல்ல அனுபவமுள்ள திறமையான எமது தமிழ் தலைவர்கள் உரிய நேரத்தில் உரிய தீர்மானங்களை எடுப்பார்கள்.

நான் நாடாளுமன்ற உறுப்பினராகிய பின்பு செல்லுமிடமெல்லாம் எனக்கு மனப்பூர்வமான வரவேற்பு அளிக்கப்படுகிறது. ஆனால் என்னுடைய சேவைக்கே வாக்களித்தனர் என்றும் அந்தச் சேவைகளைத் தொடர்ந்து முன்னெடுக்க வேண்டும் எனவும் மக்கள் வற்புறுத்துகின்றனர். இதற்கு அடிப்படைக்காரணம் சிலர் இங்கு திட்டமிட்டு நான் கட்சிமாறுவேன் என்ற வதந்தியைப் பரப்பியுள்ளமையே ஆகும் நான் எப்போதும் எனது கட்சிக்கும், தலைமைக்கும் விசுவாசமாக நடந்து கொள்வேன். ஆனால் சேவை என்பது என்னோடு ஊறிப் பிறந்ததொன்று. எனவே மேலும் சேவை செய்யவே ஆசைப்படுகிறேன்.

இங்கு எனக்கு வழங்கப்பட்ட பெருவரவேற்புக்கு மனமார்ந்த நன்றியைக் கூறுகிறேன் கூப்பிட்ட குரலுக்கு பியசேன நிற்பான் அது மட்டும் உறுதி -என்றார். (எ)




# மலேரியாவை முற்றாக தடுப்பது குறித்து திருமலையில் விழிப்புணர்வுப் பேரணி

மூதூர்,மே 1

உலக மலேரியா தினதை முன்னிட்டு 'மலேரியாவை இலங்கையிலிருந்து முற்றாக அகற்றல்' என்ற தொனிப் பொருளில் தேசிய விழிப்புணர்வும், நடைபவனியும் பொது மக்களுக்கு அறிவூட்டும் நிகழ்வும் கடந்த ஞாயிற்றுக்கிழமை திருகோணமலையில் இடம்பெற்றன.

திருகோணமலை உப்புவெளி சர்வோதய நிலையத்தில் இருந்து ஆரம்பமான இந்த நடைபவனியை தேசிய மலேரியா தடுப்பியக்க திட்டப்பணிப்பாளர் மருத்துவ கலாநிதி ஆர். அபேயசிங்க, திருகோணமலை பிராந்திய வைத்திய அதிகாரியும், பிராந்தியத்திற்கான மலேரியா தடுப்பியக்க அதிகாரியுமான வைத்திய கலாநிதி து. தவக்கொடிராஜா மற்றும் 'ரெடா' அரசசார்பற்ற நிறுவனத்தேசிய பணிப்பாளர் பந்துல விஜயசிங்க, திருகோணமலை மாவட்ட சர்வோதய இயக்க இணைப்பாளர் வி. ஜீவராஜ் ஆகியோர் ஆரம்பித்து வைத்தனர்.

பெருந்தொகையான தொண்டர்கள், சகிதம் உப்பு வெளியில் இருந்து திருகோணமலை கடற்படைத் தள வீதியில் உள்ள மக்கெய்சர் மைதானம்வரை பவணி இடம்பெற்றது இதில் பல தொண்டர் அமைப்புக்களும் பொதுமக்களும் பங்கு பற்றினர்.

இலங்கையிலிருந்து 2012ஆம் ஆண்டுக்குள் முழுமையாக மலேரியா நோயை அகற்று தல் என்ற தேசிய செயற்றிட்டம் பற்றி பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஊட்டும் முகமாகவே இச்செயற்றிட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டது எனச் செயற்றிட்டப் பணிப்பாளர் கூறினார். (எ)

# முன்னாள் பொலிஸ் அதிகாரியின் பெயரில் பவுண்டேஷன் ஆரம்பம்

மட்டக்களப்பு, மே.1

மட்டக்களப்பு பொலிஸ் பயிற்சிக் கல்லூரியின் பொறுப்பாளராக இருந்து கடந்த வருடம் படு கொலை செய்யப்பட்ட மருதமுனையைச் சேர்ந்த சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் டாக்டர். எச்.எல். ஜமால்தீன் பெயரில் பவுண்டேசன் ஒன்று மருத முனையில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

வங்கி உத்தியோகத்தர் எச்.எஸ். நஜீமுத் தீனைத் தலைவராகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்த அமைப்பில் புத்திஜீவிகள், சமூக ஆர்வலர்கள் எனப் பல தரப்பினரும் அங்கம் வகிக்கின்றனர். இந்த அமைப்பு மருதமுனையில் கல்வி மற்றும் சமூகவியல் சார்ந்த விடயங்களில் எதிர் காலங்களில் ஈடுபடவுள்ளது என அமைப்பின் செயலாளர் ஆசிரியர் ஏ.எச். நஸ்றுதீன் தெரிவித்தார்.

தலைவர், செயலாளர், நிர்வாக உறுப்பினர்கள், பணிப்பாளர் சபை, போஷகர்கள் அடங்கலாக 36பேர் இவ் அமைப்பில் இடம்பெற்றுள்ளனர். (எ)

# நிகழ்ச்சிதிட்ட உதவியாளர்களுக்கான பரீட்சை விண்ணப்ப காலம் நீடிப்பு

மட்டக்களப்பு, மே 1

பட்டதாரி வேலைத் திட்டத்தின் கீழ் கிழக்கு மாகாண சேவைக்கு நியமிக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்ட உதவியாளர்கள் வினைத் திறமைகாண் தடைப்பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்காக வழங்கப்பட்ட கால அவகாசம் எதிர்வரும் 10ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது.

கடந்த மாதம் 12ஆம் திகதிக்கு முன்பதாக இந்தப் பரீட்சைக்கு விண்ணப்பிக்க வேண்டும் என்று கிழக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக் குழுவினால் ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தது.

எனினும் அனேகமான நிகழ்ச்சித் திட்ட உதவியாளர்களின் கோரிக்கைக்கு அமைவாக இதற்கான கால அவகாசம் எதிர் வரும் 10ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது என மாகாண பொதுச்சேவை ஆணைக் குழுவின் செயலாளர் கே. உடகே அறிவித்துள்ளார்.

வேலையற்ற பட்டதாரிகளுக்கு அரச சேவையின் நிரந்தர நியமனம் வழங்கும் திட்டத்தின் கீழ் கிழக்கு மாகாண அரச வேலையில் இணைத்துக் கொள்ளப்பட்ட பட்டதாரி உத்தியோகத்தர்களுக்கான 1ஆம் மற்றும் 2ஆம் வினைத் திறமைகாண் தடைப் பரீட்சைகள் நடத்தப்படவுள்ளன.

திருகோணமலை, மட்டக்களப்பு, கல்முனை மற்றும் அம்பாறை ஆகிய நகரங்களின் சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய மொழிகளில் இந்தப் பரீட்சையை நடத்துவதற்கு கிழக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு நடவடிக்கை எடுத்துள்ளது. (எ)

# கல்முனை ஆதார வைத்தியசாலைக்கு புதிய சத்திரசிகிச்சை நிபுணர் நியமனம்

மட்டக்களப்பு, மே.1

கல்முனை ஆதார வைத்தியசாலைக்கு புதிய சத்திரசிகிச்சை நிபுணராக டாக்டர். தங்கராஜா நிமலரஞ்சன் நேற்று நியமிக்கப்பட்டுள்ளார்.

திருகோணமலையைச் சேர்ந்த நிபுணர் நிமலரஞ்சன் வைத்தியசாலைக்குச்சென்று தமது பதவியைப் பொறுப்பேற்றுள்ளார். வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் டாக்டர். சாமித்தம்பி இராஜேந்திரன் மேற்கொண்ட பெருமுயற்சி காரணமாக சுகாதார அமைச்சு இந்நியமனத்தை வழங்க முன்வந்தது என அறியமுடிகிறது.

கல்முனை ஆதார வைத்தியசாலையில் கடந்த 8 மாதகாலமாக சத்திர சிகிச்சை நிபுணர் இல்லாமையால் நோயாளர்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை விரைவில் சருமநோய் வைத்திய நிபுணர் ஒருவரும் நியமிக்கப் படவுள்ளாரென தெரியவருகிறது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

## மேடம்



பெரிய அளவில் ஆதாயத்தை எதிர்பார்த்து செய்த வேலை ஒன்றில் குறைந்த அளவில் பலன் கிடைக்கலாம். பிள்ளைகளிடம் அதிக கண்டிப்புடன் நடந்து அவர்களின் அதிருப்திக்கு ஆள்படலாம். சுமூகமாக முடிந்து விடும் என நினைத்த பிரச்சினை ஒன்றில் இழுபறி உண்டாகலாம். அயலாரால் தொல்லை உண்டு. பயணத் தடைகள் நேரும்.

## இடபம்



எதிர்பார்த்த பணவரவுகளைப் பெறலாம். வெளியூர் பயணங்கள் செல்லும் சிலருக்கு துணையாக இருப்பீர்கள். உறவினர்கள் சிலரை உபசரிக்க கணிசமான பணத்தை செலவு செய்வீர்கள். நேரம் காலம் கருதி சில வேலைகளை உடனுக்குடன் முடிப்பீர்கள். உத்தி யோகஸ்தர்கள் மேலதிகாரிகளை அனுசரித்துச் செல்ல வேண்டும்.

## மிதுனம்



எதிர்காலம் தொடர்பான விடயங்களில் அக்கறை காட்டுவீர்கள். வாகன யோகத்திற்கு வாய்ப்பு உண்டு. புதியவர்களை நம்பி எந்த காரியத்திலும் இறங்க வேண்டாம். உடல் உபாதைகளால் ஏற்பட்ட தொந்தரவுகள் விலகி தெம்பு, உற்சாகம் பெறுவீர்கள். தந்தை வழி உறவுகள் மூலம் அனுகூலமான உதவிகள் கிடைக்கலாம். பணவரவு உண்டு.

## கடகம்



சில வேலைகளை சரியான நேரத்திற்கு செய்யாமல் காலதாமதமாகச் செய்யலாம். பிள்ளைகள் வழியிலோ அல்லது நண்பர்கள் வழியிலோ கணிசமான பணத்தை செலவிடலாம். மீற்று மதத்தினர் தொடர்பான விடயங்களில் கவனம் அவசியம். உறவினர் ஒருவருடன் பழைய கதைகளை பேசி மகிழ்வீர்கள். இஷ்ட தெய்வ வழிபாடுகளை மேற்கொள்வீர்கள்

## சிங்கம்



எதிர்பாராத செய்திகளைக் கேட்கலாம். தொழில் ரீதியான சில விடயங்களை நினைத்து அதிக பயம் கொள்வீர்கள். நீண்ட நாள்களாக தொடர்பில்லாமல் இருந்த உறவினர் ஒருவருடன் திடீரென பேச நேரிடலாம். மன அமைதியை பாதிக்கும் நிகழ்ச்சிகள் நடக்கலாம். தாய் தொடர்பான விடயங்களில் பட்டும் படாமல் நடந்து கொள்ள வேண்டும்.

## கன்னி



புதிய முயற்சிகளில் வெற்றி கிட்டும் நாள். எந்த வேலையையும் மற்றவர்களை நம்பி ஒப்படைக்காமல் நீங்களே செய்ய முற்படுவீர்கள். அதிக விலை கொடுத்து வாங்க நினைத்த பொருள் ஒன்றை குறைந்த விலைக்கு வாங்குவீர்கள். அரசியல்வாதிகள் விமர்சனப் பேச்சுக்களை தவிர்க்க வேண்டும். உடன் பிறந்தவர்கள் மூலம் சில காரியங்கள் நடக்கலாம்.

## துலாம்



உடல் உபாதைகளால் உற்சாகம் குறையலாம். வேலையாட்கள் ஏட்டிக்குப் போட்டியாக நடந்து எரிச்சல் உண்டாக்கலாம். தொழில் ரீதியான ரகசியம் ஒன்றை மற்றவர்களிடம் சொல்வீர்கள். பண விவகாரங்களில் சிலரிடம், கண்டிப்பாக கடுமையாக நடந்து கொள்வீர்கள். பல நாள்களாக செல்ல நினைத்த கோயில் ஒன்றுக்கு செல்லலாம்.

## விருச்சிகம்



ஆறுதலான, மாறுதலான அனுபவங்களைப் பெறலாம். ஒரு வகையில் வந்த பணத்தை மற்றொரு வகையில் செலவு செய்வீர்கள். மாமன், மைத்துனர்கள் வழியில் அன்புத் தொல்லைகளைச் சந்திக்கலாம். திட்டமிட்ட காரியங்கள் சரியான நேரத்தில் நடக்கலாம். சிலரிடம் கோபம், வேகமாகப் பேச நேரிடலாம். விமர்சன பேச்சுக்களை தவிர்க்கவும்.

## தனுசு



குடும்ப உறுப்பினர்களுடன் ஆலோசித்து சில காரியங்களைச் செய்வீர்கள். உத்தியோகத்தர்கள் அதிகாரிகளின் கட்டளைகளை நிறைவேற்ற மறப்பதன் மூலம் அவதிகளுக்கு ஆள்படலாம். வாகனங்கள் வழியில் எதிர்பாராத செலவுகள் ஏற்படலாம். திட்டமிட்ட வேலைகளை செய்ய முடியாமல் தடை, தாமதம் ஏற்படலாம். பக்தி நாட்டம் அதிகரிக்கும்.

## மகரம்



புத்துணர்ச்சி, தெம்புடன் செயற்படுவீர்கள். உத்தியோக சூழ்நிலை ஆறுதல் தருவதாக அமையலாம். தூரத்து உறவினர் ஒருவரைப் பார்க்கும் வாய்ப்பு கிடைக்கலாம். சில வேலைகளை காலதாமதமாகத் தொடங்கினாலும், சரியான நேரத்திற்கு முடிப்பீர்கள். அடகு வைத்த பொருள்களை மீட்கலாம். பிள்ளைகளால் பெருமை அடைவீர்கள்.

## கும்பம்



சில விடயங்களில் பதட்டம், படபடப்போடு செயற்பட நேரிட்டாலும் ஆதாயம் கிடைக்கும். குடும்பச் செலவுகளில் சிக்கனம் காட்டுவீர்கள். அரசு தொடர்பான காரியங்களில் எதிர்பார்த்தது நடக்கலாம். கணவன் மனைவி இடையே அன்யோன்யம் அதிகரிக்கும். நீண்ட நாட்களாக வராத பணவரவு ஒன்று வரலாம்.

## மீனம்



இரண்டு நாட்களாக இழுபறியாக இருந்த காரியம் ஒன்று இன்று நல்ல விதமாக முடியும். வயிறு உபாதைகளைத் தவிர்க்க கண்ட இடங்களில் சாப்பிடுவதைத் தவிர்க்கவும். சிலரிடம் அவசர உதவிகள் பெறலாம். முடிந்து விட்டதாக நினைத்த பிரச்சினை ஒன்று மீண்டும் தலை தூக்கலாம். உங்கள் மீது அன்பு கொண்ட ஒருவரை அறிந்து கொள்வீர்கள்.

---


## 7ஆம் ஆண்டு நினைவஞ்சலி

### திருமதி கந்தசாமி சிவநாயகி
(கிளி)



(செங்குந்தா வீதி, திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம்)

மலர்வு 15.01.1944

உதிர்வு 19.04.2003

திதி.01.05.2010

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து
இன்று வானுறையும் தெய்வமாகிவிட்ட
எங்கள் குடும்ப விளக்கே!
ஆண்டுகள் ஏழாகிவிட்டாலும்
மாறாதம்மா உங்கள் பாசம்
இப்புவியில் நாம் உள்ளவரை
உம் நினைவு என்றும் அழியாதம்மா

தற்போதைய முகவரி:
சின்னப் புதுக்குளம்,
வவுனியா. (97701)

கணவர், பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள் (சாம்பவி, சாகித்தியன்)

## கோழிக்குஞ்சு விநியோகம்

Original No.01 Broiler கோழிக் குஞ்சுகள் 04.05.2010 அன்று விநியோகிக்கப்படும்.
முற்பதிவு செய்யவும்.
தொடர்பு: நல்லூர் பாம்சென்ரர்
19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர்.
எமது கிளை: சுட்டிபுரம்,
வட்டுக்கோட்டையிலும் பெற்றுக்கொள்ளவும்.
தொ.பே.0213216290
குறிப்பு. மிகவிரைவில் Prima No.01 பேட்டுக் குஞ்சு, கோழித்தீன் மருந்துவகை என்பன பெற்றுக் கொள்ளலாம். எமது தொ.பே.021 222 6944
(97720)

## வீடு விற்பனைக்கு

2 ½ பரப்புக்காணி 4அறைகள் கொண்ட வீடு மணிக்கூட்டுவீதி, யாழ்ப்பாணத்தில் மாநகரசபை எல்லைக்குள் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு.1-647-229-9160 (கனடா), 0214903423

## காணி விற்பனைக்கு

தேவால்யவீதி, சங்கானையில்
9 பரப்புக் காணி கிணற்றுடனும்,
பழைய வீட்டுடனும்
விற்பனைக்குண்டு.
தொடர்பு.0777475912
(97714)

## கமரா விற்பனைக்கு

JVC HDD வீடியோ கமரா Hard Disk Cam Cqrder வசதியுடைய வீடியோ கமரா விற்பனைக்கு உண்டு.
தொடர்பு. 254, கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.0775581490
(சி/567049)

## மாடி வீடு வாடகைக்கு

யாழ்.மாநகரசபை எல்லைக்குள் 5அறைகள், 2வரவேற்பு மண்டபம், குளியல் அறை, வாகனத் தரிப்பிட வசதியுடன் கூடிய மாடி வீடு வாடகைக்கு உண்டு. வங்கி NGOS, குடும்பப் பாவனைக்கு விரும்பத்தக்கது.
தொடர்பு.0775581490
(சி/567048)

பரீட்சையில் சித்திபெற்ற
மாணவர்களைக்
கௌரவிக்க ஒரு
தங்கமெடல் வழங்குங்கள்.



ரூபா 350 இல் இருந்து
S.S.யசோதரன் ஆட்ஸ்
381u, K.K.S வீதி, யாழ்ப்பாணம்.
(சி/567168)

## 41ஆம் நாள் நினைவு தின அழைப்பும் நன்றி நவிலலும்



திருமதி
### தெய்வரத்தினம் தவமலர்

மலர்வு 17.10.1952, உதிர்வு 22.03.2010

எங்கள் குலவிளக்காய்த் திகழ்ந்த குடும்பத் தலைவியின் மரணச் செய்தியறிந்து சகல வழிகளிலும் அனுதாபம் தெரிவித்தவர்கள் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டவர்கள் அனைவருக்கும் நெஞ்சம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்வதோடு, இன்று (01.05. 2010)சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக் கிருத்திய நிகழ்விலும் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

கொக்கட்டியார் வளவு,
மனோகரா, அல்வாய். (97736)

குடும்பத்தினர்.

## சாவகச்சேரியில், MAY 2ᴺᴰ திகதி BBS இன் புதிய பாலர்பாடசாலை ஆரம்பம்.

8TH Anniversary

சர்வதேச தரத்திலான ஆங்கிலத்துடன் தமிழிலும்
### பாலர் பாடசாலை

Play Group 2-3 Years | Montessori 3-4 Years
Pre School 4-5 Years

கற்பித்தல் முறை:
- சர்வதேசத்தில் அங்கீகரிக்கப்பட்ட Dr.Maria Montessori & Canadian Early Learning Method
- ஆங்கில மொழியில் சர்வதேச தரத்திற்கேற்ப பாடத்திட்டம்
- அங்கீகரிக்கப்பட்ட ஆங்கிலப் பாடநெறிகள்

விரைவில்....!
நீர்வேலியிலும்,
உடுப்பிட்டியிலும்.

வேறு கிளைகளில் புதிய தவணைக்கான மட்டுப்படுத்தப்பட்ட அனுமதிகள் உள்ளன.

Contact : 021 2225796, 0776646357.

# BRITISH BUSINESS SCHOOL

பிரதான வளாகம்: 140, கோவில் வீதி, யாழ்ப்பாணம். 021 2225796

## 33ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் குமரையா
### தேவராஜன்

பிறப்பு 05.07.1950

இறப்பு 01.05.1977

தோற்றங்கள் மாறிப்போகும்
தோல் நிறம் மாறிப்போகும்
மாற்றங்கள் பல வந்தால்
மனசு கூட மாறிப்போகும்
அகல் விளக்காய் மின்னும் உமது
அழகான உறவு மட்டும்
ஆண்டுகள் பல ஆனாலும்
அழியாது எம்மை விட்டு.

99/6, சந்தான மாதா லேன்,
கச்சேரி கிழக்கு,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத் தமிழர்களின் கடந்த ஐம்பது ஆண்டு கால சட்ட விடயங்களில் தமிழ்த் தலைவர்களுடனும் நெருக்கமாகச் சம்பந்தப்பட்டு செயலாற்றிய சட்ட விற்பன்னர் ஸி.வி.விவேகானந்தன்.

ஈழத் தமிழர் சார்பில் இந்தியாவை நோக்கி அவர் எழுப்பும் கேள்விக் கணைகளில் அர்த்தம் நிறைந்த பல விடயங்கள் பொதிந்துள்ளன. இக்கட்டுரைத் தொடரின் இறுதிப் பகுதி இங்கு பிரசுரமாகின்றது.

# பாரத தேசத்துக்கு ஒரு பகிரங்க மடல்....!

சிரேஷ்ட சட்டத்தரணி
**ஸி.வி.விவேகானந்தன்**

பகுதி - 6

டில்லிப் பேரரசே!

இலங்கைத் தமிழர்களின் அரசியல் அபிலாசைகளுக்கு முடிவுரை எழுத புறப்பட்டவர்கள் பலர். அவர்களது அரசியல் வாழ்வு முடிந்தது, இனிமேல் எழும்ப முடியாது எனக் கனாக்கண்டோர் பலர்.

ஒன்றின் பின் ஒன்றாக தேர்தல்கள் நடத்தப்பட்டன. தேர்தல் மூலம் நசுக்கிவிடலாம் என நம்பினர். தேர்தல் காலத்தில் பணநாயகம் புயலாக வீசியது. சாராயம் ஆறாக ஓடியது. வாக்காளர்கள் பலவித அழுத்தங்களுக்கு உட்படுத்தப்பட்டனர். பயமுறுத்தப்பட்டனர். சகலவற்றையும் இழந்து நின்றவர்கள் வடக்கு, கிழக்கு வாக்காளர்கள். வாழ்வாதாரம் இல்லாது தத்தளித்தவர்கள். தேர்தலில் அவர்கள் நிமிர்ந்து நின்றனர். யாரும் எதிர் பார்க்காத அளவிற்கு பெரும்பான்மையினர், தந்தை செல்வநாயகத் தால் உருவாக்கப் பட்ட தமிழரசுக் கட்சிக்கு வாக்களித்தனர். எந்த சக்தியாலும் அவர்களது அரசியல் அபிலாஷைகளை அடக்க முடியாது என்பதனைக் காட்டி விட்டனர்.


ஜே.ஆர். ஜெயவர்த்தனா

டில்லிப் பேரரசே! உங்களது மேற்பார்வையில், உங்களுக்காக இலங்கை அரசு யுத்தத்தை நடத்தி முடித்துள்ளது. வடக்கு, கிழக்கு தமிழர்கள் சின்னாபின்னப் படுத்தப்பட்டுவிட்டனர். இன்று இலங்கைத் தமிழர் பல திசைகளிலும் பிரிந்து நிற்கின்றனர். பலவித எண்ணங் களை மனத்தில் தேக்கி நிற்கின்றனர்.

ஜனாதிபதி ராஜபக்ஷ பக்கம் பற்றும் பாசத்தோடும் பார்ப்பவர்களும் உண்டு. அவரது ஒரே நாடு, ஒரே மக்கள் என்ற கொள்கையில் கவர்ந்து இழுக்கப்பட்டவர்களும் உண்டு. சோல்பெரி அரசமைப்பு வரைந்த ஐவர் ஜெனிங்ஸ். சோல்பரி அரசமைப்பு நடைமுறைப் படுத்தப்படும் பொழுது தமிழர்கள் சிங்களவர்களுடன் கலந்துவிடுவார்கள் என்ற கருத்தை முன் வைத்துள்ளார். உங்கள் புண்ணியத்தினால் ஐவர் ஜெனிங்ஸின் கருத்து இப்பொழுதுதான் நடைமுறைக்கு வருகின்றது.

ஒரு நாட்டின் தலைவர் என்ற ரீதியில் ஐ.நா. சபையில் தமிழில் பேசிய ஒரே தலைவர். அதனால் பல தமிழர் அவர் மீது பற்று.

அணுக வேண்டிய முறையில் அணுகினால் வடக்கு, கிழக்கை இணைக்கலாம். நியாயமான அதிகாரப்பகிர்வையும் பெற்றுக் கொள்ளலாம் என்று 'மத்தியில் கூட்டாட்சி மாநிலத்தில் சுயாட்சி'க்காரரும் அவருக்கு ஆதரவு.


அமிர்தலிங்கம்

வடக்கு, கிழக்கு மாகாணங்களை அபிவிருத்தி மூலம் முன்னேற்றி னால் போதும், வேறொன்றும் வேண்டாம் பராபரமே! என்று வேண்டிக் கொள்பவர்களும் அவர் பக்கமே.

சுயநலக்காரரும் ஜனாதிபதியின் திசை நோக்கி ஓடுகின்றார்கள்.

தொகை தமிழர்கள் அவர் பக்கம் நின்றாலும் ஆச்சரியப்படத் தேவையில்லை. ஜனாதிபதி தனது கொள்கை யில் வெற்றிபெற்றால் டில்லி பேரர சிற்கு நன்றி செலுத்த மாட்டாரா?

தந்தை செல்வநரயகம் 30 வருடங்களாக வளர்த்த கொள்கையில் ஊறிப்போனோர் வேறு பக்கம் நிற்கின்றார்கள். தாங்கள் விழமாட்டோம் என்று நிமிர்ந்து நிற்கின்றார்கள்.

நாமும் இருக்கின்றோம் என்று சில தமிழர்கள் இருக்கின்றார்கள். அவர்கள் அங்கும் இங்கும் ஓடித்திரிகிறார்கள்.

இந்தியக் குடியரசே! உங்கள் மீதும் பற்றுள்ளவர்கள் இருக்கின்றார்கள். சிலர் நீங்கள் தமிழர்களுக்கு உரிமைகளை பெற்றுத் தருவீர்கள் என்று நம்புகின்றார்கள். பிரபாகரனின் நடவடிக்கைகளால் தான் டில்லி தமிழர்களின் உரிமைகளைப் புறம் தள்ளியது. இப்பொழுது பிரபாகரனை சம்ஹாரம் செய்துவிட்டீர்கள். இனிமேல் இலங்கை அரசு உரிமைகளை வழங்காவிட்டால் நீங்கள் அவர்களது கன்னத்தில் இரண்டு அடிபோட்டு, அழுத்தங்களைக் கொடுத்துச் செய்விப்பீர்கள் என்று நப்பாசைப்படுவோர் சிலர். இவர்களைப் பற்றி நீங்கள் பெரிதாகக் கவலைப்பட வேண்டாம். ஏனெனில், அவர்களுக்கு உரிமைகள் பற்றி எவ்வித விளக்கமுமில்லை.

இக்கட்டுரைத் தொடரை, அதனை ஒட்டியும் வெட்டியும் வ நும் ஆக்கபூர்வமான விமர்சனங் கள், திருத்தங்கள் போன்றவற்று டன் சேர்த்து ஒரு கைநூலாக வெளியிடக் கட்டுரையாளர் விரும்புகின்றார். இக்கட்டுரைத் தொடர் தொடர்பாகப் பயனுள்ள கருத்துக்களை அனுப்ப விரும்புவோர்,
C.V.விவேகானந்தன்,
சட்டத்தரணி,
23, பெல்மென்ற் வீதி,
கொழும்பு - 12.
- என்ற விலாசத்திற்கு அனுப்பி வைக்க முடியும். (ஆ-ர்)

நீங்கள் துரும்பைக்காட்டி இது தான் உரிமையென்றால் ஏற்றுக்கொள்வர்.

என்னைப்போல சிலர் இருக்கின்றார்கள். உங்கள் மீது கவலை. இலங்கைத் தமிழரை உங்கள் நாட்டு விசுவாசிகள் என்று தெரியாது எதிரிகளாகக் கணித்துவிட்டீர்கள் என்ற கவலை. தாலாட்டுப்பாடி, கடைசியில் யுத்தம் ஒன்றை நடத்துவித்து தமிழர்களை நட்டாற்றில் விட்டுவிட்டீர்கள் என்ற ஏக்கம். திரும்பவும் அதே நோக்கமா என் றொரு கேள்வி. கண்ணன் காட்டிய வழி வேறு. பார[illegible] தமிழரின் [illegible] மனத்தை தேற்றிக் கொள்கின்றோம்.

போன்றவர்கள் உங் களிடம் கேள்வி கேட்கின்றார்கள்.

இன்னும் சிலர் இருக்கின்றார்கள். அவர்கள் டில்லி மீது மிக்க கோபம். அன்பர் ஒருவர் கூறினார், அதனை உங்கள் காதுகளை எட்டச் செய்ய விரும்புகின்றேன்.

பார்த்த சாரதி தமிழன். தமிழனுடன் பேச்சு நடத்துவதை தாம் விரும்பவில்லையென்று ஜே.ஆர். ஜெயவர்த்தனா கூறியபொழுது பண்டாரியை டில்லி நியமித்தது. இன்றுவரை ஒரு தமிழனை இந்தியத் தூதுவராக நியமிக்கவில்லை. இப்பொழுது யாழ்ப்பாணத்தில் உப தூதரகம் திறக்கிறார்களே. இது ஏன்? எங்கள் முதுகில் தடவி, பின் குப்புற வீழ்த்துவதற்காகவோ என்று, கேட்டுப் பல செய்திகளைக் கூறினார். அவருடன் உடன்பாடு எனக்கில்லை. ஒரு நிகழ்ச்சி ஞாபகத்துக்கு வந்தது. அதை இந்தியக் குடியரசிற்கு காதில் போட்டு வைப்பது நன்றென்று கருதுகின்றேன்.

கூட்டணித் தலைவர்களில் அமிர்தலிங்கம், சிவசிதம்பரம், யோகேஸ்வரன் போன்றவர்கள் தமிழ் நாட்டில் அஞ்ஞாவாசம் இருந்தவர்கள். அஞ்ஞாவாசத்தை முடித்துக்கொண்டு கொழும்பிலிருந்து ஜீ.ஓ.எச். ஹொட்டேலில் தங்கியிருந்தார்கள். அவர்களைப் பார்க்கச் சென்றேன். அண்ணன் அமிர்தலிங்கத்திடம் இந்திய அமைதிப்படை பற்றிக் கூறினேன். அவர் 'ஷட்டப்' என்றார். 'வாய் மூடு' என்றார். ''இந்தியா எங்களது தாய். தாய் அடிப்பாள். உதைப்பாள். பிள்ளைகளாகிய எங்களால் என்ன செய்யமுடியும்? உனக்குத் தெரியும். சிறு குழந்தைகள் குழப்படி செய்தால் சில நேரம் தாயவள் இரும்புக்கம்பியை நெருப்பில் வைத்து தனது குழந்தையின் கன்னத்திலேயோ, உள்ளங்கையிலேயோ சுட்டுவிடுவாள். அக்குழந்தை தாயைத்தான் கட்டிப்பிடித்து அழும். தாயும் பின் அழுது கொண்டு எண்ணெய் தடவுவாள்'' என்று பெரியதோர் விரிவுரை நிகழ்த்தினார்.

''அண்ணே இந்திய தாய் மீது குற்றம் கூறவில்லை. நீங்கள் கூறுவதை வேறு வார்த்தைகளில் கூறிவிட்டேன். கட்டிப்பிடித்து அழுங்கள். எண்ணெய் தேய்க்கப்படும்'' என்று கூறித் தப்பிக்கொண்டேன். அவரது சீற்றம் தணிந்தது. பவ்வியமாகக் கடிதம் எழுதுவேன் என்று கூறிமுடித்தார். அவர் ஒரு [illegible]எழுதியிருக்கமாட்டார் [illegible] எனது நம்பிக்கை. அவர் இந்தியக் குடியரசை கண்ணை

கொண்டும் இந்தியக்குடியரசு தமிழர்களை கைகழுவி விடமாட்டாது என்ற நம்பிக்கை அவருக்கு எப்பொழுதும் இருந்தது.


ரோமேஸ் பண்டாரி

டில்லிப் பேரரசே! யாழ்ப்பாணத்தில் உப தூதரகம் திறந்து எண்ணெய் தடவப் பார்க்கிறீர்களா? அபிவிருத் திகண்டு யாழ்ப்பாண மக்களை மகிழ்வுறச் செய்யப் பார்க்கின்றீர்களா? சட்டங்கள், திட்டங்கள் போட்டு அரசு தமிழர்களின் உரிமைக்குரலை அடக்கப் பார்க்கின்றது. இலங்கையில் தமிழர் தாயகமென்பதில்லை, வடக்கு - கிழக்கு இணைப் பில்லை, சமஷ்டி அரசாட்சி முறையில்லை. இன்னும்பல இத்தியாதி இத்தியாதிக் குரல்கள் கேட்கின்றன.




உங்கள் குரல் மௌனித்திருக்கின்றது. யாருக்கு உதைப்பது எனத்தெரியாது உதைக் கின்றீர்கள். யார் உங்களுடன் துணைவ ருவார் என்று தெரியாது எம்மை சப்பாணியாராக ஆக்கிவிட்டீர்கள். நாங்கள் முடவர் ஆனோம். ஜனாதிபதி ராஜபக்ஷவின் கைபிடித்து எழும்பப் பார்க்கின்றோம். அதைத்தடுக்க, நீங்கள் எங்களது கைபிடித்து எழுப்புவதாகக் கூறி யாழ் நகரில் உப தூதரகம் திறக்கின்றீர்களா? ஏன் யாழ். நகரில் மட்டும் திறக்கின்றீர்கள்? கிழக்கு மாகாணத்தை ஏன் மறந்தீர்கள்?


சிவசிதம்பரம்

அல்லது வேறு இரகசிய காரணமும் உண்டா? யாழ்ப்பாணத்தில் பாதை அமைக்க சீனா வந்து விட்டது. குறைந்தது இரண்டு, மூன்று வருடங்கள் நிலைநிற்பார் கள் என செய்திகள் வருகின்றன. அத்தோடு யாழ்ப்பாண மக்களுக்காக அபிவிருத்தித் திட்டங்களைச் செயல்படுத்த துடிக்கின்றார்கள் என காற்றினிலே வரும் கீதமாக மிதந்து வருகின்றன தகவல்கள்.

சீனா யாழ்ப்பாண மக்களை தம்வசம் படுத்திவிடும் என ஏக்கமா?

(14 பக்கம் பார்க்கவும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓராண்டு நினைவஞ்சலி

## துரைச்சாமி திலீபன்

திதி: திருதியை 01.05.2010

ஓராண்டென்ன
ஓராயிரம் ஆண்டுகளானாலும்
ஓயாது உன் நினைவு
உத்தம தம்பியே
உனை உச்சரிக்கும் உதடுகள்
உனக்காக ஏங்கும் உள்ளங்கள்
உயிருருக...
குருவிக்கூடாய் வாழ்ந்த எம்மை
குற்றுயிராய் துடிக்கவிட்டு
கூண்டைவிட்டுப் பறந்ததேனோ...?

தாயின் மடியில்:
*11.02.1981*

தாய் மண்ணில்:
*12.05.2009*

இளவாலை, யாழ்ப்பாணம்.

- குடும்பத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முல்லைத்தீவில் மீட்கப்பட்ட 1,000 மோ.சைக்கிள்கள் வியாழன் கையளிப்பு

கிளிநொச்சி,மே.1

வன்னியில் கடந்த யுத்தத்தின்போது மாத்தளன், வலைஞர்மடம், முள்ளிவாய்க்கால் பிரதேசங்களில் மக்களால் கைவிடப்பட்ட மோட்டார் சைக்கிள்களில் மீட்கப் பட்டவற்றுள் 1,000 மோட்டார் ஸ்சைக்கிள்களை முதற் கட்டமாக எதிர்வரும் 6ஆம் திகதி வியாழக்கிழமை கைய ளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி றூ.கேதீஸ்வரன் அறிவித் துள்ளார்.

எனவே கீழே குறிப்பிடப்பட்டுள்ள மோட்டார் சைக் கிள்களின் உரிமையாளர்கள் இன்று சனிக்கிழமையும் கிளிநொச்சி திருநகரில் அமைந்துள்ள வாகனங்கள் பரா மரிப்பு நிலையத்துக்கு வாகனப் பதிவுப் புத்தகம், வரு மான வரிப் புத்தகம், காப்புறுதிப் பத்திரம், பொலிஸ் முறைப்பாட்டுப் பத்திரம், தேசிய அடையாள அட்டை என்பனவற்றுடனும் அவற்றின் இரண்டு போட்டோப் பிரதிகளுடனும் சமுகமளிக் குமாறும் அவர் கேட்டுள்ளார்.

இதேவேளை இங்கு தரப்பட்டுள்ள மோட்டார் சைக் கிள்களின் பட்டியலை கிளிநொச்சி,வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் மாவட்ட செயலகங்களி லும் (கச்சேரி) பார்வையிட முடியும் எனவும் அவர் அறி வித்துள்ளார்.

மோட்டார் சைக்கிள்களின் விவரப் பட்டியல் வருமாறு:-

(நேற்றைய தொடர்ச்சி)

| தொடர் இலக்கம் | பதிவு இலக்கம் | வகை |
|---|---|---|
| 802 | NCGM-0628 | YAMAHA MATE |
| 803 | 3022 | YAMAHA MATE |
| 804 | NPMM-9127 | TVS |
| 805 | 146-7287 | YAMAHA |
| 806 | 12-5043 | YAMAHA |
| 807 | NPHP-9454 | HONDA M.D 90 |
| 808 | 12-3870 | HONDA M.D 90 |
| 809 | 502-0178 | YAMAHA |
| 810 | 102-0122 | HONDA M.D 90 |
| 811 | NPJX-33319 | DIDO |
| 812 | 14-6441 | DIDO |
| 813 | 13-2714 | HONDA |
| 814 | 13-0056 | HONDA M.D 90 |
| 815 | NPGU-5761 | BAAJAJ |
| 816 | 139103 | YAMAHA |
| 817 | 12-2870 | SUPPER CUP |
| 818 | 13-6870 | YAMAHA |
| 819 | 500-6978 | YAMAHA |
| 820 | 157-4031 | HONDA M.D 90 |
| 821 | 101-1165 | YAMAHA |
| 822 | 302-4862 | HONDA M.D 90 |
| 823 | 121-4836 | YAMAHA |
| 824 | 159-7624 | YAMAHA |
| 825 | 302-3658 | HONDA M.D 90 |
| 826 | NPHQ-7458 | BAJAJ |
| 827 | 202-4785 | SUPPER CUP |
| 828 | 14-7444 | YAMAHA |
| 829 | NPJW-9572 | JAILING |
| 830 | 502-0895 | YAMAHA MATE |
| 831 | 101-2369 | HEERO HONDA |
| 832 | NPJG-6244 | HEERO HONDA |
| 833 | NPJM-9873 | YAMATO |
| 834 | 129-8668 | YAMAHA |
| 835 | NPMP-2273 | HEERO HONDA |
| 836 | WPHL-3117 | HEERO HONDA |
| 837 | 157-3777 | YAMAHA |
| 838 | 500-5362 | HONDA M.D 90 |
| 839 | 145-5428 | YAMAHA |
| 840 | 142-0242 | YAMAHA |
| 841 | 153-2651 | HONDA M.D 90 |
| 842 | 2-6125 | HONDA |
| 843 | 14-6480 | HEERO HONDA |
| 844 | 500-8248 | HONDA M.D 90 |
| 845 | 500-6051 | YAMAHA |
| 846 | WPJR-6694 | YAMAHA |
| 847 | 147-0879 | YAMAHA |
| 848 | NPHO-3983 | HEERO HONDA |
| 849 | 30-3066 | YAMAHA MATE |
| 850 | HT-7906 | BAJAJ |
| 851 | HT-7873 | HONDA M.D 90 |
| 852 | 12-7696 | HONDA M.D 90 |
| 853 | 146-7131 | YAMAHA MATE |
| 854 | 152-3314 | YAMAHA MATE |
| 855 | JP0146 | TVS |
| 856 | 133-6371 | YAMAHA MATE |
| 857 | 143-6904 | YAMAHA MATE |
| 858 | HF7345 | YAMAHA MATE |
| 859 | 134-4525 | BAJAJ |
| 860 | 117-8940 | YAMAHA MATE |
| 861 | HQ-3962 | HONDA M.D 90 |
| 862 | 14-2167 | YAMAHA MATE |
| 863 | GO1125 | HEERO HONDA |
| 864 | 13-8348 | HONDA |
| 865 | 12-7267 | YAMAHA MATE |
| 866 | 14-2377 | YAMAHA MATE |
| 867 | 12-817 | YAMAHA MATE |
| 868 | 500-480 | YAMAHA MATE |
| 869 | 12-4541 | HONDA CHALY |
| 870 | 13-4120 | SUZUK |
| 871 | GP2880 | HEERO HONDA |
| 872 | 12-2666 | YAMAHA MATE |
| 873 | HR3235 | CD DELUXE |
| 874 | TS8155 | HONDA MD90 |
| 875 | GQ8573 | HEERO HONDA |
| 876 | MN2949 | TVS SCOOTER |
| 877 | 13-3069 | HONDA MD90 |
| 878 | 127-5228 | YAMAHA MATE |
| 879 | 301-4151 | HONDA MD90 |
| 880 | HL3829 | RANOMOTO |
| 881 | HC3913 | HEERO HONDA |
| 882 | 105-7140 | HONDA MD90 |
| 883 | 157-8626 | YAMAHA MATE |
| 884 | JY8647 | HONDA MD90 |
| 885 | 29-156 | YAMAHA MATE |
| 886 | 112-5997 | YAMAHA MATE |
| 887 | 24-800 | HONDA MD90 |
| 888 | HX20611 | YAMAHA |
| 889 | 2-3086 | HONDA |
| 890 | 12576061 | YAMAHA |
| 891 | 149039 | HONDA |
| 892 | 13-2522 | YAMAHA |
| 893 | GS6555 | BAJAJ |
| 894 | 150-2186 | YAMAHA |
| 895 | ME8192 | YAMAHA |
| 896 | 1022614 | HONDA MD90 |
| 897 | GD5625 | HONDA MD90 |
| 898 | HD7975 | TVS |
| 899 | 135110 | HONDA |
| 900 | GE7337 | HONDA MD 90 |
| 901 | 500-4058 | YAMAHA |
| 902 | HK7839 | HEERO HONDA |
| 903 | MF0856 | YAMAHA |
| 904 | 134041 | YAMAHA |
| 905 | GO6284 | YAMAHA |
| 906 | 45-3122 | YAMAHA |
| 907 | 1445901 | YAMAHA |
| 908 | HK9282 | BAJAJ |
| 909 | 13-4383 | YAMAHA |
| 910 | J19049 | HONDA |
| 911 | HE7517 | BAJAJ |
| 912 | 145-0450 | HONDA |
| 913 | 13-1127 | HONDA |
| 914 | K5294 | HEERO HONDA |
| 915 | 502-0153 | HONDA |
| 916 | 14-7708 | HONDA |
| 917 | 128-6485 | YAMAHA |
| 918 | GQ-2311 | HEERO HONDA |
| 919 | HK4129 | HONDA MD 90 |
| 920 | MP5867 | TVS SCOOTER |
| 921 | HE0732 | HEERO HONDA |
| 922 | 1364853 | YAMAHA |
| 923 | 1508801 | YAMAHA |
| 924 | 130-988 | HONDA MD 90 |
| 925 | 12-2426 | YAMAHA |
| 926 | 1413762 | YAMAHA |
| 927 | JH5934 | HONDA MD 90 |
| 928 | 24335 | HONDA MD 90 |
| 929 | MF0031 | BAJAJ |
| 930 | 500-0610 | YAMAHA |
| 931 | 13-0806 | YAMAHA |
| 932 | 13-1010 | HONDA MD 90 |
| 933 | 101-9849 | HONDA MD 90 |
| 934 | 12-3808 | YAMAHA |
| 935 | 500-8634 | YAMAHA |
| 936 | 143384 | HONDA |
| 937 | 500-0980 | DAYDO |
| 938 | 155-7383 | YAMAHA |
| 939 | JG-7413 | TVS |
| 940 | HY9452 | HEERO HONDA |
| 941 | GC3116 | YAMAHA |
| 942 | HI-6551 | BAJAJ |
| 943 | HK4065 | BAJAJ |
| 944 | MB6078 | TVS |
| 945 | 14-8853 | TVS |
| 946 | T2554 | TVS |
| 947 | 159-0351 | HONDA MD 90 |
| 948 | 12-2085 | YAMAHA |
| 949 | 144-6445 | YAMAHA |
| 950 | 101-1980 | YAMAHA |
| 951 | MC6703 | JAILING |
| 952 | 88SRI4302 | YAMAHA |
| 953 | 116-6812 | YAMAHA |
| 954 | JH9904 | LML |
| 955 | 150-6246 | YAMAHA |
| 956 | 13-4263 | HONDA |
| 957 | GO4336 | HONDA |
| 958 | 121-4836 | - |
| 959 | 159-7624 | - |
| 960 | 302-3658 | - |
| 961 | NPHQ-7458 | - |
| 962 | 202-4785 | - |
| 963 | 14-7444 | - |
| 964 | NPJW-9572 | - |
| 965 | 502-0895 | - |
| 966 | 101-2369 | - |
| 967 | NPJG-6244 | - |
| 968 | NPJM-9873 | - |
| 969 | 129-8668 | - |
| 970 | NPMP-2273 | - |
| 971 | WPHL-3117 | - |
| 972 | 157-3777 | - |
| 973 | 500-5362 | - |
| 974 | 145-5428 | - |
| 975 | 142-0242 | - |
| 976 | 153-2651 | - |
| 977 | 2-6125 | - |
| 978 | 14-6480 | - |
| 979 | 500-8248 | - |
| 980 | 500-6051 | - |
| 981 | WPJR-6694 | - |
| 982 | 147-0879 | - |
| 983 | NPHO-3983 | - |
| 984 | 30-3066 | - |
| 985 | HT-7906 | - |
| 986 | HT-7873 | - |
| 987 | 12-7696 | - |
| 988 | 146-7131 | - |
| 989 | 152-3314 | - |
| 990 | JP0146 | - |
| 991 | 133-6371 | - |
| 992 | 143-6904 | - |
| 993 | HF7345 | - |
| 994 | 134-4525 | - |
| 995 | 117-8940 | - |
| 996 | HQ-3962 | - |
| 997 | 14-2167 | - |
| 998 | GO1125 | - |
| 999 | 13-8348 | - |
| 1000 | 12-7267 | - |

முற்றும்


## 33ஆம் ஆண்டு நினைவுப் பூக்கள்

அவனியில் 05 ★ 07 ★ 1950



ஆண்டவனடியில் 01 ★ 05 ★ 1977

அமரர் குமரையா தேவராஜன்

வாழ்வின் தத்துவத்தை
எமக்கு உணர்த்தி
விண்ணுலகு சென்றாலும்
உம் நினைவுகளே-என்றும்
எமக்கு வசந்தம்.

இல,28, றக்கா லேன்,
சுண்டுக்குளி

(97740)

பாசநினைவுகளுடன்,
மனைவி,மக்கள், உறவினர்.

## முதலாம் ஆண்டு நினைவலைகள்

பிறப்பு 22 ★ 08 ★ 1937



அழிப்பு 11 ★ 05 ★ 2009

அமரர்

செல்லத்துரை உமாபதிதேவி

(ஓய்வுபெற்ற ஆசிரியை) திதி: 01.05.2010)

ஆண்டு ஒன்று சென்றாலும்
அன்பான வார்த்தைகளும்
அமைதியான உங்கள் பண்பும்
அரவணைக்கும் நற்குணமும்-என்றும்
நிலைத்திருக்கும் எம் நெஞ்சில்.

"செல்வபதி"
மல்லாகம்.

(97723)

குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரத தேசத்துக்கு........

(11 பக்கத் தொடர்ச்சி)

அவர்களைக் கொண்டு உனக்கு தலையிடி கொடுப்பார்கள் என்று பயமா? இந்தியாவின் வடக்கெல்லையிலும் தலையிடி. தெற்கிலும் தலையிடி தோன்றுமா என்ற கேள்வியா?

1962 ஆம் ஆண்டு சூ.என்.லாய் டில்லிக்கு வந்தார். நேருவை கட்டி அணைத்தார். அதன்பின்தான் சீனாவின் படையெடுப்பு நடந்தது. இந்தியா சுருண்டது. அதுபோல சீனா உன்குரல்வளையை இறுக்கிபிடிக்குமா என்ற கவலையா? வல்லரசாகும் கனவு கலைந்துவிடுமென ஏக்கமா? எதற்காக யாழ். நகரில் உப தூதுவர் அலுவலகம்? டில்லிப் பேரரசே! உண்மைதனை விளம்புவாயா?

இந்தியக் குடியரசே! நீ மறந்திருப்பாய். சண்முகதாசன் என்ற தமிழ் அரசியல்வாதி இருந்தவர். அவர்தான் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர். அவர் மரணித்ததும் கட்சியும் மரணித்துவிட்டது. சீனக் கம்யூனியூஸ்ட் வாதிகள் நீங்கள் செய்த கைங்கரியத்தால் உயிர் பெற்றெழுந்துள்ளனர். டில்லிப் பேரரசுடன் கோபம் கொண்டோர். ஆயிரம் ஆயிரம். சீனா தனது பழைய கட்சிக்கு உயிர்கொடுத்து எழுப்பிவிட்டால் என்ன செய்வாய்? அக்கட்சித் தொண்டர்கள் சீனாவிற்கும் யாழ்நகரில் உப தூதரகம் திறக்கவேண்டும்,. சீனாவிற்கும் அபிவிருத்தித் திட்டங்கள் கொடுப்படவேண்டும் என்று குரல் கொடுத்து ஊர்வலம் வந்தால் என்ன செய்வீர்கள்? சீன நாட்டிலும் சிறுபான்மையர்களுக்கு ஒற்றையாட்சி முறையின் கீழ் தீர்வுத் திட்டங்கள் உண்டு. சிறுபான்மை இனத்தவருக்கு சீனா வழங்கிய தீர்வு திட்டத்தை நாங்கள் ஏற்போம் என்று யாழ்நகரில் ஊர்வலம் வந்தால் டில்லிப் பேரரசே! நீ என்ன செய்வாய்? இலங்கை அரசு என்ன செய்யும்?

காலம் கனியும் பொழுது காலை வாருபவர்கள் தமிழர்களல்லர். சீன - இந்திய யுத்தத்தில் சிறிமாவோ என்ன செய்தார்? இந்தியா - பாகிஸ்தான் யுத்தத்தில் சிறிமாவோ என்ன செய்தார்?

கச்சதீவு ஒப்பந்தத்தில் கூறப்பட்டவாறு தமிழ் நாட்டு மீனவர்கள் மீன் பிடிப்பதற்கு நீங்கள் அனுமதி இலங்கையிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். இன்று வரை அவ்வாறான அனுமதி பெற்றுக்கொள்ள முடிந்ததா? கச்சதீவைக் குத்தகை எடுப்பதற்கு எவ்வளவோ முயற்சித்தீர்கள். வெற்றி கண்டீர்களா?

கச்சதீவு ஒப்பந்தத்தில் மன்னார் வளை குடாவில் எண்ணெய் வளம் காண்பது என்றால் இந்தியாவும் இலங்கையும் மட்டும் ஒன்று சேர்ந்து அகழுவதற்கான நடவடிக்கைகளைச் செய்ய வேண்டும் என திட்டவட்டமாக எழுதப்பட்டுள்ளது. இப்பொழுது மன்னார் வளை குடாவில் எண்ணெய் அகழுவதற்கான இடங்களை சீனாவிற்கும் கொடுக்கப்பட்டுளது. இது போன்று சீனாவிற்கும் யாழ் நகரில் உப தூதரகம் திறப்பதற்கு இலங்கை சம்மதித்தால் உங்களால் என்ன செய்ய முடியும்?

மக்கள் ஆணை மகேசன் ஆணை. யாழ்ப்பாண மக்கள் சீனாவிற்கும் உபதூதரகம் திறக்கும்படி கேட்கின்றார்கள். சிறுபான்மை மக்களுக்கு சீனா கொடுத்த தீர்வை. பரிசோதிப்போம், சீனாவிற்கான உபதூதரகம் திறந்திடுவோம், என்றால் டில்லி பேரரசே! உன் உள்ளம் பதறாதா? உனது வல்லரசுக் கனவு கலையாதா? இந்தியாவின் பாதுகாப்பு என்னவாகும்?

கலைஞரைக் கேளுங்கள் சிலப்பதிகாரத்தின் மையக் கருத்து என்னவென்று கேளுங்கள். கலைஞர் கூறுவார் " அரசியல் பிழைத்தோருக்கு அறங் கூற்றாகும் - என்ற தத்துவத்திற்கு நீண்டதோர் மடல் எழுதித்தருவார்.

டில்லிப் பேரரசே! இப்பொழுதாவது கண்ணைத் திறவுங்கள் நல்லதையே செய்யுங்கள். அரிச்சந்திரன் போல வாய்மையைக் கடைப்பிடியுங்கள். இலங்கைத் தமிழர்களைக் காப்பாற்ற சிந்தியுங்கள். சிறு எலியால்தான் சிங்கத்தின் வலை வெட்டப்பட்டது. சிங்கம் தலைநிமிர்ந்து நடந்தது. இலங்கைத் தமிழரின் அணைப்புத்தான் டில்லிப் பேரரசின் பாதுகாப்புக்கு உறுதுணை தரும்.

இந்தியக் குடியரசே! பிரபாகரனின் நிலைப்பாடு அவரது தலைவிதியை நிர்ணயித்தது. உங்களது நிலைப்பாடும் உங்கள் தலைவிதியை நிர்ணயிக்கும்.

மூன்று தலைவர்களினது கடிதங்களைப் பார்க்காத டில்லி பேரரசே! என் மடலைப் பார்ப்பீர்களா? பார்த்தாலும் சரியான அர்த்தத்தைக் கொள்வீர்களா? அதனாலே, என் மடலை இனியும் நீட்ட விரும்ப வில்லை. முடிக்கின்றேன். வணக்கம்.

(முற்றும்)

சிவமயம்

தோற்றம் 27.04.1942

மறைவு 30.04.2008

# நெஞ்சை விட்டகலா ஈராண்டு நினைவஞ்சலி

## திருமதி துரைராஜா தேவகி

[ஓய்வுபெற்ற் தொலைக்கல்வி போதனாசிரியையும், யாழ்ப்பாணம் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய பிரதி அதிபரும்]



காலத்தால் மறக்க முடியாத தாயே !
பாசத்தால் எம்மைக் கட்டுண்டறுத்த தாயே !
வந்தாரை வாழவைக்கும் பெருமனம் படைத்த தாயே !
பிள்ளைகளையெல்லாம் உன் பிள்ளைபோல் காத்தாயே !
காலமெல்லாம் கல்விக்கே சேவை செய்த தாயே !
நாம் இனி உம் திருமுகத்தை எப்போது காண்போம் தாயே!
உன் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்போம்.

புறாடிலேன், அரியாலை,
யாழ்ப்பாணம்.

கணவர்,
உற்றார், உறவினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். மாவட்டத்தில் தமிழ்க் கூட்டமைப்பின் தேர்தல் பின்னடைவுக்குக் காரணம் என்ன?

**கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் யாழ்.மாவட்டத்தில் தமிழரசுக் கட்சி சார்பில் போட்டியிட்ட சி.வி.கே. சிவஞானம், கடந்த 24 ஆம் திகதி நடைபெற்ற தமிழரசுக் கட்சியின் யாழ். மாவட்டக் கிளையின் பொதுச்சபைக் கூட்டத்தில் தேர்தல் பின்னடைவுகளுக்கான காரணத்தை விளக்கி உரையாற்றினார். அங்கு அவர் தெரிவித்த கருத்துகளைத் தொகுத்துத் தருகின்றார் 'குபேரன்.'**



சி.வி.கே.சிவஞானம்

யாழ்.மாவட்டத்தைப் பொறுத்தவரை ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவு பெற்றிருந்த பொன்சேகாவுக்குக் கிடைத்த வாக்குகளை விட, பொதுத் தேர்தலில் தமிழ்க் கூட்டமைப்புக்குக் கிடைத்த வாக்குகள் சுமார் நாற்பதாயிரம் குறைவாகும். மக்களின் அக்கறையின்மை, அதிருப்தி, உட்கட்சிக் குழப்பங்கள் போன்றவை இதற்குக் காரணமாக இருக்கலாம்.

வேட்பாளர் தெரிவு முறையாக இடம்பெறவில்லை. மாவட்ட முறைத் தேர்தல் இது என்று கூறப்பட்டாலும் வேட்பாளர் தெரிவு அதைச் சரியாகப் பிரதிபலிக்கவில்லை.

நான் நல்லூர்த் தொகுதியின் நிரந்தரக் குடியிருப்பாளன். முன்னரும் இரண்டு தேர்தல்களில் போட்டியிட்டிருக்கின்றேன். இத் தேர்தலில் என்னை விட நல்லூர்த் தொகுதியிலிருந்தே மேலும் ஐந்து வேட்பாளர்களைக் கூட்டமைப்பு தேர்தல் களத்தில் நிறுத்தியிருந்தது. இது, என்னை மிகவும் பாதித்தது. இவர்கள் வேறு தொகுதிகளைக் கவனிப்பார்கள் என்று கூறப்பட்டபோதும், நல்லூர்த் தொகுதி வாக்குகளையே இவர்கள் எல்லோரும் பிரித்தனர்.

வேட்பாளர் தெரிவின்போது யாழ்ப்பாணத் தொகுதிக்கு ஒருவரும், கோப்பாய்த் தொகுதிக்கு இருவரும், நல்லூர்த் தொகுதிக்கு அறுவருமாக மூன்று அடுத்தடுத்த தொகுதிகளை வசிப்பிடமாகக் கொண்ட ஒன்பது பேர் வேட்பாளர்களாக நிறுத்தப்பட்டனர். ஏனைய எட்டுத் தொகுதியிலிருந்தும் மூவர் நியமிக்கப்பட்டனர்.

வேட்பாளர் தெரிவின்போது ஏனைய பகுதிகளுக்கு அதிக கவனமும், இடமும் அளிக்கப்பட்டிருந்தால் அந்தந்தப் பகுதிகளில் இருந்து அதிக வாக்குகளை இன்னும் திரட்டியிருக்கக்கூடிய வாய்ப்புக் கிட்டியிருக்கும்.

தேர்தலில் வேட்பாளர்கள் தோற்கவில்லை. கட்சியே தோற்றது.

நேரடியாக ஐந்துபேரை இந்தப் பட்டியலில் தமிழரசுக் கட்சி நிறுத்தியது. ஆனால் ஒரு இடத்தை மட்டுமே தமிழரசுக் கட்சியால் பெற முடிந்தது.

கடந்த தடவை பெற்றிருந்த எட்டு இடங்களுடன் களமிறங்கிய கூட்டமைப்பினால் இம்முறை ஐந்து இடங்களையே தக்கவைக்க முடிந்தது.

கடந்த தடவை போல கூட்டமைப்பு இம்முறை எட்டு ஆசனங்களைப் பெற்றிருந்தால் எட்டு அங்கத்தவர்கள் நாடாளுமன்றுக்குத் தெரிவாகியிருப்பர். கூட்டமைப்பு ஐந்து இடங்களைப் பெற்றபடியால் ஐவர் தெரிவாகினர். எனவே, தோல்வி கூட்டமைப்புக்கே. தவிர, தெரிவாகாத வேட்பாளர்களுக்கு அல்ல.

தேர்தல் பிரசாரங்களில் உட்கட்சிப் போட்டி மக்களை வெறுப்படையவும் வாக்களிக்காமல் ஒதுங்கவும் வழி வகுத்தது என்பதை மறுப்பதற்கில்லை.எனக்கு வாக்களிக்க வேண்டாம் என எமது இரு வேட்பாளர்களே கூறி வந்தமை எனக்குத் தெரியும். சில வேட்பாளர்கள் தமது இலக்கத்துக்கு மட்டுமே வாக்களிக்க வேண்டும் என்று பிரசாரம் செய்தனர். வேறு சிலரோ தமக்கு மட்டும் வாக்களித்து ஏனைய எவருக்கும் வாக்களிக்கக்கூடாது எனவும் பிரசாரம் செய்தார்கள்.

என்னைத் தமிழ்க் காங்கிரஸ்காரர் என சிலர் விமர்சித்தனர். 'தமிழரசுக் கட்சிக்காரன் தேர்தல் ரிக்கெட்டுக்காகத் தமிழ்க் காங்கிரஸுக்கு வந்தவன்' - என்று கூறித் திரிந்தனர். கட்சி ரீதியாகப் பார்த்தால் இதில் சற்று நியாயம் இருக்கலாம்.

ஆனால் 58 வருடங்கள் தமிழரசுக் கட்சி சார்பானவனாக இருந்த என்னை 'இவன் காங்கிரஸ்காரன். தேர்தல் முடிந்ததும் காங்கிரஸுக்கே போய்விடுவான்' - எனத் தமிழரசுக் கட்சியினரில் ஒரு குழுவினரே பிரசாரம் செய்தமை கவலைக்குரியது.

'விடுதலைப்புலிகள்தான் ஏகப் பிரதிநிதிகள்' எனக் கூறி தமது விசுவாசத்தைக் காட்டிக்கொண்டோர் இப்போது புலி எதிர்ப்புக் கருத்தைப் பிரதிபலித்தமையும் கவலைக்குரியது.

ஆனால் நான், 1982 - 87 இல் எங்கே நின்றேனோ இப்போதும் அக்கருத்திலேயே நிற்கிறேன்.

இயல்பு வாழ்க்கை திரும்பிய பின்பே அரசியல் தீர்வு எனப் பேசி அரசியல் தீர்வு நடவடிக்கைகளை இழுத்தடிக்கக் கூடாது. இயல்பு நிலைக்குத் திரும்பலும், அரசியல் தீர்வு நடவடிக்கைகளும் சமாந்தரமாக முன்னெடுக்கப்பட வேண்டும். அரசியல் தீர்வு எட்டப்படாமல் இயல்பு நிலையை நாம் துரிதமாக உருவாக்கமுடியாது என்பதையும் நாம் மறந்துவிடக் கூடாது.

எனக்கு மட்டும் அப்படி எவ்வாறு விருப்பு வாக்குகளின் எண்ணிக்கை கனகச்சிதமாக மூன்று தொடர் பூச்சியங்களைக் கொண்டதாக - ஏழாயிரம் என - வரும் என்பது கவனிக்கத்தக்கது.

நான் ஒரு கணக்காளன். நிர்வாகி. இதன் பின்புலம் குறித்து எனக்குத் தெரியும். மக்களுக்கும் தெரியவரும்.

**பேராசிரியர் சிற்றம்பலம்**

இதேசமயம், இக்கூட்டத்தில் உரையாற்றிய பேராசிரியர் சிற்றம்பலமும், வேட்பாளர் தெரிவு தொடர்பாக சிவஞானம் தெரிவித்த கருத்தை அங்கு வழிமொழிந்து உரையாற்றினார்.

''வேட்பாளர் தெரிவுமுறை திருப்தி தரவில்லை. அது நியாயமாக இடம்பெறவில்லை. கொழும்பில் எடுக்கப்பட்ட தீர்மானத்தை இங்கு திணித்தார்கள். அதுவும் பின்னடைவுக்குப் பிரதான காரணம்.'' - என்றார் சிற்றம்பலம்.

*

# இலங்கை மீதான ஐ.நா.விசாரணைக்கு இந்தியாவும் ஜப்பானும் உதவ வேண்டும்

## மனித உரிமைக் காப்பகம் வேண்டுகோள்

கொழும்பு, மே.1

இலங்கையின் உள்நாட்டு மோதலின் இறுதித் தருணங்களில் இடம்பெற்றவை எனக் கூறப்படும் பாரிய மனித உரிமை மீறல் சம்பவங்கள் தொடர்பாக விசாரணை செய்வதற்கு ஐ.நா. எடுக்கும் முயற்சிகளுக்கு இந்தியாவும் ஜப்பானும் வெளிப்படையான - இதயபூர்வமான - ஆதரவை வழங்கவேண்டும் என்று சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பகம் வேண்டுகோள் விடுத்திருக்கிறது. அந்த அமைப்பின் ஆசியாவுக்கான ஆய்வாளர் மீனாக்ஷி கங்குலி இந்த வேண்டுகோளை விடுத்தார்.

இலங்கையை மனித உரிமை மீறல்களுக்கு பொறுப்புக் கூறச் செய்வதற்காக ஜப்பானும் இந்தியாவும் மேற்கொண்ட ஆசியப் பாணி இராஜதந்திர முயற்சிகள் தோல்வியடைந்துள்ளன என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை விவகாரம் தொடர்பாக ஆலோசனை கூறுவதற்காக பான் கீ - மூன் அமைக்கவுள்ள நிபுணர்கள் குழு முக்கியமான முன்னோக்கிய நடவடிக்கையாக அமையலாம் என்றும் குறிப்பிட்டுள்ள அவர், இதுபற்றி மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

இழைக்கப்பட்டதாகக் குற்றம் சாட்டப்படும் மனித உரிமை துஷ்பிரயோகங்கள் குறித்து தீவிர விசாரணைகளை மேற்கொள்வதற்கு இலங்கை தவறியுள்ளது.

பரந்துபட்ட சர்வதேச கரிசனைகளுக்குப் பதிலளிக்குமாறு மஹிந்த ராஜபக்ஷ அரசைக் கேட்டுக்கொள்வதில் ஆசிய பாணி இராஜதந்திரம் தோல்வியடைந்துள்ளது.

இலங்கையைப் பொறுத்தவரை இவ்வாறான மீறல்களுக்குப் பொறுப்புக் கூறச் செய்வதற்காகக் கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் நம்பிக்கையளிப்பனவாக இல்லை.

இலங்கையில் இடம்பெற்ற 16முக்கிய சம்பவங்கள் தொடர்பாக ஆராய்வதற்காக 2006இல் ஜனாதிபதி ஆணைக்குழுவொன்று நியமிக்கப்பட்டது. இதன் நடவடிக்கைகளைக் கண்காணிப்பதற்கு சர்வதேச நிபுணர் குழுவொன்று அமைக்கப்பட்டது.

எனினும், 2008இல் சர்வதேச பிரசித்தி பெற்ற நிபுணர்கள் குழு ஏமாற்றத்துடன் தனது பணியை இடைநடுவில் முடித்துக் கொண்டது.

ஜனாதிபதி [illegible] அரசின் தலையீடுகளுக்குள் சிக்கியது. அதன் [illegible] ஆணைக்குழுவின் முடிவை ஜனாதிபதி வெளியிடவில்லை.

2009 - 2010 ஆண்டுகளிலும் யுத்தம் முடிவடைந்த பின்னரும் இந்தப் போக்கு தொடர்ந்துள்ளது.

இலங்கை ஜனாதிபதி ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகத்துடன் இணைந்து வெளியிட்ட கூட்டறிக்கையில் சர்வதேச மனிதாபிமான மனித உரிமைச் சட்டங்கள் மீறப்பட்டமை தொடர்பான குற்றச்சாட்டுகளுக்குத் தீர்வுகாண சகல நடவடிக்கைகளும் எடுப்பதாகக் கொழும்பு உறுதியளித்திருந்தது.

ஒரு வருடம் கடந்த நிலையில் தனது வாக்குறுதிகளை நிறைவேற்ற அது எதனையும் செய்யவில்லை. இந்த விடயத்தில் ஆலோசனை வழங்குவதற்கான குழுவொன்றை அமைக்கும் பான் கீ - மூனின் முயற்சியை ராஜபக்ஷ அரசு கடுமையாக எதிர்த்துள்ளது.

இலங்கை தனது சகாக்கள் சிலரையும் இந்த விடயத்தில் தலையிடச் செய்துள்ளது.

இவ்வாறான சூழ்நிலையில் இலங்கையில் [illegible]தாகக் கூறப்படும் சம்ப[illegible] பொறுப்புக் கூறச் செய்வதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து ஆராயும் ஐ.நா.வின் முயற்சிக்கு ஜப்பானும் இலங்கையும் ஆதரவளிக்க வேண்டும்.

இந்த இருநாடுகளும் கொழும்பு மீது செல்வாக்குச் செலுத்தலாம்.

ஜப்பான் வீதிகள், குடிதண்ணீர் விநியோகம் உட்பட உட்கட்டுமானத் திட்டங்களுக்காகப் பெருமளவு நிதியுதவியை இலங்கைக்கு வழங்குவதற்கு முன்வந்துள்ளது.

இலங்கையில் இடம்பெற்ற பாரிய மனித உரிமை மீறல்களுக்குப் பொறுப்புக் கூறச் செய்வதற்கான நடைமுறையொன்று உருவாகும் பட்சத்திலேயே பாரிய அபிவிருத்தித் திட்டங்கள் வெற்றிபெறும்.

மிக நீண்ட காலமாக இந்தியாவும் ஜப்பானும் இலங்கையில் தேசிய நல்லிணக்கம், இடம்பெயர்ந்தவர்கள் மீளக் குடியமர்த்தப்படுதல், அரசியல் சீர்திருத்தம் தொடர்பாக அந்த நாட்டு அரசுடன் தொடர்புகொண்டு வருகின்றனர்.

எனினும் பொறுப்புக்கூறும் நடைமுறையில்லாத நிலையில் தமிழ் மக்கள் தாங்கள் தோற்கடிக்கப்பட்ட இரண்டாம் தரப் பிரஜைகளாக நடத்தப்படுகின்றனர் எனக் கருதும் பட்சத்தில் தேசிய நல்லிணக்க முயற்சிகள் பாதிக்கப்படலாம்.

மேற்குலகப் பாணியிலான வெளிப்படையான கண்டனங்களை விட இங்கிதமான வலியுறுத்துதலே சிறந்த வழிமுறை என ஜப்பானும் இந்தியாவும் கருதுகின்றன.

தனிப்பட்ட இராஜதந்திர நடவடிக்கைகளுக்கான இடமும் காலமுள்ளது. கடந்த ஒருவருட காலமாக மஹிந்த ராஜபக்ஷ அரசு இவ்வாறான திரையின் பின்னால் வழங்கப்பட்ட ஆலோசனைகளை அலட்சியம் செய்துள்ளது என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இலங்கை வங்கி அச்சுவேலிக் கிளையில் சித்திரைப் புத்தாண்டு சிறப்பு நிகழ்வாக இடம்பெற்ற சுயதொழில் முயற்சிப் பயனாளிகளுக்கு இலகுகடன் அடிப்படையில் கருவி சாதனங்கள் வழங்கும் நிகழ்வு நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

இந்நிகழ்வில் விருந்தினராகக் கலந்துகொண்ட ஏ.எஸ்.பூபாலசிங்கம் உட்பட வங்கி உயர் அதிகாரிகள் மங்கள விளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைப்பதையும் இலங்கை வங்கியின் அச்சுவேலிக் கிளை முகாமையாளர் த.புவனேந்திரன், இலங்கை வங்கி மாவட்ட முகாமையாளர் கே.பி.ஆனந்தநடேசன், இலங்கை வங்கியின் வடபிராந்திய செயற்பாட்டு முகாமையாளரும் பதில் பிராந்திய உதவிப் பொது முகாமையாளருமான வி.எஸ்.சிவநாதன் ஆகியோர் உரையாற்றுவதையும் பிராந்திய உதவிப் பொது முகாமையாளர் மரவேலை செய்யும் பயனாளிக்கு இயந்திரமொன்றைக் கையளிப்பதையும் படங்களில் காணலாம்.

*(படங்கள்: அச்சுவேலிச் செய்தியாளர்)*

# லஸந்த கொலைச் சூத்திரதாரிகளை ஏன் இன்னும் தண்டிக்கவில்லை?

## பத்திரிகையாளரைப் பாதுகாக்கும் குழு கேள்வி

கொழும்பு, மே.01

சண்டே லீடர் பத்திரிகையின் ஆசிரியர் லஸந்த விக்கிரமதுங்கவின் படுகொலைச் சூத்திரதாரிகள் கட்டாயம் சட்டத்தால் தண்டிக்கப்படவேண்டும் என்று பத்திரிகையாளர்களைப் பாதுகாக்கும் குழு என்கின்ற சர்வதேச ஊடக உரிமைகள் அமைப்பு நேற்றுக் கோரியுள்ளது.

கடந்த ஒரு தசாப்த காலத்துக்குள் உலகில் படுகொலை செய்யப்பட்ட சர்வதேச ஊடக ஜாம்பவான்களில் இவரும் ஒருவரென அந்த அமைப்பு லஸந்த விக்கிரமதுங்கவை பெயர் குறிப்பிட்டும் உள்ளது.

அடுத்த மாதம் 3ஆம் திகதி சர்வதேச ஊடக சுதந்திரதினம் உலகளாவிய ரீதியில் அனுஷ்டிக்கப்படவுள்ளது.இதைமுன்னிட்டு வெளியிட்ட அறிக் கையிலேயே பத்திரிகையாளர்களைப் பாதுகாக்கும் குழு இவ்வாறு குறிப்பிட்டுள்ளது.

அந்த அறிக்கையில் முக்கியமாகக் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு:-

கடந்த ஒரு தசாப்த காலத்துக்குள் உலகின் பத்திரிகைத்துறை ஜாம்பவான்கள் 10பேர் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். இந்த ஜாம்பவான்களில் இலங்கையின் லஸந்த விக்கிரமதுங்கவும் ஒருவர். அவர் நாட்டில் சமூக நல்லிணக்கம், இன ஐக்கியம் ஆகியவற்றை மேம்படுத்தப் பெரிதும் பாடுபட்டார். அதற்காக அரசுத் தரப்பினரை விமர்சித்தார். அவர் தாம் படுகொலை செய்யப்படுவார் என ஏற்கனவே நன்கு அறிந்திருந்தார்.

தமது மரணம் பற்றித் தாம் எழுதிய கட்டுரை ஒன்றில் எதிர்வு கூறியும் இருந்தார். சுமார் 25 வருட காலப் பத்திரிகைப் பணி மூலம் அரசுக்கு சிம்ம சொப்பனமாக விளங்கிய அவர் கடந்த வருடம் ஜனவரி 08ஆம் திகதி கொழும்புக்கு அருகில் வைத்து சுட்டுக்கொல்லப்பட்டார். மோட்டார் சைக்கிள்களில் வந்த எட்டுப் பேர் அவரைத் தாக்கினர். ஆனால் படுகொலைச் சூத்திரதாரிகள் எவரும் இன்னமும் சட்டத்தின் முன் நிறுத்தப்படவே இல்லை.

2004 ஆம் ஆண்டு முதல் இலங்கையில் 9பத்திரிகையாளர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளார்கள். ஆனால் குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்பட்டுத் தண்டிக்கப்படவேயில்லை. ஊடகவியலாளர்களின் உயிருக்கு உத்தரவாதம் இல்லாத பயங்கர நாடுகளில் ஒன்றாக இலங்கை தொடர்ந்தும் இருந்து வருகிறது.

(அ-சி)


**Hatton National Bank**

**அடகுப் பொருள்கள் ஏல விற்பனைக்கான அறிவித்தல்**

ஹற்றன் நஷனல் வங்கி, யாழ்ப்பாணம், சுன்னாகம், நெல்லியடி, ஸ்ரான்லி வீதி, மானிப்பாய் ஆகிய கிளைகளில் 28.02.2009 இற்கு முன்னர் அடகு வைத்து இதுவரை மீட்கப்படாத, கலாவதித் திகதியை நீடிக்க ஆவன செய்யாத வாடிக்கையாளரின் அடகு நகைகள் 08.05.2010 சனிக்கிழமை காலை 9 மணிக்கு இல.212, 214, ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள யாழ்.கிளையில் ஏலத்தில் விடப்படும் என்பதை அறியத்தருகின்றோம்.

உங்களின் பெறுமதி மிக்க பொருள்களை உடனே மீட்க முடியாவிட்டால்...

★கடனுக்குரிய வட்டியையும் கடனின் ஒரு பகுதியையும் [ரூபா.500] செலுத்தி

அல்லது

★தற்போதைய சந்தைப் பெறுமதிக்கும் அதிகரித்த கடன் தொகைக்கும் ஏற்ப உங்கள் அடகுப் பொருள்களை மீள அடகு வைத்து காலாவதித் திகதியை நீடித்துக்கொள்ளலாம்.

ஏல விற்பனைத் திகதியைப் பிற்போடும் மற்றும் ஏலத்தினை இரத்துச் செய்யும் உரிமை வங்கிக்கு உண்டு.

-ஹற்றன் நஷனல் வங்கி. [சி/567073]


**முதலாம் ஆண்டு நினைவஞ்சலி**

பிறப்பு 25 ★ 09 ★ 1946 இறப்பு 01 ★ 05 ★ 2009



**அமரர் ரூபி வேலாயுதபிள்ளை**
(தாதிய உத்தியோகத்தர், யாழ்.போதனா வைத்தியசாலை)

எம்மிரு விழிகளிலும் கண்ணீர் ஓயவில்லை
பன்னிரு திங்கள் பறந்தனவே நொடிப் பொழுதில்
கண்ணின் மணிபோல எம்மைக் காத்த அம்மாவே
என்றென்றும் நின் நினைவு எம்முடனே.

கணவர், பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

வேல் வைத்தியசாலை,
நீர்வேலி. (97710)


**கமலக்கண்ணன் திருமண சேவை**

டாக்டர்கள், இஞ்சினியர்கள் மணமக்களும் பட்டதாரிகள், ஆசிரியர்கள், லிகிதர்கள், வர்த்தகர்கள் மேலும் செவ்வாயுள்ள பாவம் கூடிய மணமக்களும் பாவம் குறைந்த மணமக்களும் வெளிநாட்டில் பிரஜா உரிமை பெற்ற மணமக்களும், விவாகரத்துப் பெற்ற உள்நாடும் வெளிநாட்டு மணமக்களும் எம்மிடமுள்ளனர். சந்திக்கும் நேரம் காலை 9-12 மணி வரையும் மாலை 3.30-5.45 மணி வரையும் சந்தித்துக்கொள்ளவும்.

தொடர்பு: தொ.பே: 0776070862, 0214920266
171/7, நல்லூர் வடக்கு வீதி, மனோன்மணி அம்மன் கோயிலடி, நல்லூர்.

**கணக்காளர் தேவை**

யாழ்.நகரின் மத்தியில் இயங்கும் "யாழ் பேபி கேர்ஸ் அன் பார்மசி" நிறுவனத்திற்கு முன் அனுபவம் நிறைந்த கணக்காளர் தேவை.

[illegible]
[illegible] மணிக்கு.
இடம்:- சன்றைஸ் மெடி கிளினிக்
388, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.


## சனசமூக நிலையங்களைச் சீர்செய்ய புதிய பதிவு இலக்கம் வழங்கப்படும்

யாழ்ப்பாணம், மே.01

யாழ்.மாவட்டத்தில் உள்ள அனைத்து சனசமூக நிலையங்களைச் சீர்செய்யும் பொருட்டு புதிய பதிவு இலக்கங்கள் வழங்கப்படவுள்ளன.


பதிவுக்கான விண்ணப்பப் படிவங்கள் அந்தந்தப் பிரதேச சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மூலம் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

சனசமூக நிலையத்தினர் இப் படிவத்தைப் பெற்று பூர்த்தி செய்து சனசமூக நிலைய ஆண்டுப் பொதுக்கூட்ட அறிக்கை, காணி உறுதிப் பத்திரத்தின் பிரதி, நிலைய வரைபடம் ஆகியவற்றுடன் இன்று வெள்ளிக்கிழமை சனசமூக அபிவிருத்தி அலுவலரிடம் கையளிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஒ-207)

**12ஆம் ஆண்டு நினைவு தினம்**

மண்ணில் 10 ★ 11 ★ 1944 விண்ணில் 14 ★ 05 ★ 1998



**அமரர் மாசிலாமணி அண்ணாச்சாமி**
(முன்னாள் நடத்துநர், இ.போ.சபை)

வளமில்லாப் பொருளாதாரத்திலும்
வசதிகளில்லாப் பொழுதிலும்
வாய்ப்புக்களில்லாக் காலத்திலும்-எம்
வளமான கல்விக்கான வித்திட்டு
வளர்த்தெடுத்திட்ட எம் தந்தையே-எம்
வளர்ச்சிகண்ட நிலைகளை
வந்தொரு தடவை பார்க்க மாட்டீர்களா!

மனைவி, பிள்ளைகள்,
மருமகன், பேரப்பிள்ளைகள்.

கயட்டை,
ஆவரங்கால் கிழக்கு, புத்தூர். (97604)

**31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்**

பிறப்பு 01 ★ 07 ★ 1948 இறப்பு 29 ★ 03 ★ 2010



**அமரர் நன்னியன் செல்லையா**
(உரிமையாளர், சண்டிலிப்பாய் உதயன் எரிபொருள் நிரப்பு நிலையம்)

கடந்த 29.03.2010 அன்று இறைபதமடைந்த எமது அன்புத் தெய்வத்தின் மறைவுச் செய்திகேட்டு ஆறுதல் கூறி எமது துயரில் பங்கேற்ற அனைவருக்கும் எமது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்வதோடு, இன்று [01.05.2010] சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்.

7ஆம் கட்டை,
சண்டிலிப்பாய். (97603)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

**16.11.1990**

* ரெலோ, புளொட், ஈ.பி.டி.பி. ஆகிய விடுதலைப்புலிகளுக்கு எதிரான தமிழ் இயக்கங்கள் பாதுகாப்புப் படையினருடன் இணைந்து கிழக்கில் செயற்படுகின்றன என அமைச்சர் ரஞ்சன் விஜேரத்ன தெரிவிப்பு.
* அம்பாறை மாவட்டத்திலுள்ள சென்ரல் காம்ப் இராணுவ முகாமின் ஆறு காவலரண்கள் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தி அவற்றைக் கைப்பற்றியதாகத் தெரிவிப்பு.

**17.11.1990**

* யாழ்.போதனா ஆஸ்பத்திரி மீது விமானப் படையினர் விமானத் தாக்குதல் எதனையும் நடத்தவில்லை என பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் சிறில் ரணதுங்க தெரிவிப்பு.
* பல்வேறு குற்றங்களுக்காக இந்தியக் கடற்படையால் கைது செய்யப்பட்டுத் தமிழகப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்ட இலங்கைத் தமிழ்ப் போராளிகளை தமிழக அரசு விடுவித்துவிட்டதென இந்தியக் கடற்படையின் புதிய தளபதி குற்றச்சாட்டு.

**18.11.1990**

* வடக்கு - கிழக்கு மாகாணம் இணைந்திருக்க வேண்டுமா அல்லது வேண்டாமா என்பதைத் தீர்மானிக்கும் பொறுப்பைத் தமிழர்களிடமும் முஸ்லிம்களிடமும் விட்டுவிடவேண்டும் என நாடாளுமன்றத்தில் இடம் பெற்ற வடக்கு - கிழக்கு நிலைமை பற்றிய விவாதத்தின் போது ஐக்கிய சோசலிச அணியின் நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்காரா தெரிவிப்பு.
* திருகோணமலையில் இருந்து இடம் பெயர்ந்து வந்த குடும்பங்கள் வசிப்பதற்கு நாகர் கோவில் மேற்குப் பகுதியில் செஞ்சிலுவைச் சங்கத்தால் அமைக்கப்பட்ட தற்காலிக குடிசைகள் சம்பிரதாய பூர்வமாக வழங்கப்பட்டதாகத் தெரிவிப்பு.

**19.11.1990**

* இலங்கை அரசு வெளிநாடுகளிடம் வாங்கிய பெருவாரியான நவீன ஆயுதங்கள் மற்றும் இராணுவத் தளபாடங்கள் கொழும்புத் துறைமுகத்தில் கொண்டு வந்து இறக்கப்பட்டதாகத் தெரிவிப்பு.
* சொல்லொணாத துன்பங்களில் சிக்கித் தவிக்கும் கிழக்குத் தமிழ் மக்களுக்கு மாவீரர் வாரத்தில் உதவுமாறு தமிழ் மக்களிடம் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி கோரிக்கை.

**20.11.1990**

* மாவிட்டபுரம் - கீரிமலை வீதியில் தச்சன் காட்டுப் பகுதியில் இருந்த இராணுவ மினிமுகாம் ஒன்று நேற்று அதிகாலை விடுதலைப் புலிகளால் தாக்கி அழிக்கப்பட்டதாகத் தெரிவிப்பு.
* இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் நோக்கில் இலங்கை அரசுடன் பேச்சுக்களை நடத்தச் சர்வதேச நாடுகள் பல தயாராக இருக்கின்ற போதிலும் இந்தியா அதனை விரும்பாது தடையாக இருந்து வருவதாக ஆசிய ஆயர் மன்ற இலங்கைக்குழுவின் ஆலோசகர் தெரிவிப்பு.

**21.11.1990**

* தற்போது தற்காலிகமாக இணைக்கப்பட்டிருக்கும் வடக்கு - கிழக்கு மாகாணங்களை உடனடியாக அரசு தனித்தனியாகப் பிரிக்க வேண்டும் என முன்னாள் எதிர்க்கட்சித் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அனுரா பண்டாரநாயகா நாடாளுமன்றத்தில் தெரிவிப்பு.
* இலங்கைக்கு உதவும் நாடுகள் குழு இலங்கை அரசுக்கு மேலும் நிதியுதவி அளிக்கும் சாத்தியம் உண்டு என உலக வங்கி வட்டாரங்கள் தெரிவிப்பு.

**22.11.1990**

* மாவீரர் நாள் நிகழ்வுகள் நேற்று குடாநாடு முழுவதும் உணர்ச்சி பூர்வமாக ஆரம்பமாகியுள்ளதாகத் தெரிவிப்பு.
* தஞ்சம் கோரிச்சென்று மேற்கு ஜேர்மனியில் அகதி முகாங்களில் தங்கியிருந்த ஈழத்தமிழர்களுக்கு ஜேர்மன் அரசு தான் இதுவரை வழங்கிவந்த பல வசதிகளையும் சலுகைகளையும் இரத்துச் செய்துள்ளதாகத் தெரிவிப்பு.

**23.11.1990**

* வவுனியா நகரப் பகுதியிலும் அதன் சுற்றாடலிலும் விமானத் தாக்குதல்களைத் நடத்த அரச படையினர் ஏற்பாடுகளைச் செய்து வருகின்றார்கள் என்பதை அண்மையில் இராணுவத் தடைமுகாங்களில் வைத்துப் படையினர் பொதுமக்களுக்கு விநியோகித்த துண்டுப் பிரசுரமொன்றின் மூலம் சூசகமாக வெளிப்படுத்தியுள்ளனர் எனத் தெரிவிப்பு.
* இனப்பிரச்சினை தொடர்பாக முஸ்லீம் மக்களது நிலைப்பாட்டைத் திரட்டும் முகமாக முக்கிய மாநாடொன்றை சபாநா யகர் எம்.எச்.முகமது கூட்டவுள்ளார் எனத் தெரிவிப்பு.

**24.11.1990**

* மாங்குளம் பகுதியில் நேற்று முன்தினம் முதல் இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் இடம்பெற்றுவரும் சண்டையில் இராணுவத்தினருக்கும் பெரும் இழப்புக்கள் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிப்பு.
* இனப்பிரச்சினைத் தீர்வு குறித்து இலங்கை அரசுடன் பேச்சுவார்த்தை நடத்த இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் சுக்லாவை இந்திய அரசு விரைவில் கொழும்புக்கு அனுப்பி வைக்கவிருப்பதாக இந்தியப் பிரதமர் சந்திரசேகர் தெரிவிப்பு.

**25.11.1990**

* மாங்குளம் இராணுவ முகாம் விடுதலைப்புலிகளால் முற்றாக அழிக்கப்பட்டதாகவும், அங்கிருந்து அரச படையினர் பல நூற்றுக்கணக்கில் உயிரிழந்துள்ளதாகவும் தெரிவிப்பு.
* மாங்குளம் இராணுவ முகாம் மீதான தமது தாக்குதலில் கரும்புலி லெப்டினன்ட் கேணல் போர்க் மற்றும் 51விடுதலைப்புலி உறுப்பினர்கள் உயிரிழந்ததாகத் தெரிவிப்பு.

**26.11.1990**

* விடுதலைப் புலிகளால் தாக்கி அழிக்கப்பட்ட மாங்குளம் இராணுவ முகாமிலிருந்து சுமார் முந்நூறுக்கும் அதிகமான இராணுவச் சிப்பாய்களின் கதி குறித்து எதுவும் தெரியவில்லையென கொழும்பில் பாதுகாப்புப்படை வட்டாரங்கள் தெரிவிப்பு.
* வடக்குக் கிழக்கில் அரச படையினர் மேற்கொண்டுவரும் தாக்குதல்களினால் பாதிக்கப்படுவோரின் புள்ளி விவரங்கள் ஐ.நா. சபையால் திரட்டப்பட்டு வருவதாக தெரிவிப்பு.

**27.11.1990**

* மாங்குளம் நிலைமை மிகவும் கவலைக்கு இடமானதொன்று என பாதுகாப்புத்துணை அமைச்சர் ரஞ்சன் விஜேரத்னா தெரிவிப்பு.
* 1987ஆம் ஆண்டில் கைச்சாத்திடப்பட்ட இலங்கை இந்திய ஒப்பந்தம் தற்போது செயழிழந்து விட்டதாக எதிர்க்கட்சித் தலைவி சிறிமாவோ தெரிவிப்பு.

**28.11.1990**

* மாங்குளம் இராணுவ முகாமை அரச படையினர் விடுதலைப் புலிகளிடம் பறிகொடுத்ததையடுத்து அரச வட்டாரங்களில் பெரும் நெருக்கடி நிலை தோற்றியிருப்பதாக ஊகம் தெரிவிப்பு.
* எமது பாரம்பரிய பிரதேசத்தை மீட்கும்வரை எமது தேசியக் கொடியாகப் புலிக்கொடியையும், தேசிய நாளாக நவம்பர் 27ஆம் திகதியையும் தாம் பிரகடனப் படுத்துவதாக விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியின் தலைவர் தெரிவிப்பு.

**29.11.1990**

* கிளிநொச்சி,ஒட்டுசுட்டான் பகுதியில் அரச படையினரால் மேற்கொண்ட விமானக் குண்டுவீச்சுத் தாக்குதல்களில் ஒன்பது அப்பாவிப் பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிப்பு.
* மாங்குளம் இராணுவ முகாமை விடுதலைப் புலிகள் கைப்பற்றியதன் மூலம் வட பகுதியின் முக்கிய பகுதிகள் முழுவதையும் விடுதலைப் புலிகள் தம்வசப்படுத்தி விட்டுள்ளதாக அமைச்சர் ரஞ்சன் விஜேரத்ன தெரிவிப்பு.

**30.11.1990**

* மாங்குளத்தில் இராணுவ முகாம் முற்றாகத் தகர்த்தெறியப்பட்டமை குறித்து நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவி அறிக்கையொன்றைச் சமர்ப்பித்து தோல்விக்காக அரசு மீது குற்றம் சாட்டியுள்ளதாகத் தெரிவிப்பு.
* யாழ்.மாவட்டத்தில் 1983ஆம் ஆண்டு முதல் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையால் மரணமடைந்த பொதுமக்களது குடும்பங்களுக்கு நஷ்டஈடு வழங்கும் அரசின் நடவடிக்கை குறிப்பிட்ட நஷ்டஈட்டை வழங்குவதற்கான பணம் யாழ்.செயலகத்திற்கு அனுப்பப்படாமையால் தடைப்பட்டுள்ளதாகத் தெரிவிப்பு.

# ஐ.தே.கவில் இணைவது குறித்து மங்கள எம்.பி. அடுத்த வாரம் முடிவு

கொழும்பு, மே 1

ஐக்கிய தேசியக் கட்சியில் இணைகின்றமை குறித்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மக்கள் பிரிவின் தலைவர் மங்கள சமரவீர எம்.பி.அடுத்த வாரம் இறுதி முடிவு எடுப்பார் என்று அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

ஐக்கிய தேசியக் கட்சியில் இணைய வேண்டும் என்று மங்கள சமரவீர எம்.பி. தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி - மக்கள் பிரிவினருக்கு ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க நல்லெண்ண அழைப்பு விடுத்துள்ளார்.

இந்த அழைப்புக் குறித்து மங்கள சமரவீர அணியினர் சாதகமாகப் பரிசீலித்து வருகின்றனர். இந்த அழைப்பை ஏற்றுக்கொண்டு ஐ.தே.கவில் சேரும் பட்சத்தில் மங்கள சமரவீர எம்.பிக்கு ஐ.தே.கவில் மிக முக்கிய பதவி ஒன்று வழங்கப்படவுள்ளது. அத்துடன் தேசியப் பட்டியல் எம்.பி.நியமனம் ஒன்றும் ஐ.தே.கவால் மங்கள சமரவீர அணியினருக்கு வழங்கப்படுமென்றும் வாக்குறுதி வழங்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி - மக்கள் பிரிவின் உயர்மட்டக் குழுவினர் அடுத்த வாரம் ஒன்று கூடிக் கலந்தாலோசித்து ஐ.தே.கவுடன் இணையலாமா இல்லையா என்பது குறித்து இறுதி முடிவுக்கு வரவுள்ளனர். (சி)

# புத்தக சாலை

## மாணிக்க ஜோதி



யாழ்.கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய அதிபர் விநாயகன் மாணிக்கத்தின் மணிவிழாவும் சேவை நலன் பாராட்டு விழா நிகழ்வின் ஓர் அங்கமாக 'மாணிக்க ஜோதி' எனும் மணி விழா மலர் வெளியிடப்பட்டுள்ளது.

கல்லூரியின் மணிவிழா மலர் குழுவினால் வெளியிட்டு வைக்கப்பட்டுள்ள இந்த மலரின் கல்விப் புலம் சார்ந்தோரின் வாழ்த்துரைகள் பல இடம்பெற்றிருக்கின்றன.

அதில் சரவணைக் கடல் நீர் ஏரியும் வேலணை சிற்றருவியும் எனும் தலைப்பிலான வாழ்நாள் பேராசிரியர் பொ.பாலசுந்தரம் பிள்ளையின் ஆக்கமும், 'கூட்டிய பெறுமதிக்கான வரிக்கணக்கீடு' எனும் தலைப்பில் யாழ்ப்பாண உயர் தொழில்நுட்ப நிறுவனத் தலைவர் வி.செந்தில் ராஜாவின் ஆக்கமும் இடம்பெற்றிருக்கின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

ஐம்பத்தொரு பக்கங்களைக் கொண்டிருக்கும் இந்த சிறிய நூலில் மணிவிழா நாயகனின் வாழ்வியற் பதிவுகளும் புகைப்படங்களும் பின்னிணைப்பாக இணைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## குருளைச் சாரணர் கையேடு




சுப்பிரமணியம் புவன் எழுதிய 'குருளைச்சாரணர் கையேடு' எனும் நூல் வெளிவந்துள்ளது.

மாணவ சமூகம் வெறுமனே புத்தகப் பூச்சியாக நின்று விடாது சமூகப் பொறுப்புள்ளவர்களாகவும், சமூகசேவையுடையவர்களாகவும் தம்மை மாற்றிக் கொள்ள வேண்டும் என்ற நோக்கத்தோடு காலத்தின் தேவையறிந்து இந்நூல் வெளியிடப்பட்டுள்ளது.

குருளைச் சாரணியத்தில் வழங்கப்படும் சின்னங்கள், அங்கத்துவச் சின்னங்கள், வெண்கலத்தாரகை, வெள்ளித்தாரகை போன்றவற்றைப் பெறவேண்டிய தகைமைகள்; அவற்றுக்கான பயிற்சிநெறிகள் என்பவற்றை விரித்துக் கூறுவதோடு மேலும் பல்வேறு அம்சங்களைத் தாங்கி 'குருளைச்சாரணர் கையேடு' நூல் வெளிவந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

## கலங்கரை




உடுப்பிட்டி மகளிர் கல்லூரியின் நூலக வாசகர் வட்டத்தின் வெளியீடான 'கலங்கரை' எனும் நூல் வெளிவந்துள்ளது.

உடுப்பிட்டி மகளிர் கல்லூரியின் நூலகத்தைப் பயன்படுத்துகின்ற ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோரின் ஆக்கங்களைத் தாங்கி 'கலங்கரை' வெளிவந்துள்ளது.

எழுத்தாக்கத் துறையில் உடுப்பிட்டி மகளிர் கல்லூரி வளர்ச்சியும், எழுச்சியும் மென்மேலும் பெற்றுக்கொள்ள கலங்கரை விளக்காக கலங்கரை விளங்கும் என்பதில் எவ்வித ஐயப்பாடும் இல்லை என்று சொல்லுமளவுக்கு தரமான ஆக்கங்களைத் தாங்கி வெளிவந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

## கடவுளோடு பேசுதல் சில ஆன்மீகக் குறிப்புகள்



ஈழத்துச் சிறுகதைப் பரப்பில் தனக்கென தனித்துவ் அடையாளத்தைப் பதித்துக் கொண்ட தாட்சாயணி (செல்வி பிரேமினி சபாரட்ணம்) புதிய பரிசோதனை முயற்சி ஒன்றை மேற்கொண்டு 'கடவுளோடு பேசுதல் சில ஆன்மீகக் குறிப்புகள்' என்னும் நூலை ௌியிட்டுள்ளார்.

ஆன்மீகத்தில் அர்ப்பணிப்பு மிக்க தேடலை இவர் மேற்கொண்டதற்கு சான்றாக இந்நூல் தமிழ் இலக்கியப் பரப்பில் புதுப்படையலாக வந்துள்ளது.

இந்திய மகாகவி ரவீந்திரநாத்தாகூரின் கீதாஞ்சலி நூலை வாசித்தது போன்றதோர் அனுபவம் இதனை வாசிக்கும் போது எமக்கு ஏற்படுகின்றது.

கருவறையில் தொடங்கும் இந்த நவீன மாற்றங்கள் பலவற்றை உள்வாங்கி இறுதியில் மரணத்தின் வாசலில் முடிவடைகின்றது.

குறித்த ஒரு மதம் சார்ந்ததாக அன்றி எல்லா மதத்தவரும் வாசித்து அனுபவிக்கத்தக்கதாகவும் சர்வதேசத்திற்கும் பொருந்தத்தக்கதாகவும் தற்கால சிக்கல்களினூடு அத்தியாயங்கள் விரிவடைந்து செல்வது நூலிற்கு ஒரு கனதியை வழங்குவதற்கும் அப்பால் அதனை மேலும் சுவாரசியமும் உடையதாக்குகிறது என புலோலியூர் ஆ.இரத்தினவேலோன் தனது அணிந்துரையில் குறிப்பிட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கலைமகள் அழகு நிலா ஆழகுக்கலைப் பயிற்சி நிலையம்

ஆறு நாள்கள் பயிற்சி இடம்பெற்று பயிற்சி நிறைவில் சான்றிதழ் வழங்கப்படும். இப்பயிற்சியின் மூலம் ஓர் அழகுநிலையம் நடத்தும் திறமையைப் பெற்றுக் கொள்ளலாம். பயிலவிரும்பும் மாணவர்கள் அனுமதியைப் பெற்றுக்கொள்ளவும்.



பயிற்சிகள்

- ★ Facial (5 வகை)
- ★ Waxing
- ★ Threading
- ★ Pimple Treatment
- ★ Hair Stariting
- ★ Hair Perming
- ★ Hair Colouring
- ★ Hair Dye
- ★ Hair Cut
- ★ Hot oil massage
- ★ Bleaching
- ★ Pedeicure manicure
- ★ கறுப்புக்காய்கள் இயற்றிறம் மூலம் அகற்றப்படும்.
- ★ Bridal makeup (4 வகை)

பயிற்சிக்கட்டணம் நேரில்
பயிற்சி ஆரம்பம் 05.05.2010
பயிற்சி நேரம் -காலை 9 மணி - பி.ப. 3 மணி வரை
தொடர்புகள் : 077 3719071, 021 4908151

**கலைமகள் அழகுநிலா**
390, பிரதான வீதி, பஸ்ரியன் சந்தி, யாழ்ப்பாணம்.


## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 17 ★ 12 ★ 1942



விண்ணில் 22 ★ 04 ★ 2008

அமரர் **செல்லையா சிவசம்பு (G.S.)**

திதி: திருதியை

ஆண்டுகள் இரண்டு சென்றாலும்
ஆறாது எம் துயரம்
மலர்ந்த உன் அன்பு முகம்
மண்ணில் மடிந்து போனதுவே
என்றும் உன் நினைவுகளுடன்
அஞ்சலிகள் உன் ஆத்ம சாந்திக்கு.

அத்தாய்,
அல்வாய்.

மனைவி, பிள்ளைகள்.

## அனுமதி அட்டைகளை பெற்றுக்கொள்ளவும்

யாழ்ப்பாணம்,மே 1

குடியேற்ற உத்தியோகத்தர் பதவிக்கு ஆள்சேர்ப்புச் செய்வத்தற்கான போட்டிப் பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் இதுவரை கிடைக்கப்பெறாதவர்கள் (நலன்புரி நிலயங்களிலிருந்து விண்ணப்பித்து முகாமிலிருந்து வெளியேறியவர்கள்) இன்று சனிக்கிழமை காலை 9மணி தொடக்கம் கீழ் குறிப்பிடப்படும் அலுவலகங்களில் அனுமதி அட்டைகளைப் பெற்றுக்கொள்ளுமாறு வடமாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர் அறிவித்துள்ளார்.

வவுனியா, செட்டிகுளம் நலன்புரி நிலையத்திலிருந்து விண்ணப்பித்தவர்கள் தமது அனுமதி அட்டைகளை கிளிநொச்சி உதவி உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகத்தில் அல்லது வவுனியா தெற்கு வலயக்கல்வி அலுவலகத்திலும், யாழ்.மாவட்டத்தில் உள்ளவர்கள் (நலன்புரிநிலையத்திலிருந்து வெளியேறியவர்கள் உட்பட) விண்ணப்பித்தவர்கள் தமக்குரிய அனுமதி அட்டைகளை இல.48, காட்டுக்கந்தோர் ஒழுங்கை முகவரியில் அமைந்துள்ள பிராந்திய ஆணையாளர் அலுவலகத்திலும் பெற்றுக்கொள்ளமுடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (50-201)

## மின்தடை

யாழ்ப்பாணம், மே 1

அவசர திருத்த வேலைகள் காரணமாக நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8மணி தொடக்கம் பிற்பகல் 5மணிவரை வடமராட்சிப் பிரதேசம் முழுவதும் மின்சார விநியோகம் தடைப்படும் என இலங்கை மின்சாரசபையின் சுன்னாகம் பிராந்திய அலுவலக மின் அத்தியட்சகர் அறிவித்துள்ளார். (50-201)


**ஒரு விற்பனைக்குண்டு:**
பழைய ஓடுகள் விற்பனைக்குண்டு தொடர்பு: 14, முதலியான் லேன், நல்லூர் தெற்கு, யாழ்ப்பாணம்.





### உத்தியோகபூர்வ முடிவுகள்

டிக்கட் தொடர் இல. 701375302 முதல் 701390842 வரை. சீட்டிழுப்பு இல. 643 திகதி 29-04-2010

வெற்றி எண்கள்

**18 20 38 45 L** (ஆங்கில எழுத்து)

ஜக்பொட் பரிசு ரூ. 17,399,770/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | - | 17,399,770/= | - |
| 4 இலக்கங்கள் பொருந்தினால் | 01 | 400,000/= | 400,000/= |
| 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 22 | 2,000/= | 44,000/= |
| 3 இலக்கங்கள் பொருந்தினால் | 318 | 1,000/= | 318,000/= |
| 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 542 | 1,000/= | 542,000/= |
| 2 இலக்கங்கள் பொருந்தினால் | 13410 | 60/= | 804,600/= |
| 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 6377 | 40/= | 255,080/= |
| 1 இலக்கம் பொருந்தினால் | 157702 | 20/= | 3,154,040/= |
| | | மொத்தம் | ரூ. 5,517,720/- |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 08 | 50,000/= | 400,000/= |

ஆலிந்தயே வாசனா வெற்றியாளர்கள்
தங்கக்காசு வெற்றியாளர் - H.G.நிசன்சாலா டி சில்வா - கண்டி.
கையடக்கத் தொலைபேசி வெற்றியாளர் - H.P.M அமித சமிந்த - நாரன்கொடை.

ரூபா.50,000 வீதம் பணப்பரிசுகள் வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்.

| | |
|---|---|
| கம்பஹா | 701388116-5-46 |
| கம்பஹா | 701386258-1-10 |
| மாத்தறை | 701380187-9-13 |
| திருகோணமலை | 701384702-6-04 |
| பதுளை | 701376837-7-14 |
| காலி | 701389271-3-05 |
| மட்டக்களப்பு | 701386112-6-34 |
| கேகாலை | 701375680-5-26 |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 5,917,720/=

எதிர்வரும் திங்கட்கிழமை சுப்பர் ஜக்பொட் **ரூ. 17,826,940/=**

தொடர் இல. 601434897 க்கு மேற்பட்ட மஞ்சள் நிற டிக்கட்டுகள் 2010 மே 03 ஆம் திகதி திங்கட்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு - 02
தொ.பே: 2335546/7

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்


## ஆங்கில மொழிமூல ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி

கலைமகள் சர்வதேச கல்லூரியில் ஆங்கில மொழிமூல ஆசிரியர் பயிற்சிநெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**தகைமை:**
க.பொ.த (உ/த) சித்தியடைந்தோர்

**வயதெல்லை:**
2010 ஜனவரியில் 35 வயதிற்கு மேற்படாதோர்

காலஎல்லை : ஒரு வருடம்

**அடையும் இலக்கு:**
பயிற்சிக் காலத்தின் பின் எமது சர்வதேசக் கல்லூரியில் ஆங்கில மொழிமூல ஆசிரியராக நியமனம் செய்யப்படுவார்.

நேர்முகத் தேர்வு:
3,4,5 ஆம் திகதிகளில் காலை 9மணிமுதல் மதியம் 2மணிவரை
நேர்முகத் தேர்விற்கு சமூகம் தரும்போது கல்விச்சான்றிதழ்களின் மூலப் பிரதிகளுடன் சமூகம் தரவும்.

தேர்வுக்கு சமூகம் தரவேண்டிய இடம்:
*Kalai Magal International Teachers Training College*
Muthali Kovil Lane, Kokuvil.
(குளப்பிட்டிச் சந்தி அருகில்)

மேலதிக விபரங்களுக்கு:
0778834592, 021 2222773

## Diploma in English & IELTS

சிறந்த ஆங்கில அறிவைப் பெற, கூச்சமின்றி எந்தச் சூழ்நிலையிலும் ஆங்கில மொழியில் சரளமாக உரையாட இலக்கண சுத்தமாக எழுத, மொழி பெயர்ப்புச் செய்ய, கடினமான ஆங்கிலமொழி நடையையும் வாசித்து விளங்கிக்கொள்ள

- க.பொ.த. (உ/த) சித்தியடைந்தோர்
- தொழில் புரிவோர்
- உயர் கல்வி பயில்வோர்
- ஆங்கிலப் புலமை விரும்புவோர்
- பாடசாலை மாணவர்கள்

அனைவருக்கும் வாரநாள்களிலும் வார இறுதி நாள்களிலும் (சனி, ஞாயிறு) விசேட திறமைமிக்க விரிவுரையாளர்கள் மூலம் இலகுவாகப் பயிற்சி நெறிகள் மேற்கொள்ளப்படுகின்றன. புதிய வகுப்புகள் மே 5 முதல் எமது நிறுவனத்தின் கீழ்வரும் கிளைகளில் மேற்கொள்ளப்படும்.

**KALAIMAGAL INTERNATIONAL COLLEGE**

53/A, நுணாவில் கிழக்கு, சாவகச்சேரி. (கொமர்ஷல் வங்கி அருகில்)
முதலி கோயில் ஒழுங்கை, கொக்குவில். (குளப்பிட்டிச் சந்திஅருகில்)

தொ.பே.0778834592, 0212222773


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ...னை கண்ணீர் விடுகின்றாள்...



வெளிப்பாடாகும். சுதேசியக் கல்வியக்கத்தின் முன்னோடிப் பாடசாலைக்குள் ஒன்றான இதற்கு முதலடி 1872 இல் இடப்பட்டதாயினும் இன்றுள்ள இடத்தில் அதனெழுச்சி என்பது 1890 இல் ஈழத்துச் சைவ மறுமலர்ச்சியின் ஒரு பகுதியாக நிகழ்ந்ததாகும்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் மூத்ததும், காலனிய காலக் கட்டுமானப் பண்புகளை ஏற்றெழுந்ததுமான மேற்படி பிரார்த்தனை மண்டபம் நூற்றாண்டுகளைக் கடந்துள்ள ஒரு கட்டுமானமாகும். கட்டடவியல் ரீதியாகவும், பண்பாட்டு வரலாற்றுச் சான்றாதாரம் என்ற வகையிலும் மேற்படி மண்டபம் மிக முக்கியமான மரபுரிமைச் சொத்தாகியுள்ளது. (Cultural Property) இவ்விதமான சமூக வரலாற்று முதன்மை மிகுந்த கட்டுமானங்கள் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி தவிர வேறும் பல பாடசலைகளிலும் உண்டெனினும், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் இருக்கும் இந்த மண்டபமே இன்றுள்ள வீதி 'அபிவிருத்திச்' செயற்பாடுகளுக்கு அகப்பட்டு தனது எதிர்கால இருப்பிற் கான அச்சுறுத்தலை அதிகம் எதிர்கொண் டுள்ளது என்பதுதான் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி

ம.திருக்குமார்



மண்டபம் பற்றி முதன்மை கொடுத்து இப்போது பேசுவதற்கான அவசியமும் - அவசரமாகும்.

அதாவது, எந்தவிதமான தீர்க்க தரிசனமும், அபிவிருத்தி பற்றிய எந்தத் தொலைநோக்கும், விவாதமுமின்றி முன்னெடுக்கப்படும் கே.கே.எஸ் (வீதியுட்பட) வீதி அகலிப்பு என்ற செயற்பாடு பகுதியாகவோ,




முழுமையாகவோ தின்று தீர்த்து விடக்கூடிய மரபுரிமைச் சொத்துக்களின் பட்டியலுள் மேற்படி யாழ்ப்பாணம் இந்துக்கலூரியின் பிரார்த்தனை மண்டபமும் காணப்படுகிறது. எமது சமூக பண்பாட்டு அடையாளங்களினதும் (சுதேசிய) எழுச்சியினதும் சான்றாதாரமாக அமைந்துள்ள மேற்படி கட்டடம் உள்ளிட்ட மரபுரிமை இடங்களும், சொத்துக்கள் பலவும் இந்த அகலிப்பால் இல்லாமற் போய்விடும். எனினும் யாரும் இது பற்றி பேரளவில் அக்கறையற்று இருக்கிறார்கள் என்பது மிகவும் வேதனையும், விசனத்தையும் தருகிறது. மிகப்பெரிய புகழ்பெற்ற பழைய மாணவர்களின் குழாம், சர்வதேசிய ரீதியாவெல்லாம் காணப்படும் பழைய மாணவர் சங்கங்கள், பாடசாலைகளுக்காக வேண்டியப் பல கைங்கரியங்கள், பாடசாலை அபிவிருத்திக் குழுக்கள் இருந்தும் என்ன பலன்? அவர்களால் அன்னை எனப் போற்றப்படும் இந்துக் கல்லூரித் தாய் கண்ணீர் விடுவது அவர் களுக்குத் தெரியுமா? இந்துக்கல்லூரியின் இன்னொரு வகையில் இலங்கைத் தமிழ் பண்பாட்டின் இந்த மரபுரிமைச் சொத்தைப் பாதுகாக்கப் போவது யார்?

இந்தக் கட்டுரையின் தொடக்கப் பகுதியில் விவேகானந்தர் இந்துக் கல்லூரி மண்டபத் தில் கூறியதாக எடுத்துக்காட்டிய விடயத்தை மறுபடி ஞாபகப்படுத்த விரும்புகின்றேன்.

# கவிதைமொழி கொண்டு நாடகம் படைத்த ஷேக்ஸ்பியர்

**வாசகர் அறிவதற்கு**

**கடந்த வாரம் வெளியான ஷேக்ஸ்பியர் பற்றிய எமது முதல் கட்டுரையில் அவர் எழுதிய நாடகங்கள் தொடர்பில் ஜூலியஸ் சிசர் என்பது லூஸியஸ் சீசர் எனத் தவறாக அச்சாகியிருப்பதைக் கவனிக்கவும்.**

**ஷேக்ஸ்பியர் 12 வயதாக இருந்தபோது அக்காலத்து ஓவியர் ஒருவர் தீட்டியபடம் - அரசுக்குரிய பூங்காவில் மான் வேட்டையாடி பிடிபட்டமையால் ஆளுநர் முன் அவர் விசாரிக்கப்படும் காட்சி மற்றும் அக்காலத்தில் லண்டனில் காணப்பட்ட நாடகக் கொட்டகை ஆகிய படங்களும் அக்கட்டுரையுடன் பிரசுரிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.**

(சென்றவாரத் தொடர்ச்சி)

இறுதிக்காலத்தில் இந்த வீட்டிலேயே ஷேக்ஸ்பியர் தம் வாழ்வினை கழித்துள்ளார். பிற்காலத்தில் இவ் வீட்டின் பல பகுதிகளும் அழிக்கப்பட்டுவிட்டன. ஆனால் அதன் அத்திபாரம் மற்றும் அக்காலத்து மரங்கள் யாவும் இன்றும் காணப்படுகின்றன.

இவ்விடத்திலிருந்து ஆற்றங்கரைப் பக்கமாகச் சென்றால் பெரிய கட்டடம் ஒன்று தென்படும். இங்கே ஒரு தியேட்டர், நூலகம் மற்றும் படங்கள் வைக்கப்பட்ட ஒரு காட்சி அறை மற்றும் ஒரு கோபுரம் முதலியவை காணப்படும். இந்தக் கட்டடத்தை ஒட்டினாற் போல் கவிஞரின் சிலையொன்று இருக்கிறது. இதனைச் சுற்றி ஒரு பூங்கா. உலகம் முழுவதிலுமுள்ள ஷேக்ஸ்பியர் அன்பர்களால் இந்த நினைவுச்சின்னம் 1877 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது.

ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல், ஓகஸ்ட் மாதங்களில் ஷேக்ஸ்பியரின் நாடகங்கள் அவரது சொந்த ஊரிலேயே மேடையேற்றப்படுகின்றன.

சிறிது தூரத்தில் ட்ரினிட்டிதேவாலயம் இருக்கின்றது. மரங்கள் அடர்ந்த அப்பகுதியில் சாம்பல் நிற கல்லறைகள் காணப்படும். தேவாலயத்தின் பலிபீடம் உள்ள பகுதியில் இடது பக்கமாக சுவர்கரையில் கவிஞரின் சிலையொன்று காணப்படும். சிலையின் முன் ஒரு கைமெத்தை இருக்கிறது. கவிஞரின் வலது கையில் வளைந்த சிறகு பேனையும் இடது கையில் ஒரு எழுதும் கடதாசியும் காணப்படுகின்றன. முன்தலை வழுக்கையாகவும் பின்னால் மயிர் வளர்ந்து பொன்நிறமாகவும் காணப்படுகிறது. ஆழமான கண்களுடன் பொன்னிறத்தாடி, மீசையுடன் கவிஞர் காணப்படுகின்றார். வெண்நிறகழுத்துப்பட்டியுடன் சிவப்பு நிற மேற்சட்டையும் அதன் மீது துவாய் போன்ற ஒரு சாம்பல்நிற ஆடையும் காணப்படுகின்றன. அந்தச் சுவருக்குச் சற்றுத்தள்ளி கல்லறை காணப்படுகின்றது. அதன் மீது சில சொற்கள் அடங்கிய கற்பலகை ஒன்றும் காணப்படுகின்றது.

### பாடசாலைக்கு கவிஞர் சென்றகாட்சி

ஷேக்ஸ்பியர் தனது 11 ஆவது வயதில் பாடசாலைக்குப் புறப்பட்டுச் சென்ற அழகினை எழுத்தாளர் ஒருவர் பின்வருமாறு வர்ணித்துள்ளார்.

1575 ஆம் ஆண்டு ஜூலை மாதம் ஒரு நாள் காலைப்பொழுது சூரியக்கதிர்கள் விழத்தொடங்கியுள்ள நேரம் ஐந்துக்கும் ஆறுக்கும் இடையில் இருக்கும். வாலிப்பான உடல்கட்டுடன் சுறுசுறுப்பான பதினொறு வயது பையன், மாநிறகண்கள், செஸ்நட் நிறத்திலான தலைமயிர், றோஜாப் பூப்போன்ற கன்னங்கள், கையில் புத்தகப்பையுடன் தனது தந்தையார் திருவாளர் ஜோன் ஷேக்ஸ்பியரின் வீட்டிலிருந்து முன்னாலிருக்கும் ஹென்வி வீதியில் காலடி வைக்க ஆயத்தமாகிறார்.

''பையன் பார்ப்பதற்கு நன்றாகத் தான் இருக்கிறான். அவனது பழுப்பு நிறக்கண்கள் இடைவிடாமல் மாற்றமடைகின்றன. ஒருசமயம் கேளிக்கையாக பிரகாசிக்கின்றது. அடுத்தகணம் கவலையாக ஆழமாகப் பிரகாசிக்கின்றது. அவனது நெற்றி வெண்மையாக உயர்ந்து காணப்படுகிறது. உயர்ந்த சிந்தனைக்குரிய நெற்றி அது. அவரது வாய் ஒரு சிறுமியினுடையது போல் இதமாகத் தென்படுகிறது. அவரைக் கடந்து செல்ல நேர்ந்தால் இன்னுமொருதரம் திரும்பிப்பார்க்க செய்யக்கூடிய முகம் அது''

அவருக்கு 18 வயதானபோது மீண்டும் வெளிச்சத்துக்குவருகின்றார். அப்போது அவர் மணமுடித்த மனிதர் . அவரைவிடமனைவிக்கு எட்டுவயது அதிகம். ஷேக்ஸ்பியருக்கு 13 வயதாய் இருந்த போது பாடசாலைக் கல்விக்கு முழுக்குப் போட வேண்டிய நிலை ஏற்பட்டது. அதற்கு மேல் அவருக்கு கல்வி அளிக்கும் நிலையில் அவர் தந்தை இருக்கவில்லை.

அவருடைய தொழில் இறங்குமுகம் காட்டத் தொடங்கியது. அதனால் நகரவரி முதலியவற்றைச் செலுத்துவதற்காக வீட்டையும் உடமைகளையும் அடமானம் வைக்கும் நிலைக்குத்தள்ளப்பட்டார். இதன் காரணமாக ஷேக்ஸ்பியரும் ஏதாகிலும் தொழில் செய்து உழைக்கும் நிலைக்கு ஆளானார். அவர் என்னவிதமான தொழில்களில் இறங்கினார் என்பது பற்றிய விவரங்கள் தெரியவில்லை.

பழங்கால எழுத்தாளர் ஒருவர் இதுபற்றி எழுதுகையில், அவர் தமது தந்தையாரின் கடையில் ஆடு,மாடுகளை அறுக்கும் பகுதியில் உதவியாளராகப் பணிபுரிந்தார் என்று குறிப்பிட்டுள்ளார். சில சமயம் கன்றுக்குட்டியொன்றை அறுக்க நேர்ந்தால் அதனை மிகுந்த 'ஸ்டைலாக' செய்வார் என்றும் ஒரு சொற்பொழிவை நிகழ்த்தி முடிப்பார் என்று எழுதியுள்ளார். அவர் ஆசிரியத் தொழிலில் ஈடுபட்டார் என்று சிலர் கூறியுள்ளார்கள். இன்னும் சிலர் சட்ட நிபுணர் ஒருவருக்கு எழுதுவினைஞராகக் கடமையாற்றினார் என்று தெரிவித்துள்ளனர். எவரும் அறுதியாக எதனையும் குறிப்பிட்டதாக இல்லை.

ஷேக்ஸ்பியர் இளமையிலேயே இளவயதில் தோழர்களுடன் இணைந்து சிறு குழுப்பங்களிலும் குறும்புகளிலும் ஈடுபட்டதாகவும் கூறப்படுகின்றது.



அந்தவகையில் அரசுக்குரிய வனத்தில் மான் வேட்டையாடியதற்காக அவ்வூர் ஆளுநர் சேர். தோமஸ் லூயி என்பவரின் கசைஅடிக்கும் தடுப்புக்காவலுக்கும் உள்ளாகியுள்ளார்.

இதற்குப் பழிவாங்கும் விதத்தில் ஷேக்ஸ்பியர் கண்டனக் கவிதைகளை எழுதி அங்குள்ள நந்தவனத்தின் வாயிலில் ஒட்டிவிட்டதாகக் கூறப்படுகின்றது. இதனால் ஆத்திரமுற்றிருந்த ஆளுநரின் கோபத்திலிருந்து தப்புவதற்கு ஷேக்ஸ்பியர் ஊரைவிட்டுப் புறப்பட்டுவிட்டார் என்று தெரிய வருகின்றது.

ஷேக்ஸ்பியர் மீது ஆளுநர் மிகுந்த கோபம் கொண்டிருந்தார். அதனால் இளம் கவிஞர் லண்டன் மாநகர் நோக்கிப் புறப்பட்டுவிட்டார்.

அவர் என்னவிதமாக லண்டன் சென்றார் என்று குறிப்பு எதுவும் இல்லை. நடந்தே சென்றாரா அல்லது குதிரை வண்டில் அல்லது அந்தக்காலத்து வாகனங்கள் எதையும் பயன்படுத்திக் கொண்டாரா என்பது தெரியவில்லை. ஆனால் நெடுந்தூரப்பயணம் என்பதால் அவ்வப்போது ஆங்காங்கே விடுதிகளிலும், மடங்களிலும் தங்கித் தான் பயணத்தை மேற்கொண்டிருப்பார். அச்சமயங்களில் நெடுந்தூரத்திலிருந்து வந்த பயணிகள் கூறிய கதைகளையும், அனுபவங்களையும் கேட்டு மகிழ்ந்திருப்பார். அவைகளையும் மனதில் இருத்திக் கொண்டு பிற்காலத்தில் பொருத்தமாகப் பயன்படுத்தியிருப்பார் என்று எண்ணத்தோன்றுகிறது. அவர் சென்றவழிகளில் கண்டமனிதர்களை அவர்களின் அனுபவங்கள், வீதியோரக் காட்சிகள், மரங்கொடிகள், பூக்கள் பூஞ்செடிகள், பறவைகள், இளைஞர்கள் இளம்பெண்கள், வயல்களில், வயல்வெளிகளில் அங்குபணிபுரிந்த மக்கள், அவர்களின் நடையுடை பாவனைகள், கிராமங்களில் மக்கள் பாடும் பாடல்கள் - இவை யாவும் அந்த இளங்கவிஞரின் மனத்தில் பசுமரத்தாணிபோல் பதிந்து விட்டன. பிற்காலத்தில் அவருடைய பேனை எழுதத் தொடங்கியபோது அவர் உள்ளத்தில் கிடந்த இவை அனைத்தும் பொருத்தமானஇடங்களில் கவிதை ரூபத்திலும், பாடல்களாகவும், வசனங்களாகவும் பீறிட்டுக் கொண்டு வெளிவரத்தொடங்கின.

### லண்டன் மாநகரில் இளங்கவிஞர்

லண்டனை வந்தடைந்த போது அவருக்கு பிரமிப்பாக இருந்திருக்க வேண்டும். ஏனென்றால் ஒரு சிறிய நாட்டுப்புற நகரான ஸ்ட்ராட்போர்டுடன் ஒப்பிடுகையில் லண்டன் பிரம்மாண்டமானதாக இருந்திருக்க வேண்டும். என்றாலும் இன்றைய லண்டன் நகரோடு ஒப்பிடுகையில் அன்றைய லண்டன் அவ்வளவு பிரமாதமாக இருந்திருக்காது. ஆனால் அந்தக் கிராமத்துப் பையனுக்கு அன்றைய லண்டன் ஆச்சரியமாகவும், பிரமிப்பாகவும் தான் இருந்திருக்க வேண்டும்.

ஏற்கனவே தந்தையாருடன் வந்து லண்டனில் இரண்டொரு நாடகங்களை பார்த்து மகிழ்ந்ததுண்டு. அதனால் நாடக வாழ்க்கையில் எவ்வாறோ புகுந்து விடலாம் என்றதோர் நம்பிக்கை உள்ளூர இருந்திருக்க வேண்டும்.

லண்டன் நகரில் பார்ப்பதற்கும் ரசிப்பதற்கும் கிராமத்து சிறுவனான ஷேக்ஸ்பியருக்கு தாராளமான காட்சிகள் இருந்தன. ஆனால், இப்போது வாழ்க்கையை அமைத்துக் கொள்ள ஒரு தொழில் தேடியாக வேண்டும். சாப்பிடுவதற்கு உணவு, தங்குவதற்கு இடம், உடுப்பதற்கு உடை இவைகளுக்கு வழிதேடியாக வேண்டும்.

ஆனால் அவர் என்னசெய்தார் என்பது பற்றிய விவரம் கிடைக்கவில்லை. அவர் வாழ்வில் ஏழு ஆண்டுகளுக்கான விவரம் ஒன்றுமே தெரியவில்லை.

இந்தக் காலத்தில் ஷேக்ஸ்பியர் வெளிநாடுகளில் விரிவாக பிரயாணங்கள் மேற்கொண்டிருக்கக்கூடும் என்று சிலர் கருதுகிறார்கள்.

ஏனென்றால், அவர் பிற்காலத்தில் எழுதிய நாடகங்களில், கடல்கள், நீதிமன்றங்கள், பல்வேறுபட்ட மனிதர்கள், மனிதர்களின் குணாதிசயங்கள் என்று விரிவாகவும் ஆழமாகவும் எழுதியுள்ளார். இவைகள் பற்றி அவர் எவ்வாறு அறிந்து கொண்டார் என்பது அதிசயமாகவே இருக்கின்றது.

எதுவானாலும் லண்டனில் அந்தக்காலத்தில் இருந்த நாடக கொட்டகைகள் இரண்டில் ஒன்றுக்காவது போய்ப் பார்த்திருக்கக் கூடிய சாத்தியம் இருக்கிறது.

இந்த இரண்டு நாடகக் கொட்டகைகளும் நகருக்கு வெளியிலேயே இருந்துள்ளன.


ஷோர்டிச் என்ற இடத்தில் ''தியேட்டர்'' என்ற கொட்டகையும் முவர் பீல்ட் என்ற இடத்தில் ''த கேர்ட்டின்'' என்றகொட்டகையும் இருந்துள்ளன. இங்கு நாடகம் பார்க்க வந்தவர்கள் பெரும்பாலும் குதிரைகளிலேயே வந்தார்கள்.

இவ்வாறு கொட்டகைகளுக்கு வந்த கனவான்களின் குதிரைகளை பராமரிப்பதின் மூலம் அக்காலத்தில் ஷேக்ஸ்பியர் தன் வாழ்க்கையை ஓட்டியதாக சிலர் எழுதியுள்ளார்கள்.

ரம்யன்

காலப் போக்கில் நாடகக் கொட்டகைக் குள்ளேயே தொழில் கிடைத்தது. நடிகர்கள் மேடைக்கு வரவேண்டிய சந்தர்ப்பங் களை அவர்களுக்கு அறிவிப்பது போன்ற பணிகள் அவருக் குத் தரப்பட்டதாகத் தெரிகின்றது. (இன்னும் வரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பாட்லீட் பினான்ஸ் லிமிட்டட்டின் கிளை நேற்று யாழ்.ஆஸ்பத்திரி வீதியில் திறந்து வைக்கப்பட்டபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.
இந்நிகழ்வில் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் கிளையை நாடா வெட்டித்திறந்து வைப்பதை முதலாவது படத்திலும், கொமர்ஷல் வங்கியின் முன்னாள் தலைமை அதிகாரியும் பார்லீட் குழுமத்தின் பணிப்பாளருமான எஸ்.இராகவன் மங்களவிளக்கேற்றுவதை இரண்டாவது படத்திலும், பாட்லீட் பினான்ஸ் நிறுவனத் தலைவர் எராஜ் விக்ரமசிங்க உரையாற்றுவதை மூன்றாவது படத்திலும், பினான்ஸ் நிறுவனத்தின் முதலாவது வைப்பை அதன் தலைவர் பெற்றுக்கொள்வதை இறுதிப்படத்திலும் காணலாம். (படங்கள்:ரட்ணம்)

# உழைக்கும் மக்களின் விமோசனத்துக்கு வித்திட்ட நாள் மே தினம்

இன்று மே தினம். உரிமைகள் மறுக்கப்பட்ட தொழிலாளர்களின் உரிமைகள் உறுதிப்படுத்தப்பட்ட - தொழிலாளர் தினம்.உலகத்துக்குத் தொழிலாள வர்க்கத்தினரால் எழுச்சியுடன் கொண்டாடப்படும் இந்த மே தினக் கொண்டாட்டம் வழக்கில் வந்தமை குறித்த வரலாற்றை இந்த வேளையில் தெரிந்து கொள்ள வேண்டியது ஏற்புடைத்தொன்றே.

1889 ஆம் ஆண்டு பிரான்ஸின் பாரிஸ் நகரில் நடைபெற்ற உலக கம்யூனிஸ்ட் இயக்க முதலாவது மகாநாட்டில் 1890 ஆம் ஆண்டு தொடக்கம் மே மாதம் முதல் நாளை சர்வதேச தொழிலாளர் தினமாகக் கொண்டடுவது என்ற பிரரேணை ஏற்றுக் கொள்ளப்பட்டது.

அந்த வகையில் இந்த மே தினம் சர்வதேசமும் ஏற்றுக்கொண்ட அல்லது சர்வதேச தொழிலாளர் வர்த்தகத்தினருக்கு உரிமை வழங்கப்பட்ட ஒரு தினமாக உருவெடுத்து இன்று நூற்றி இருபது ஆண்டுகள் கழித்துள்ளன.

அமெரிக்க நாட்டுப்பேரலைகளில் வெவ்வேறு நாடுகளிலிருந்து தருவிக்கப்பட்ட தொழிலாளர்கள் நாளொன்றில் பதினாறு மணி நேரங்களுக்கும் மேலாக ஓய்வின்றி உழைக்க வேண்டிய நடைமுறை பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இருந்து வந்தது.

இவ்விதம் ஓய்வின்றி,வேண்டிய உறக்கமும் இன்றி பேராலைகளின் உரிமையாளர்களால் உழைப்பு உறிஞ்சப்பட்ட தொழிலாள வர்க்கம் 1886 ஆம் ஆண்டு மே மாதம் முதலாம் திகதி எட்டு மணி நேர வேலையைச் சட்டபூர்வமாக ஆக்க வேண்டுமென வலியுறுத்தி வேலை நிறுத்தப் போராட்டத்தில் குதித்தது. அமெரிக்க மற்றும் கனடா



நாட்டிலுள்ள தொழிற்சங்கப் பேரவையால் ஏற்பாடு செய்யப்பட்ட அந்த வேலை நிறுத்தப் போராட்டம் அமெரிக்காவின் சகல மாகாணங்களிலுமுள்ள தொழில் நகரங்களில் இடம் பெற்றாலும், 'சிக்காகோ' நகரத்திலேயே மிகத் தீவிரமான வகையில் முன்னெடுக்கப்பட்டது. அதைக்கண்டு கொதிப்படைந்த அரசு வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்ட தொழிலாளர்கள் மீது கூலிப்படைகளை ஏவி விட்டு அடக்குமுறை மூலம் போராட்டத்தை முறியடிக்க முனைந்தது. இதனால் பெருமளவிலான உயிர்ச் சேதங்கள் ஏற்பட்டன.

மூன்று ஆண்டுகள் கழித்து 1889 ஆம் ஆண்டின் மே மாதம் முதல் நாளை தொழிலாளர் தினமாக அமெரிக்கத் தொழிலாளர் பேரவை நடத்தத் திட்டமிட்டதைத் தொடர்ந்து ஏனைய அனைத்து நாடுகளிலுள்ள தொழிலாளர் அமைப்புக்களும் மே, முதல் நாளை தொழிலாளர் தினமாகக் கொண்டாட ஆரம்பித்ததால் தோன்றிய வழக்கமே இந்த மே தினக் கொண்டாட்டமாகும்.

மே தினம் இன்று உலக நாடுகள் அனைத்திலும் நினைவு கூரத்தக்க மகத்தான தொழிலாளர் வர்க்க நாளாகப் பரிணமித்துள்ளது.

ஆரம்பத்தில் மே தினத்தை விடுமுறை நாளாக முதலாளித்துவ அரசுகள் பிரகடனப்படுத்த மறுத்து வந்த போதிலும் தொழிலாளர்களின் உறுதி காரணமாக பின்னர் மே தினத்தை அரச விடுமுறை தினமாகப் பிரகடனப்படுத்த வேண்டிய நிலை சகல நாடுகளின் அரசுகளுக்கும் ஏற்பட்டது.

நாளொன்றின் இருபத்து நான்கு மணி நேரத்தையும் மூன்றாக வகுத்து எட்டு மணி நேர வேலை, எட்டு மணி நேர ஓய்வு, மீதி எட்டு மணி நேர உறக்கம் என மனித சமுதாயத்தில் - உழைக்கும் தொழிலாளர் வர்க்கத்தில் தோற்றுவிக்கப் போராடி வெற்றி பெற்ற தினமாக இந்த மே தினம் அடையாளப்படுத்தப்படுகிறது.

தொழிலாளர் வர்க்கம் என்ற தனித்துவத்துடன் சகல இனங்களுக்குள்ளும், மொழிகளுக்குள்ளும், மதங்களுக்குள்ளும் அகப்படாது சர்வதேசத்திலும் உழைத்து வாழும் பாட்டாளி வர்க்கமென்ற அடையாளத்தை உணர்த்தி, சுட்டிக்காட்டி நிற்கிறது இந்த மே தினம்.

உழைக்கும் கரங்களது உரிமைகள் உறுதிப்படுத்தப்பட்டமை போன்று உழைக்கும் வர்க்கத்தின் வாழ்க்கைத் தரமும் உயர்த்தப்பட வேண்டியது அவசியமாகும்.

அந்த வகையில் உழைப்பாளி மக்களது வாழ்க்கை மேம்பட - அவர்களுக்கு உண்மையான விமோசனம் கிட்டத்தக்க வகையில் புதியதோர் சமுதாயம் படைக்க நாமெல்லோரும் பங்களிப்பு வழங்க வேண்டியது எமது கடப்பாடாகும்.

''பசித்த ஒருவனுக்கு உணவாக மீனைக் கொடுத்து அவனை எம்மில் தங்கியிருக்க வைப்பதற்குப் பதிலாக, அவனுக்கு மீன் பிடிக்கக் கற்றுக் கொடு'' என்பது ஒரு சீனப் பழமொழி. நாமும் தொழிலாளர் சட்ட திட்டங்களை, உரிமைகளை, கடமைகளை நன்கு கற்றுணர்ந்து சமத்துவமான உலகைப் படைக்க சகலருடனும் கைகோர்த்துச் செயற்படுவோமாக.

********

தொகுப்பு: எஸ்ரீஆர்

## தொழிலாளர் வாழ்க!

சாதனை செய்திந்தச்
சகத்தினை இயக்குபவர்
வேதனை அற்றதாம்
வாழ்வுநிலை பெற்றிடவே
மேதினியில் தொழிலாளர்
வெற்றித் திருநாளாம்
மேதினத்தில் எங்களது
மனம்நிறைந்த நல்வாழ்த்து!

நாயன்மார்க்கட்டு , ப.மகேந்திரதாசன்.


## வாசனா சம்பத

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம்: 816 திகதி: 29.04.2010

| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள் | | | | போனஸ் இல: |
|---|---|---|---|---|---|
| D | 01 | 20 | 34 | 43 | 69 |

| | கூட்டு | பரிசுத் தொகை | வெற்றி பெற்றோர் |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | ஆங்கில எழுத்தும் 4 இலக்கங்களும் சரியாயின் | 14,708,924.00 | - |
| 1ம் பரிசு | 4 இலக்கங்கள் சரியாயின் | 2,000,000.00 | 01 |
| 2ம் பரிசு | 3 இலக்கங்களும் போனஸ் இலக்கமும் சரியாயின் | 100,000.00 | 04 |
| 3ம் பரிசு | 3 இலக்கங்கள் மட்டும் சரியாயின் | 2,000.00 | 274 |
| 4ம் பரிசு | 2 இலக்கங்கள் மட்டும் சரியாயின் | 100.00 | 13493 |
| 5ம் பரிசு | 1 இலக்கம் மட்டும் சரியாயின் | 20.00 | 189629 |

இவ்வாரம் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத் தொகை ரூ. 8,089,880.00

சுப்பர் பரிசுத்தொகை அடுத்த வியாழக்கிழமை 14,985,142.00

வெற்றி பெறும் டிக்கட்டுகள் சீட்டிழுப்புத் திகதியிலிருந்து 6 மாதங்கள் மட்டுமே செல்லுபடியாகும்.

தேசிய லொத்தர் சபை

இணையம்: www.nlb.lk


## முகாம்களிலுள்ள மக்களுக்கு நுளம்பு வலைகள்

யாழ்ப்பாணம்,மே 1

யாழ்.மாவட்டத்தில் உள்ள சகல இடம் பெயர் முகாம்களிலுமுள்ள மக்களுக்கு சர்வோதய நிறுவனம் நுளம்பு வலைகளை வழங்கியுள்ளதாக யாழ். மலேரியாத்தடை இயக்கப் பொறுப்பு வைத்தியஅதிகாரி டாக்டர் க.தா.சிவபாதம் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் பெருகியுள்ள நுளம்புகளின் தொல்லைகளிலிருந்து மக்களைக் காப்பாற்றும் நோக்குடன் யாழ்.மலேரியாத் தடை இயக்கத்துக்கு கிடைத்துள்ள சுமார் 5ஆயிரம் நுளம்பு வலைகள் யாழ்ப்பாணத்தில் இயங்கும் சகல சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்துக்கும் தலா 500 நுளம்பு வலைகள் வீதம் பதிந்தளிக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

(50-300)


**ஓடியல் கூழ் விற்பனைக்கு**

புதன், சனி, ஞாயிறு முற்பகல் 11 மணி முதல் மாலை வரை மீண்டும் ஆரம்பம்

57, K.K.S. வீதி,
(பூநாறிமரத்துக்கும் கொக்குவில் சந்திக்குமிடையில்)
கொக்குவில்.

**விற்பனைக்கு**

பற்றறியில் இயங்குகின்ற மிகவும் நல்ல நிலையிலுள்ள மிதிவண்டி (Cycle) மற்றும் 14'' T.V விற்பனைக்குண்டு.

தொடர்பு : 0718798026


## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை சக ஆசிரியை
செல்வி புஸ்பலதா வேதநாயகம் அவர்களின்
அன்புத்தாய்
திருமதி வேதநாயகம் ஞானரத்தினம்
அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத்
தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஆசிரியர் நலன்புரி கழகம்
ஆனைக்கோட்டை றோ.க.த.க. பாடசாலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிருஜன் பந்துவீச்சில் அசத்தல்; யாழ்.இந்து வலுவான நிலையில்

யாழ்ப்பாணம்,மே1

யாழ்.இந்துக் கல்லூரியின் வீரர் நிருஜனனின் அசத்தலான பந்து வீச்சால் கொக்குவில் இந்துக் கல்லூரி அணி சற்றுத் தடுமாற்றமான நிலையில் உள்ளது.

'இந்துக்களின் போர்' என வர்ணிக்கப்படும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி - கொக்குவில் இந்துக் கல்லூரி அணிகள் மோதும் இருநாள் பெரும் துடுப்பாட்டப் போட்டி நேற்று கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இதில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற கொக்குவில் இந்துக் கல்லூரியின் தலைவர் கே.நிறோஜன் முதலில் களத் தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தார்.

முதலில் துடுப்பெடுத்தாட யாழ்.இந்துக் கல்லூரியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களான கிருசோபன், சஜீகன் ஆகியோர் களமிறங்கினர். இருவரும் இணைந்து 27 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் கார்த்திக்கின் பந்தில் 12 ஓட்டங்களை(23 பந்துகளில்) பெற்ற நிலையில் பங்குஜனிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.



விருந்தினர்கள் அழைத்துவரப்பட்டபோது...



விருந்தினர்களுக்கு வீரர்கள் அறிமுகம்

## போட்டியின் இறுதிநாள் இன்று

அடுத்துக் களமிறங்கிய டிலக்ஷன் நிதானமாக ஆட்டத்தை வெளிப்படுத்திய போது சஜீகன் 9 ஓட்டங்களுடன் ஜனுதாஸின் பந்தில் ஆதித்தனிடம் பிடிகொடுத்து வெளியேறினார்.

டிலக்ஷனுடன் ஜோடி சேர்ந்த பார்த்தீபன் நிதானமான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். யாழ். இந்துக் கல்லூரி 65 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் 37 பந்துகளைச் சந்தித்து 30 ஓட்டங்களைப் பெற்றிருந்த பார்த்தீபன் ஆட்டமிழந்தார்.

டிலக்ஷனுடன் ஜோடி சேர்ந்த நிரூஜன், இந்நிலையில் 76 பந்துகளைச் சந்தித்த டிலக்ஷன் 35 ஓட்டங்களைப் பெற்று ராகுலனின் பந்துவீச்சில் எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார். அடுத்துக் களமிறங்கிய ஜஸ்மின் ஓட்டம் எதனையும் பெறாத நிலையில் பிரதீஸின் பந்து வீச்சில் விக்கெட்டைப் பறிகொடுத்தார். ஐந்தாவது வீரராகக் கறமிறங்கிய செந்தூரன் நிதானமாக ஆடி 47 பந்துகளில் 17 ஓட்டங்களைப் பெற்று ராகுலனின் பந்துவீச்சில் அவரிடமே பிடிகொடுத்து வெளியேறினார்.

7ஆவது விக்கெட்டுக்காக துடுப்பெடுத்தாடிய பிரகாஸ் 26 பந்துகளில் 20 ஓட்டங்களைப் பெற்று பிரதீஸின் பந்தில் உத்தமகுமாரனிடம் பிடிகொடுத்து பெவிலியன் திரும்பினார். இந்நிலையில் அனோஜன் 5 ஓட்டங்களுடனும் சிவேந்திரன் 3ஓட்டங்களுடனும் வெளியேற 68 பந்துகளைக் எதிர்கொண்ட நிரூஜன் 17 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். மயூலக்ஷன் ஓட்டம் எதனையும் பெறாத நிலையில் ஆட்டமிழக்காது இருந்தார். இந்நிலையில் யாழ். இந்துக் கல்லூரி தனது முதலாவது இன்னிங்ஸில் 58.5 ஓவர்களில் 159 ஓட்டங்களைப் பெற்று அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது.

கொக்குவில் இந்துக் கல்லூரி சார்பில் பந்துவீசிய கார்த்திக் 31 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களையும் ராகுலன் 3ஓட்டமற்ற ஓவருடன் இரண்டு விக்கெட்டுக்களையும் சாம்பவன், ஜனதாஸ் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாட ஆரம்பித்த கொக்குவில் இந்துக் கல்லூரி ஆரம்பத்திலேயே விக்கெட்டுக்களை இழக்க ஆரம்பித்தது. 30 ஓட்டங்களுக்குள் 4 விக்கெட்டுக்களை பறிகொடுத்தது. ஆரம்பத்துடுப்பாட்ட வீரரான பங்குஜன் 7 ஓட்டங்களைப் பெற்று நிரூஜனின் பந்தில் ஆட்டமிழந்தார். ஜனார்த்தனன் ஓட்டம் எதனையும் பெறாமலும் ஆதித்தன் 11 ஓட்டங்களுடனும் எல்.பி.டபிள்யூ முறையில் நிருஜனின் பந்தில் ஆட்டமிழந்தனர். சாம்பவன் 24 பந்துகளில் 20 ஓட்டங்களைப் பெற்று ரன் அவுட் ஆனார். உத்தமகுமாரன் 14 ஓட்டகளுடனும் அணித் தலைவர் நிறோஜன் 8 ஓட்டங்களுடனும் நிருஜனின் பந்தில் ஆட்டமிழந்தனர். ஜனுதாஸ் 6 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க ராகுலன் பொறுமையாக ஆடி 20 ஓட்டங்களை பெற்றார். கொக்குவில் இந்துக் கல்லூரி அணி 7 விக்கெட்டுக்களை இழந்து 76 ஓட்டங்களைப் பெற்றது. 21ஓவர்கள் முடிவடைந்த நிலையில் ஆட்டம் நிறைவுக்குவந்தது. யாழ்.இந்துவின் வீரர் நிரூஜன் 5 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

தற்போது களத்தில் பவிந்தனும் கார்த்திக்கும் உள்ளனர். இறுதிநாளான இன்று கொக்குவில் இந்துக் கல்லூரி தொடர்ந்தும் துடுப்பெடுத்தாட உள்ளது. (6-86)

ஊடக அனுசரணை உதயன்



அணித்தலைவர்கள் நாணயச் சுழற்சியின்போது...



உற்சாகப்படுத்தும் ரசிகர்கள்



துடுப்பெடுத்தாடும் யாழ்.இந்து வீரர்



விருந்தினர்கள் மற்றும் பயிற்சியாளர்களுடன் இரு கல்லூரிகளின் வீரர்கள்



பந்துவீசும் கொக்குவில் இந்து வீரர்.

# அரசியல் பிரமுகர்களின் மேதினச் செய்திகள்

யாழ்ப்பாணம், மே.1

இன்றைய தொழிலாளர் தினத்தை முன்னிட்டுப் பல்வேறு அரசியல் கட்சிகளும் மேதினச் செய்திகளை வெளியிட்டுள்ளன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் தமிழரசுக் கட்சி பொதுச் செயலாளர் மாவை சேனாதிராசா விடுத்துள்ள செய்தி வருமாறு :-

''மே'' தினம் இன்று உலகம் முழுவதுமுள்ள தொழிலாளர்களால் கொண்டாடப்படுகின்றது. உலகத் தொழிலாளர்களின் உரிமைகளுக்காகப் பல தசாப்தங்களாக இடம் பெற்ற போராட்டங்களினால் இன்று ஐ.நா. சபையினாலும், சர்வதேச தொழிலாளர் மையத்தினாலும் பிரகடனப்படுத்தப்பட்ட தொழிலாளர்கள் உரிமைகள் சாசனம் நடைமுறையிலுள்ளது.

இலங்கையில் கடந்த இரு தசாப்தங்களுக்கும் மேலாகப் போர்ச் சூழல் நிலவியதைக் காரணமாகக் காட்டி அரசு தொழிலாளர் உரிமைகளையும் அடக்கி வந்திருக்கிறது. அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களும், தொழிலாளர் வர்க்கமும் தொழிற் சங்கங்களும் கூடத் தங்கள் உரிமைகளுக்காகக் குரல் கொடுக்கவோ அல்லது கிடைத்த உரிமைகளைத் தானும் அனுபவிக்கவோ முடியாமலும் இருந்துவந்துள்ளன.

இந்த நிலையில், தொழிலாளர் மற்றும் உழைக்கும் வர்க்கம் ''மே'' நாள் கொண்டாட வேண்டினால் எம் தமிழ்ப் பிரதேசங்களில் தொழிலற்றோர், அகதிகள், அனாதைகள், குற்றுயிராயிருப்போர் எங்கே தொழிலாளர் உரிமை பற்றிச் சிந்திக்கப் போகிறார்கள்?

இருப்பினும் போரற்ற சூழல், ஜனநாயக ஒளிக்கீறுகள் தென்படுகின்ற சூழலில் இருக்கின்ற உழைக்கும் மக்கள், விவசாயிகள், மீனவர்கள், கூலித்தொழிலாளர் உயர்வு பெறவும், மேம்படவும் இம் ''மே'' நாளை சிந்தையில் கொண்டு உழைக்கும் வர்க்கத்தின் உரிமைகளுக்காக மட்டுமல்ல; தமிழ் பேசும் மக்களின் விடிவுக்கும், விடுதலைக்கும் உழைப்போமென உறுதி கொள்வோம். படிப்படியாக ஜனநாயகச் சூழல் மீண்டுவரும் சூழ்நிலைகளில் தொழிலாளர்களின் உரிமைக்கு உரத்துக் குரல் கொடுப்போம். உரிய வேளையில் தொழிற்சங்கப் போராட்டங்களுக்கும் ஆதரவளிப்போம் என உறுதி கொள்வோம் - என்றுள்ளது.

### ஈ.பி.டி.பி.

ஈ.பி.டி.பியின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் கந்தசாமி கமலேந்திரனின் (கமல்) மேதினச் செய்தி வருமாறு :-

உலக உழைக்கும் மக்களின் உரிமைகள் தொடர்பில் குரல் எழுப்பும் இத்தினத்தில், உழைக்கும் மக்கள் அனைவருக்கும் உரிய வரப்பிரசாதங்கள் அனைத்தும் கிடைக்க வேண்டும் என்பதே எமது அபிலாஷையாகும். உழைக்கும் மக்களின் வியர்வைக்கு ஏற்ப அவர்களுக்கான வேதனங்கள் வழங்கப்படுவதுடன் அவர்களது ஏனைய உரிமைகளும் வழங்கப்பட்டு, பேணப்படல் வேண்டும்.

தமிழ்பேசும் மக்களின் அரசியல் உரிமைகள் தொடர்பில் கடுமையாக உழைக்க வேண்டிய நிலையில் நாம் இருந்து வருவதுடன், அதனுடன் சேர்த்து, உழைக்கும் மக்களது உரிமைகள் தொடர்பில் பாடுபட வேண்டிய தேவையும் எமக்கு உண்டு.

எனவே, கிடைக்கும் சந்தர்ப்பங்களைக் கைநழுவ விடாமல் எமக்கான உரிமைகள் தொடர்பில் உழைப்பதற்கும், அதற்கான குரலை எழுப்புவதற்கும் எமது மக்கள் அனைவரும் ஓரணி திரளவேண்டும் எனக் கேட்டுக் கொள்கின்றேன் - என்றுள்ளது.

### சுரேஷ் பிறேமச்சந்திரன்

நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிறேமச்சந்திரன் விடுத்துள்ள மேதினச் செய்தி வருமாறு :-

ஆயிரக்கணக்கான மக்கள் அகதி முகாம்களிலும், இன்னும் பல ஆயிரக்கணக்கான மக்கள் மீள் குடியேற்றம் என்ற பெயரில் எந்தவித உதவியும் இன்றி நடுத்தெருவில் நிற்கும் போது, உழைப்பாளர் தமது உரிமைகளை வென்றெடுத்த தினமான மே தினம் வந்துள்ளது.

இலங்கையின் தொழிலாளர் வர்க்கங்களும், தற்போது இனத்தாலும், மதத்தாலும் பிரிந்து இரு துருவங்களாக மாறிவிட்டன. வடக்கு - கிழக்கு தமிழர் மீது அரசு புரியும் இராணுவ ஆட்சிக்கு முண்டு கொடுப்பவர்களாகவே சிங்களத் தொழிலாளர் வர்க்கமும் உள்ளது. உழைக்கும் மக்களின் காணிகளில் மிகப் பெருமளவுப் பகுதியில் அதி உயர் பாதுகாப்பு வலயங்கள் என்ற பெயரில், இன்னும் இராணுவக் கட்டுப்பாட்டிற்குள்ளேயே உள்ளன.

வன்னியில் விவசாயிகள் தமது சொந்தக் காணிகளுக்குப் போக முடியவில்லை. திரும்பும் இடமெல்லாம் இராணுவமயம், தற்காலிக முகாம்கள், நிரந்தர முகாம்கள் என ஆக்கிரமிப்புச் சூழ்நிலை, இந்நிலையில் தான் தமிழ் மக்களாகிய நாமும் மே தினத்தை வரவேற்க வேண்டி உள்ளது - என்றார்.

### அ.விநாயகமூர்த்தி

நாடாளுமன்ற உறுப்பினரான அ.விநாயகமூர்த்தி விடுத்துள்ள செய்தி வருமாறு :-

தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் எத்தனையோ ஆயிரம் தொழிலாளர்கள் முட்கம்பிகளால் அடைக்கப்பட்டு நலன்புரி முகாம்களிலும், தடுப்பு முகாம்களிலும், மறியல் வீடுகளிலும் அடைக்கப்பட்டு அவர்களது உரிமைகள் மறுக்கப்பட்ட நிலையில் அவர்களால் கொண்டாடப்பட முடியாத இம்மேதினத்தை நாம் ஓர் துக்க தினமாகவே எதிர்கொள்ள வேண்டிய சூழ்நிலை காணப்படுகின்றது.

ஆதலால் இத்தினத்தில் சகல தொழிலாளர்களுக்கும் நீதியும், சமத்துவமும் கிடைக்க வழிபிறக்க வேண்டும் என்பதுடன் இனிமேலாவது அவர்களது தேவைக்கேற்ற, உழைப்பிற்கேற்ற ஊதியமும் வழங்கப்பட வேண்டுமென வேண்டுகின்றேன் - என்றுள்ளது. (ஓ-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலைக்கு ஆள்கள் தேவை

### சினேகா றெஸ்ரோறன்ட்

★ உணவு பரிமாறுபவர்கள்.
★ றெஸ்ரோறன்றில் ஏதாவது ஒரு வேலையில் அனுபவம் உள்ளவர்.

சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். ஆர்வம் உள்ளவர்கள் நேரில் வரவும்.

இல.117, ஆடியபாதம் வீதி, (ஸ்ரேசன் றோட் அருகாமை)
கோக்குவில் கிழக்கு, கொக்குவில். தொ.பே: 0776008411

நீங்கள் பீனிசம், பீனிச வாய்வு இளநரை, தலையிடி, தலைப்பாரம், மூக்கினால் இரத்தம் வடிதல், காதடைப்பு, கண்மங்கல் என்பவற்றால் அவதிப்படுகிறீர்களா ?
இதோ பாவியுங்கள்

கண்ணுக்குக் குளிர்ச்சியும் முகத்திற்கு அழகும் உண்டாக்கி கூந்தலை நீளமாகவும் கறுப்பாகவும் அழகாகவும் வளரச்செய்யும் சித்த ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட

### சித்தாரா பொன்னாங்காணித் தைலம்

பொன்னாங்காணித் தைலம் வாங்கும்போது வர்ணமூடியுடன் சித்தாரா டிஸ்பென்ஸரி வைத்திய முத்திரைக் குறியீடு உள்ளதா எனப் பொதி செய்யப்பட்ட பெட்டியைத் திறந்து சரிபார்த்து வாங்குங்கள்

Manufactured By:
SITHARA PRODUCTS
Puttalam Road, Chilaw
(Reg.No:- 6382) AR/PR/No.228 (C/564561)

யாழ்.மாவட்ட ஏகவிநியோகஸ்தர்:
சிவா நறுமணப்பூங்கா
இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 2567


## இந்து இளைஞர் மன்றம்

### நீர்வேலி தெற்கு.

மேற்படி இந்து இளைஞர் மன்றத்தால் நடத்தப்பட்ட அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்:-

| | |
|---|---|
| முதலாம் பரிசு: | 61 |
| 2ஆம் பரிசு: | 954 |
| 3ஆம் பரிசு: | 2099 |
| 4ஆம் பரிசு: | 456 |
| 5ஆம் பரிசு: | 3540 |

ஆறுதல் பரிசுகள்: 17, 253, 439, 510, 2606.

தொ.பே: 0771610038 (97613) துணைவர்.


## Computer Express
Institute of Information Technology

மாணவர்களுக்கும், கணனி ஆர்வலர்களுக்கும், ஊழியர்களுக்கும் தொழில்சார் கணனிக் கற்கை நெறிகள் ஆரம்பமாகின்றன...
Duration:- 1week

Diploma in Film Technology & Video Editing
Adobe Photoshop, Cool 3D Studio, VCD Cutter
Capturing, Pinnacle Studio, Adobe Premiere
Internet & e mail

Diploma in Hardware Engineering & Networking
System Configuration, Hardware Devices Assembling, Repairing, Trouble Shooting
Installation of Hardware & Software, Project Works
Internet & e mail

Diploma in Graphic Designing & Adverdisement Marketing
Photoshop ,Macromedia Flash
Corel Draw, Cool 3d Studio
Internet & e mail

No 167,Kasthuriyar Road, Jaffna.
T.P-021 2228250

வகுப்புக்கள் ஆரம்பம்
03/05/2010 - 09AM


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



### திருமதி வரததராஜா சிவக்கொழுந்து

அன்னாரின் மறைவுச் செய்திகேட்டு நேரிலும் தொலைபேசி வாயிலாகவும் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், இறுதிச் சடங்கில் கலந்து கொண்டோர் அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (01.05.2010) சனிக்கிழமை மு.ப.11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற விருப்பதால் அத்தருணம் தாங்கள், தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பன்னாலை, சுழிபுரம். (97620) மக்கள், மருமக்கள்.


## தவறிவிட்டது

உக்கிளாங்குளம், வவுனியா என்ற முகவரியைச் சேர்ந்த நடராஜா கயிலாயநாதன் என்பவரது தே.அடையாள அட்டை (850771197 V) கசூரினா பீச்சில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும். தொ.பே: 0778890464
இல.131, ஆடியபாதம் வீதி, நேனியடி, நிருநெல்வேலி.

## யாழ்.கொழும்பு வான் சேவை

உங்கள் இல்லங்களில் ஏற்றி உரிய இடங்களில் சேர்ப்போம். தனிநபர் கட்டணம் 1000/= மட்டும்.
தொ.பே: 0777 199 319, 0777 199 352, 077 9770 027

## கார் விற்பனைக்கு

DAIHATSU CHARAD' (ப1OI),1991 ஒரிஜினல் டீசல் TURBO, 1000 CC, A/C. 64-XXXX, Light blue, 20 Km/L.
தொடர்பு: 0774242527, 021 521 4240

## தேவை

EMCO நிறுவனத்திற்கு வேலையாள்கள் தேவைப்படுகின்றனர். இருபாலரும் விண்ணப்பிக்கலாம்.
அடிப்படைச் சம்பளம்
ரூ 6000-10000.
தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இல.
0770785882,
0789141865

## புறொயிலர் கோழி இறைச்சி விற்பனை

புறொயிலர், கல்பேட்ஸ் என்பன மலிவான விலையில் சுத்தம் செய்து தினமும் பெற்றுக் கொள்ளலாம். புறொயிலர் மொத்தமாகவும் விற்பனை செய்யப்படும். விலைக்கழிவு உண்டு.
தொடர்பு: மலிரி பாம் செவிரர்,
61, இராமநாதன் வீதி, கலட்டி.

## IIS புதிய பிரிவுகள் ஆரம்பம்

பிரிவு 01 : 14.05.2010
பிரிவு 02 : 15.05.2010
காலை 10.00 மணி

Diploma Courses
- Diploma in Software Development
- Diploma in Computer Hardware & Networking Eng.
- Diploma in Business Information System

Certificate Courses
- Certificate in Office Solution Development
- Certificate in Networking
- Certificate in Java Programming
- Certificate in Visual Programming
- Certificate in Web Designing
- Certificate in Computerized Accounting
- Certificate in Hardware Technology
- Certificate in Eng.Drawing & AutoCAD
- Certificate in Database Management System
- Certificate in Multimedia
- Certificate in Desktop Publishing

INSTITUTE OF INFORMATICS STUDIES ( IIS )
#100, Clock Tower Road, Jaffna.


# இன்று பற்றிமா மாதா திருச்சொரூபம் நேர்ந்தளித்தல்

யாழ்ப்பாணம், மே. 01

பண்டத்தரிப்பு, கீரிமலை வீதியில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள மாதாவின் யாத்திரைத் தல வழிகாட்டல் திருச்சொரூபம் ஆசீர்வதித்து நேர்ந்தளிக்கும் நிகழ்வு இன்று காலை இடம்பெறவுள்ளது.

புதிய குருவாக நியமிக்கப்பட்டு குருப்பட்டம் பெற்ற அருட்தந்தை அன்ரன் கியூபேட் இன்று காலை 6.30 மணிக்கு பண்டத்தரிப்பு புனித பற்றிமா மாதா ஆலயத்தில் திருப்பலியை ஒப்புக் கொடுப்பார்.

அதன்பின் அவர் பொதுமக்களுடன் சேர்ந்து பவனியாகச் சென்று கீரிமலை வீதியில் அமைந்துள்ள யாத்திரைத்தல மாதாவின் நேர்ந்தளிப்பு நிகழ்வில் பங்கேற்பார். (ஓ-1)

## ஆத்ம சாந்திப் பிரார்த்தனை



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 17 | 01 |
| 08 | 04 |
| 1933 | 2010 |

### திருமதி இரத்தினம் அனுக்கிரகவதி

01.04.2010 அன்று சிவபதமடைந்த எமது தாயாரின் பிரிவுச் செய்தியைக் கேட்டு நேரில்வந்து அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும், அன்னாரது மறைவையொட்டி பல்வேறு வழிகளில் எமக்கு உதவி, ஒத்தாசைகள் புரிந்தவர்களுக்கும் எமது நெஞ்சம் நெகிழ்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நாளை (02.05.2010) ஞாயிற்றுக்கிழமை நல்லூர் திவ்விய ஜீவன சங்க மண்டபத்தில் முற்பகல் 10.30 மணியளவில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இல.621, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம். (97617) குடும்பத்தினர்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 17 | 01 |
| 02 | 04 |
| 1920 | 2010 |

### திருமதி பரமு நாகம்மா

(சாவகச்சேரி, பெரியமாவடியைப் பிறப்பிடமாகவும் கொழும்பு 13 ஐ வதிவிடமாகவும் கொண்டவர்)

அன்போடு எம்மை அழைத்து
உணவூட்டிய அன்புத் தெய்வமே!
இன்முகமாய் இன்பம் காட்டி -எல்லோர்
இதயத்திலும் இடம் பிடித்தவரே!
நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்து
மாதமொன்று ஆனாலும் ஆறாது எம் துயரம்.

இல.21, புளூமெண்டால் ஒழுங்கை,
கொட்டாஞ்சேனை, கொழும்பு -13.
தொ.பே:0112470057/0776718178 குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி இராஜரட்ணம் பாக்கியம்



பருத்தித்துறை, புலோலிதெற்கு, புலோலியைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம், மணல்தறை ஒழுங்கையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராஜரட்ணம் பாக்கியம் 28.04.2010 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதி-செல்லம்மா தம்பதியரின் மூத்த மகளும் காலஞ்சென்றவர்களான செல்லப்பா-புதியாள் தம்பதியரின் மருமகளும் இராஜரட்ணத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற கந்தையா மற்றும் தங்கராஜா, இரத்தினம், மனோன்மணி ஆகியோரின் அன்புச் சகோதரியும் தங்கம்மா, தையல்நாயகி, ஆறுமுகம், காலஞ்சென்றவர்களான கணேசு, மகேஸ்வரி, இராசலிங்கம் ஆகியோரின் மைத்துனியும் சித்திரதாசன், நியூட்டன் (கனடா),ரேகணா, சுகுணா, வசந்ததாசன் (கனடா), கமலதாசன் (கனடா), பாரதிதாசன் (கனடா), விமலதாசன் (கனடா), ஜெனதா (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும் பூங்கொடி, அல்போன்ஷா (கனடா), தங்கராஜா (சந்திரன்), சாந்தினி (கனடா), ஜெயமதி (கனடா), சர்மிளா (கனடா), சுபாஜினி (கனடா), ஜெராட் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும் உதயராஜ், காலஞ்சென்றவர்களான உதயசுதன், உதயேந்திரன் மற்றும் உஷாந்தினி, அனோஜா, அர்ஜீன், ஸ்ரெபான், இந்துஜா, அஜித், அபிராமி, சிந்துரா, தபிஸ், பார்விந்த், சுவேதா, திவ்யா, ஆகாஷ், சஜன், சரண், ஷெரீனா, கியூரினா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் இந்துஜன், பிரிதா, அபிவர்ஷன், தனுஷாந்தன், தாட்சாயினி, தட்சனா ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (02.05.2010) ஞாயிற்றுக்கிழமை மு.ப 11 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மணல்தறை ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

தகவல்:
கணவன், மக்கள்,
மருமக்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ICC WORLD TWENTY20 WEST INDIES 2010

# கிரிக்கெட் கோலாகலம்

30.04.2010 – 16.05.2010

# இறுதிப் பந்து வரை சளைக்காது போராடி இலங்கையை வென்றது நியூஸிலாந்து

கஜானா,மே1

ரசிகர்களை இருக்கையின் நுனிவரை கொண்டுவந்த பரபரப்பான முதலாவது ஆட்டத்தில் நியூஸிலாந்து அணி வெற்றி பெற்றது.

ஐ.சி.சி.யின் ருவென்ரி-20 உலகக் கிண்ணப் போட்டிகள் நேற்று இரவு 10.30 மணிக்கு கோலாகலமாக ஆரம்பித்தது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கையணியின் தலைவர் குமார் சங்கக்கார முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தார்.

ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக மஹேல ஜெயவர்த்தனாவும் அதிரடி வீரர் டில்ஷானும் களமிறங்கினர். 19 பந்துகளைச் சந்தித்த டில்ஷான் 3 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ஓரமின் பந்தில் விக்கெட்டைப் பறிகொடுத்தார்.

அடுத்துக் களமிறங்கிய அணித் தலைவர் சங்கக்காரவும் 4 ஓட்டங்களுடன் ஸ்ரைறிஸின் பந்துக்கு இரையானார். ஆனால் ருவென்ரி-20 போட்டிக்கு அறிமுகமாகிய வீரரான சந்டிமால் மறுபுறத்தில் சிறப்பாக ஆடிய ஜெயவர்த்தனவுக்கு கைகொடுக்கும் விதத்தில் ஆடினார்.

23 பந்துகளைச் சந்தித்த சந்டிமால் ஒரு சிக்ஸர் ஒரு பௌண்டரி அடங்கலாக 29 ஓட்டங்களைப் பெற்றார். இலங்கையணி 103 ஓட்டங்களைப் பெற்றபோது மக்கலம் வீசிய பந்தில் ரெய்லரிடம் பிடி கொடுத்து வெளியேறினார்.



ஜெயவர்த்தனவுடன் கப்புக்கெதர ஜோடி சேர்ந்தார். இந்நிலையில் 8 பௌண்டரிகள் 2 சிக்ஸர் அடங்கலாக 51 பந்துகளில் 81 ஓட்டங்களைப் பெற்ற சௌதியின் பந்தில் மக்கலத்திடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார்.

கப்புகெதர 11 ஓட்டங்களுடனும், மத்தியூஸ் 3 ஓட்டங்களுடனும், பொன்ட் வீசிய பந்தில் மக்கலத்திடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்தனர்.

அதிரடி வீரர் சனத் ஜெயசூரியா பந்துகள் எதனையும் சந்திக்காத நிலையில் ஓட்டமெதனையும் பெறவில்லை.

நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் முடிவில் இலங்கையணி 6 விக்கெட்டுக்களை இழந்து 135 ஓட்டங்கைளைப் பெற்றது.

நியூசிலாந்து சார்பில் பந்து வீசிய ஷேன் பொன்ட் 2 விக்கெட்டுக்களையும் ஸ்ரைரிஸ், சௌதி, மக்கலம், ஓரம் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டினை வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாட ஆரம்பித்த நியூசிலாந்து அணி 19.5 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களை இழந்து 138 ஓட்டங்களைப் பெற்று வெற்றி பெற்றது.

நியூசிலாந்து அணியின் ஆரம்ப வீரர்களாக மக்கலமும், ரைடரும் களமிறங்கினர். 4 பந்துகளைச் சந்தித்த மக்கலம் ஓட்ட மெதனையும் பெறாத நிலையில் மத்தியூஸின் பந்தில் மலிங்கவிடம் பிடிகொடுத்து வெளியேறினார்.

சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய ரைடர் 27 பந்துகளில் 3 பௌண்டரிகள், 2 சிக்ஸர்கள் அடங்கலாக 42 ஓட்டங்களைப் பெற்று முரளியின் சுழலில் பெவிலியன் திரும்பினார்.

குப்தில் ஒரு பௌண்டரி ஒரு சிக்ஸர் அடங்கலாக 19 ஓட்டங்களைப் பெற்றபோது ஜெயசூரியாவின் சுழலில் விக்கெட்டை இழந்தார். ரெய்லர் 9 ஓட்டங்களுடன் முரளியின் பந்தில் மத்தியூஸிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். அடுத்துக் களமிறங்கிய ஜக்கப் ஓரம் 6 பந்துகளில் 2சிக்ஸர்கள் அடங்கலாக 15 ஓட்டங்களை அதிரடியாகப் பெற்று வெலக்கெதரவின் பந்தில் ஆட்டமிழந்தார்.

ஹெப்கின்ஸ் 'ரன்அவுட்' ஆனார். அடுத்துக் களமிறங்கிய நதன் மக்கலம் சிறப்பாக ஆடினார். அணித் தலைவர் டானியல் விக் ரோறி பொறுப்பாக ஆடி ஆடி 17 ஓட்டங்களைப் பெற்றார்.

இலங்கை அணியா? நியூசிலாந்து அணியா? வெற்றி பெறப்போகிறது என ரசிகர்களிடம் பெரும் எதிர் பார்ப்பை ஏற்படுத்தி நிலை யில் 19.5 ஆவது ஓவ[illegible] நியூ சிலாந்து வெற்றிபெற்றது.

நியூசிலாந்து 8 விக்கெட்டுகளை இழந்து 138 ஓட்டங்களைப் பெற்று வெற்றியை தனதாக்கியது. பந்து வீச்சில் முரளிதரன் 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். (6)

## இன்றைய ஆட்டங்கள்

| குழு 'சி' | ICC WORLD TWENTY20 WEST INDIES 2010 | குழு 'ஏ' |
|---|---|---|
| ஆப்கானிஸ்தான் – இந்தியா | | பங்களாதேஷ் – பாகிஸ்தான் |
| இடம் : செயின்ட் லூசியா | | இடம் : செயின்ட் லூசியா |
| நேரம் : இரவு 7 மணி | | நேரம்: இரவு 11 மணி |

NALIN இன் காட்சியறையில் உங்கள் தெரிவுக்கான விலையில் கணனிகள்
1.6 GHZ/INTEL BOARD/1GB KINGTON MEMORY(800 Original)/ HDD WD/DVD WRITER(Samsung)
16' AOC LCD/16' A OPEN/POWER LOGIC CASSING/KEY BORD/MOUSE/ MM SPEKER.
36,000 மட்டுமே
FREE COMPUTER TABLE (BLACK) உங்கள் கணனிகளுக்கு முந்துங்கள்
2.7DUAL CORE/ 2.93 C2DUO கணனிகள் விலைக்குறைப்பு செய்யப்பட்டுள்ளது
ஒன்று முதல் மூன்று வருட உத்தர வாதத்துடன் எங்கள் கணனிகள் உங்களுக்காக
195/4 Parameswarra Junction TP / Fax : 0212221166, 0777667974
NALIN Information Technologies Pvt Ltd

# மாணவர் சமூகம் மீதான வன்முறைச் செயற்பாடுகள்; அனைவரும் ஒன்றிணைந்து குரல் கொடுப்போம் வாரீர்!

## யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அமைப்பு

யாழ்ப்பாணம்,மே1

மாணவர் சமூகம் மீதான வன்முறைச் செயற்பாடுகள் இன்று பல்வேறு ரூபங்களில் தலை விரித்து ஆடுகின்றது. இந்த நிலையில் இந்தச் சம்பவங்களைத் தடுக்க சம்பந்தப்பட்ட தரப்பினர் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் மேற்கண்டவாறு கோரியுள்ளது.

இது தொடர்பாக ஒன்றியம் விடுத்துள்ள கண்டன அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

போரின் வடுக்களில் சிக்கி மீள முடியாமல் குடும்ப உறவுகளை இழந்து உடைமைகளை இழந்து மக்கள் துன்பப்படும் இந்த வேளையில், யாழ். குடாநாடு மற்றும் வவுனியாவில் நடைபெறும் கடத்தல், கப்பம் கோருதல், பாலியல் வல்லுறவு போன்ற விரும்பத் தகாத செயற்பாடுகள் மக்களை பெரும் அச்சத்தில் ஆழ்த்தியுள்ளன. கடந்த காலங்களில் இவ்வாறான சூழ்நிலைகள் குடாநாடு மற்றும் வவுனியாவில் நிலவி போதும் போர் முடிவுற்றதாகக் கருதப்படும் இந்த வேளையில் இடம்பெறும் இவ்வாறான செயற்பாடுகளால் உறைந்துபோயுள்ளனர் குடாநாடு மற்றும் வவுனியா மக்கள். குறிப்பாக மாணவ சமூகத்தினையே குறிவைத்து இவ்வாறான செயற்பாடுகள் இடம் பெறுவதை காணக்கூடியாக உள்ளது.

மக்களின் இயல்பு நிலையினை குழப்பும் இவ்வாறான சமூகவிரோத செயற்பாடுகளை யாழ். பல்கலைக்கழக சமுகமும் யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியமும் வன்மையாகக் கண்டிக்கிறது. சமகாலத்தில் கபிலநாத்தின் படுகொலை தொடங்கிய மாணவர் சமூகம் மீதான வன்முறை செயற்பாடுகள் இன்று பல்வேறு ரூபங்களில் தலைவிரித்து ஆடுகிறன. இது எம் மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளைக் குழப்ப எடுக்கப்படும் முயற்சியாகவே கருதுகிறோம். தொடர்ந்தும் இவ்வாறான சம்பவங்கள் நடைபெற்றால் அதனை மாணவர் சமூகம் வேடிக்கை பார்த்துக்கொண்டு இருக்கும் என நினைப்பது முட்டாள்தனமாகும்.

அபிவிருத்தி என்ற பெயரில் ஒருபுறம் எமது கலாசாரங்களையும் கலாசார சின்னங்களையும் அழித்துக்கொண்டிருக்கும் அதேவேளை மறுபுறம் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெற்றுக்கொண்டிருக்கின்றன. சர்வதேச சமூகமும் இதனை வேடிக்கை பார்த்துக்கொண்டிருப்பது எமக்கு பெரும் வேதனையளிக்கின்றது. தமிழ் மக்கள் என்றும் இவ்வாறான சம்பவங்களை விரும்புபவர்கள் அல்ல. எனவே இவ்வாறான சம்பவங்களை தடுக்க சம்பந்தப்பட்ட தரப்பினர் உடன் நடவடிக்கை எடுக்கும் அதே வேளை தமிழ் மக்களின் அரசியல் தீர்வு விடயத்திலும் விரைந்து நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என நாம் விரும்புகிறோம்.

இன்று குடாநாடு தரைவழியாக பல்வேறு இடங்களோடு நேரடித் தொடர்பில் இருக் கின்றது. இங்கு பல்வேறு தரப்பினர் வந்து செல்கின்றனர். இத்தகைய சூழ்நிலையில் யாரும் இந்த சமூக விரோத செயற்பாடுகளில் ஈடுபடலாம். இதை விடவும் மக்களை குழப்பும் முகமாக இது தொடர்பாக சில வதந்திகளும் உலா வருகின்றன. எனவே இவைகள் தொடர்பில் கூடுதல் விழிப்புணர்வுடன் செயற்படுமாறு வேண்டுகின்றோம். நாங்கள் ஏற்கனவே பல மாணவர்களை இழந்து விட்டோம். இனி இழப்பதற்கு எம்மிடம் ஒன்றுமில்லை எனவே அன்பான பெற்றோரே இவ்வாறான நேரங்களில் உங்கள் பிள்ளைகளுக்கு காவலர் நீங்களே.

இவ்வாறான சமூகவிரோத செயற்பாடுகளுக்கு எதிராக குரல் கொடுக்க அனைத்து தமிழ் கட்சிகளையும் மற்றும் பாடசாலை சமூகம் மற்றும் பொது நிறுவனங்களை எம்முடன் இணையுமாறு அழைப்பு விடுகின்றோம் - என்றுள்ளது. (ஒ-1)



ஆனையிறவில் நேற்று போர் வீரர் நினைவுத் தூபியை பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ திறந்து வைக்கின்றமையைப் படத்தில் காணலாம்.

# சரத் பொன்சேகா விவகாரம்; ஐரோப்பிய ஒன்றியம் கவலை

கொழும்பு,மே1

இலங்கையில் அவசரகாலச்சட்ட விதிமுறைகள் தொடர்ந்தும் நடைமுறைப் படுத்தப்படுவது, முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா தடுத்து வைக்கப்பட்டுள்ளமை குறித்து ஐரோப்பிய ஒன்றியம் கவலை வெளியிட்டுள்ளது.

ஊடகம் ஒன்றுக்கு அளித்துள்ள பேட்டியில் ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கைக்கான பிரதிநிதிகள் குழுவின் தலைவர் பேர்னாட் சுவேஜ் இதனைத் தெரிவித் தார்.

அவர் இது தொடர்பாக தெரிவித்தவை வருமாறு:-

ஐரோப்பிய ஒன்றியம், அவசரகாலச் சட்ட விதிமுறைகள் தொடர்ந்தும் நடைமுறைப்படுத்தப்படுவது குறித்தும், முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா தடுத்து வைக்கப்பட்டுள்ளமை குறித்தும் கவலையடைந்துள்ளது.

ஐரோப்பிய ஒன்றியம் எதிர்பார்க்கும் நிபந்தனைகளை நிறைவேற்றுவது இலங்கையைப் பொறுத்த விடயம்.

இலங்கைக்கான ஜி.எஸ்.பி. வரிச்சலுகையை ஒகஸ்ட் மாதத்திலிருந்து இடைநிறுத்துவது என்ற உறுதியான முடிவை ஐரோப்பிய ஒன்றியம் எடுத்துள்ளது.

மனித உரிமை, தொழிலாளர் உரிமை மற்றும் ஊடக சுதந்திரம் போன்றவை குறித்து இலங்கை சிறப்பாக செயற்படுமானால் ஐரோப்பிய ஒன்றியம் சாதகமாகப் பரிசீலனை செய்து ஜி.எஸ்.பி. வரிச்சலுகையை மீண்டும் வழங்கும்.

இரு தரப்புக்கும் இடையிலான உறவு வர்த்தகம் போன்றது என்றார்.(அ-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புறக்கோட்டை வியாபாரிகள் விவகாரம்; நாடாளுமன்றில் ஐ.தே.க. குரல் எழுப்பும்

கொழும்பு, மே 01

கொழும்பு, புறக்கோட்டை நடைபாதை வர்த்தக நிலையங்கள் பொலிஸாரால் அகற்றப்பட்டமையை எதிர்த்து ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்றில் குரல் எழுப்பும் என்று அக்கட்சி தெரிவித்துள்ளது.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அக்கட்சியின் எம்.பி.ருவான் விஜயவர்தனவே இவ்வாறு கூறினார்.

அவர் இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

இந்த அரசால் தேர்தல் காலங்களில் வழங்கப்பட்ட வாக்குறுதிகள் இப்போது மீறப்பட்டுக்கொண்டு வருகின்றன. சமையல் எரிவாயுக்களின் விலையையும், பால்மா வகைகளின் விலைகளையும் உயர்த்துவதற்குத் தேர்தலுக்கு முன் அக்கம்பனிகள் அப்போதைய வர்த்தக நுகர்வோர் அமைச்சர் பந்துல குணவர்த்தனவிடம் அனுமதி கோரின. அப்போது அனுமதி மறுக்கப்பட்ட போதிலும் இப்போது அனுமதி வழங்குவதற்கான வாய்ப்புகள் உள்ளன.

மேற்படி பொருள்களின் விலைகளை உயர்த்த கம்பனிகள் முன்வந்துள்ளன. இது தொடர்பாக அரசின் நிலைப்பாடு என்ன? விலைகளை அதிகரிக்க அரசு முற்பட்டால் நாடாளுமன்றில் இதற்கும் எதிராக நாம் நடவடிக்கை எடுப்போம்.

புறக்கோட்டை நடைபாதை வர்த்தக நிலையங்கள் அரசால் பலவந்தமாக அகற்றப்பட்டுள்ளன. இதற்கு எதிராக நாம் நாடாளுமன்றில் குரல் கொடுப்போம். இது சம்பந்தமாக சம்பந்தப்பட்டவர்களைச் சந்தித்து அரசு தீர்மானத்தை எடுக்கவேண்டும்.

இந்த விடயம் தொடர்பில் எம்மால் செய்யக்கூடியது நாடாளுமன்றுக்குக் குரல் கொடுப்பது மட்டும்தான். அதை நாம் செய்வோம். அரசுக்கு அழுத்தங் கொடுப்போம். - என்றார். (அ-சி)

## பேராபத்தான நிலையில் இலங்கை ஊடக சுதந்திரம்

### மனித உரிமை அமைப்பு கவலை

கொழும்பு, மே 01

இலங்கையில் ஊடக சுதந்திரம் பேராபத்தான நிலையில் இருக்கின்றது என்று அமெரிக்காவின் சுதந்திர இல்லம் (Watchdog Freedom House) என்கிற மனித உரிமைகள் கண்காணிப்பகம் சுட் டிக்காட்டியுள்ளது.

சர்வதேச ஊடக சுதந்திர நிலைமைகள் குறித்து நேற்று வெளியிட்ட அறிக்கையிலேயே இலங்கையிலும் ஊடக சுதந்திரம் பேராபத்துகளை எதிர்கொள்கின்றது என்று அந்த அமைப்பு குறிப்பிட்டுள்ளது.

ஆபிரிக்கா, லத்தீன் அமெரிக்கா, ஆசியா, மத்திய கிழக்கு நாடுகளில் ஊடக சுதந்திரம் பாரிய அச்சுறுத்தல்களுக்கு உள்ளாகி வருகின்றது என்று கோடி காட்டியிருக்கும் இக்கண்காணிப்பகம் இலங்கை, ஆப்கானிஸ்தான், நேபாளம் ஆகிய ஆசிய நாடுகளில் ஊடக சுதந்திரம் தொடர்ந்தும் வீழ்ச்சி கண்டு வருகின்றது என்று அறிக்கையிட்டுள்ளது.

## ஐ.தே.க. மறுசீரமைப்பு யோசனைகளை செயற்குழுவிடம் ரணில் சமர்ப்பிப்பார்

கொழும்பு, மே 01

ஐக்கிய தேசியக் கட்சியை மறுசீரமைத்தல் தொடர்பான தனது யோசனைகளை எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க இன்னும் இரண்டு அல்லது மூன்று வாரங்களுக்குள் கட்சியின் செயற்குழுவிற்குச் சமர்ப்பிப்பார் என்று அக்கட்சியின் எம்.பி. ருவான் விஜயவர்தன நேற்றுக் கூறினார்.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றி போதே ருவான் இவ்வாறு கூறினார்.

அவர் இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

எமது கட்சியை மறுசீரமைத்தல் தொடர்பான பேச்சுகள் மற்றும் நடவடிக்கைகள் தற்போது இடம்பெறுகின்றன. கிராம மட்டங்களில் கட்சியைப் பலமடையச் செய்வதற்கு இந்த மறுசீரமைப்பின் ஊடாக நடவடிக்கை எடுக்கப்படும்.

இந்த மறுசீரமைப்பு தொடர்பான தனது யோசனைகளை எமது தலைவர் ரணில் விக்கிரமசிங்க இன்னும் இரண்டு அல்லது மூன்று வாரங்களில் கட்சியின் செயற்குழுவிற்கு சமர்ப்பிப்பார். கட்சியின் தற்போதைய தலைமைத்துவத்தை மாற்றுவதா இல்லையா என்று செயற்குழுதான் தீர்மானிக்கும்.

நாட்டின் தற்போதைய நிலைமையைப் பார்க்கும்போது இன்னும் சில மாதங்களில் நாட்டு மக்கள் இந்த அரசுக்கு எதிராக வீதியில் இறங்கிப் போராடப் போகின்றனர். நாமும் அவர்களுடன் சேர்ந்து போராடுவோம்.

மிக விரைவில் இந்த அரசின் ஊழல், மோசடிகள் பற்றி இந்நாட்டு மக்கள் விளங்கிக்கொள்வர். ஆறு வருடங்களுக்கு முன்பே அடுத்த நாடாளுமன்றத் தேர்தல் நடப்பதற்கான வாய்ப்புகளே அதிகம் தென்படுகின்றன. மாற்று அரசொன்றை மிக விரைவில் ஸ்தாபிக்கக் கூடிய வகையிலேயே எமது கட்சியின் மறுசீரமைப்பு அமைந்திருக்கும். இந்த அரசின் ஊழல், மோசடிகளுக்கு எம்மால் முற்றுப்புள்ளி வைக்கப்படும் - என்றார்.



பூட்டானில் ஆப்கான் ஜனாதிபதி ஹமீத் ஹர்ஷாயை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சந்தித்தவேளை...

### ஆசியாவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெரும் சவாலாக இருந்தது. மூன்று தசாப்தங்களின் பின்னர் அதை நாம் தோற்கடித்துள்ளோம். அதற்கு எமது நாட்டின் உழைக்கும் மக்கள் பெரும் சக்தியாக விளங்கினர் என்பதைப் பெருமதிப்புடன் நினைவுபடுத்துகிறேன்.

பயங்கரவாதம் மூடிய அபிவிருத்திப் பாதைகள் இன்று எமது நாட்டின் உழைக்கும் வர்க்கத்தினருக்குத் திறந்துவிடப்பட்டுள்ளது. இந்த அபிவிருத்திப் பாதையில் பயணிக்க முடிந்த மகிழ்ச்சியில் இலங்கை உழைக்கும் வர்க்கத்தினர் இவ்வருடம் உலக தொழிலாளர் தினத்தைக் கொண்டாடுகின்றனர்.

உழைக்கும் மக்களுடன் கைகோர்த்து பதவிக்கு வந்த தலைவன் என்ற வகையில் அவர்களின் அபிலாஷைகளைப் பாதுகாக்க முடிந்தமை எனக்கு மகிழ்ச்சிதருகின்றது.

அதேபோன்று, உழைக்கும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த முடிந்தமையும் மக்களுடன் நெருங்கி அவர்களின் சுக துக்கங்களில் பங்குகொள்ள முடிந்தமையும் எமது வெற்றியின் இரகசியம் என்பதையும் நான் அறிவேன்.

தேசிய வளங்களைப் பாதுகாத்து, நாடு இழக்கவிருந்த வளங்களை நாம் மீட்ட போது உழைக்கும் மக்கள் அடைந்த மகிழ்ச்சி எமக்கு மேலும் மேலும் உத்வேகமூட்டியது.

பொருளாதார அபிவிருத்தி இலக்கை அடைந்துகொள்வதற்காக எதிர்வரும் காலங்களில் நாம் உழைக்கும் மக்களுக்கு மேலும் பல சலுகைகளை வழங்க நடவடிக்கை எடுத் துள்ளோம்.

அதற்கான தடைகளையும் சவால்களையும் வெற்றிகொள்ள உழைக்கும் மக்கள் அரசுடன் இணைந்திருப்பார்கள் என நான் எதிர்பார்க்கின்றேன் -என்றுள்ளது.(அ-சி)

### குடாநாட்டில்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்றும் அவர் தெரிவித்துள் ளார்.

பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ வியாழன், வெள்ளிக்கிழமைகளில் யுத்தத்திற்குப் பிந்திய சூழல் மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள் குறித்து மதிப்பீடு செய்வதற்காக வடபகுதிக்கு விஜயமொன்றை மேற்கொண்டிருந்தார்.

### நாடுதிரும்பினார்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சார்க் நாடுகளின் தலைவர்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது எனவும் ஜனாதிபதிச் செயலகம் செய்திவெளியிட்டுள்ளது. (சி)

### சகல...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரேரணை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுமெனத் தெரியவருகிறது.

இதுபற்றி கிழக்கு மாகாணசபை முதலமைச்சர் சிவனேசதுரை சந்திரகாந்தனுடன் தொடர்பு கொண்டபோது இந்த சட்ட மூலத்துக்கான இணக்கப்பாடு ஏற்கனவே எடுக்கப்பட்டுள்ளதெனவும் சபையின் அடுத்த அமர்வில் அது நிறைவேற்றப்படுமெனவும் அவர் கூறியுள்ளார்.

மேலும் நாடெங்கும் மாநகரசபைகள், நகரசபைகள், பிரதேசசபைகள் ஆகியவற்றின் பதவிக்காலம் கடந்த மார்ச் மாதம் முடிவடைந்திருந்த போதிலும் ஜனாதிபதி தேர்தலும் பொதுத் தேர்தலும் அடுத்தடுத்து வந்ததால் இச்சபைகளின் தேர்தல்கள் ஒரு வருடத்திற்கு ஒத்திவைக்கப்பட்டமை தெரிந்ததே. (அ-சி)

### பொன்சேகாவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவர் கைது செய்யப்பட்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இவர் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளிலும் பயங்கரவாத புலனாய்வுப் பிரிவிற்கு சமுகமளிக்க வேண்டும் என்றும் இவரின் கடவுச் சீட்டைப் பறிமுதல் செய்யுமாறும் நீதிவான் உத்தரவிட்டுள்ளார் எனவும் கூறப்படுகிறது. (அ-சி)

### இனப்பிரச்சினை..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்படுத்தும் தனது திட்டம் குறித்தும் மஹிந்த ராஜபக்ஷ தெளிவுபடுத்தியுள்ளார்.

இது அரசியல் தீர்வை நோக்கிய முயற்சிகளை மேலும் வலுப்படுத்தும் என்றும் அவர் நம்பிக்கை வெளியிட்டார்.

தேசத்தை மீளக் கட்டியெழுப்பும் செயற்பாட்டில் சமமான பங்களிப்பை வழங்குவதற்காக நாடாளுமன்றத்தில் பிரதிநிதித்துவப்படுத்தப்படாதவர்கள் உட்படத் தமிழ் சமூகத்தின் அனைத்துப் பிரிவினருடனும் தான் பேச்சுகளை மேற்கொள்ளப்போகிறார் என ஜனாதிபதி தெரிவித்தார்.

இரு தலைவர்களும் இரு நாடுகளினதும் உயர்மட்டத் தலைவர்கள் பரஸ்பர விஜயங்களை மேற்கொள்வது குறித்தும் ஆராய்ந்துள்ளனர்.

இதன்போது அடுத்த சில மாதங்களில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இந்தியாவிற்கு மேற்கொள்ளவுள்ள விஜயம் பற்றியும் கலந்துரையாடப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் விஜயத்தை தான் எதிர்பார்த்துள்ளார் எனத் தெரிவித்துள்ள மன்மோகன்சிங் இந்த விஜயம் இருநாட்டு உறவுகளையும் மேலும் வலுப் படுத்தும் - என்றும் குறிப்பிட்டுள்ளார். (அ-சி)

### நீதிவானின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெறுமாறு சாவகச்சேரி பொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரியையும், யாழ். உதவிப் பொலிஸ் அத்தியட்சகரையும் நீதிமன்றம் பணித்தது.

இந்த விடயம் தொடர்பாக இலங்கை நீதிச் சேவைகள் ஆணைக்குழுவுக்கு அறிவிக்குமாறும் அத்துடன் யாழ்.மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க, சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் (வடக்கு) ஆகியோருக்கு உரிய நடவடிக்கைக்கும், பாதுகாப்புக்குமாக தொலைபேசியில் அறிவிக்குமாறும் நீதிமன்றப் பதிவாளரை நீதிமன்றம் பணித்தது.

இதேவேளை, குறித்த சாள்ஸ் என்பவர் மாணவன் கபில்நாத் படுகொலை தொடர்பான வாக்குமூலம் அளித்தவர் என்றும் - ஈ.பி.டி.பியின் நுணாவில் முகாம் பொறுப்பாளராக உள்ளவர் என்றும் அங்கு சுட்டிக் காட்டப்பட்டது.

குறித்த நபர் தொடர்பாக ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகமும், அமைச்சருமாகிய டக்ளஸ் தேவானந்தாவுக்கு தகவல் தெரிவிக்கும் கடிதம் அனுப்புமாறும் பதிவாளருக்கு நீதிவான் உத்தரவிட்டார்.

மேற்படி மாணவன் படுகொலை தொடர்பாக ஈ.பி.டி.பியின் நுணாவில் முகாமில் செயற்பட்ட ஜீவன் என்பவரைக் கைது செய்யுமாறு சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றம் பிடிவிறாந்து பிறப்பித்தமையை அடுத்து, அது தொடர்பான செய்திகள் பரபரப்பாகப் பேசப்பட்ட நிலையிலேயே சாவகச்சேரி நீதிவானின் வாசஸ்தலப் பகுதியில் ஈ.பி.டி.பியினர் சந்தேகத்துக்கு இடமான முறையில் ஆயுதங்களுடன் நடமாடினர் என்ற செய்தி வெளியாகியிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-சி)

SHAMROCK
ஈச்சமோட்டை யாழ்.
A/L 2012
தமிழ் - S. சிவா
அரசியல் - S. ஸ்ரனிஸ்லாஸ்
கிறிஸ்.நாக. S.K. யூட்
புவி - A. ராஜா
இந்து.நாக - V.S. சர்மா
நாடகம் - N. சுஜீதரன்
அளவை - S. றொசேஷியன்
ENG - G. RANGIT
G.I.T. - D. ஷெல்ரன்
Econ. - N.B. கஜீதரன்

விக்னா
கல்வி நிறுவனம்
52, ஸ்ரான்லி றோட், யாழ்.
2012
வர்த்தகப் பிரிவு
ஆரம்பம் - 02.05.2010
8 மணி
Eco - N.B. கஜிதரன்
Acc.- பகீதரன்
B.B.t- யாசோ

BITSMANS
கல்வி நிறுவனம்
மானிப்பாய்
A/L 2011
வெப்ப இரசாயனம்
ஆசிரியர்
என். மகேஸ்வரன்
ஆரம்பம் - 02.05.2010
ஞாயிறு 5.30 p.m.

முகாமைத்துவ உதவியாளர் போட்டிப் பரீட்சை
ஆரம்பம்:
நாளை (ஞாயிறு)
பி.ப. 3 மணி
ஆசிரியர்
த.தவசேகர்
உயர் கலைக் கல்லூரி
மீசாலை சந்தி.

ஐடியல் அக்கடமி
சிறுப்பிட்டி சண்டிலிப்பாய் | கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம் | அந்தோனியார் கோவிலடி மாவிட்டபுரம்
O/L Day Class
இரண்டாம் பிரிவு ஆரம்பம்
03.05.2010 (திங்கள்)
நிர்வாகி.

விக்னா
கல்வி நிறுவனம்
52,ஸ்ரான்லி றோட், யாழ்.
O/L DAY CLASS
(8.30-2.30)
பிரிவு 4
ஆரம்பம் 3.5.2010 8.30 மணி
பிரிவு 3 ஒரு சில அனுமதிகள் இவ்வருடம் பிரிவு 6 மட்டுமே
*விடுதி வசதி உண்டு

தரம் 5 மாணவர்களுக்கான புலமைப் பரிசில் - 2010
பயிற்சி பரீட்சை 14 இல் அதிகூடிய புள்ளி பெற்ற பரிசுக்குரிய மாணவர்கள்
* ஜே. ஜெகதீபிகா - 173 (யா/ புனித ஜோன் பொஸ்கோ)
* சி.சஜீவன் - 170 (யா/ இந்து ஆரம்ப பாடசாலை)
* ஆர். துஷானி - 169 (யா/ புனித ஜோன். பொஸ்கோ)
அடுத்த பரீட்சை 15
02.05.2010 ஞாயிறு
* வெளி மாணவர்களும் விரும்பிய நேரங்களில் தோற்றலாம்.
நாவலர்
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

நாளை ஆரம்பம் 8 மணி
விக்னா
கல்வி நிறுவனம்
52,ஸ்ரான்லி வீதி
2012
கலைப் பிரிவு
தமிழ் - குழந்தை
பொருளியல் - N.B.கஜிதரன்
இ.நாகரிகம் - பத்மராஜா
புவியியல் - சுரேன்
அரசியல் - சிறிரங்கநாதன்
கிறிஸ்தவம் - யுட்
வரலாறு - தாஸ்
நா.அரங்கியலும் - கஜகரன்
அளவையியல் - வாகிசன்
ஆரம்பம் - 02.05.2010 8மணி

புதிய பிரிவு
BITSMANS
கல்வி நிறுவனம், மானிப்பாய்
A/L 2010

| கலை | | கணித, உயிரியல் | |
|---|---|---|---|
| தமிழ் | - என்.பாலா | இரசாயனம் | - என்.மகேஸ்வரன் |
| வரலாறு | - எம்.பத்மன் | பௌதிகம் | -ஜெயசீலன், பார்த்தீபன் |
| புவியியல் | - என்.பாபு | இ.கணிதம் | - பிரதீபன் |
| இந். நாக. | - எஸ்.ஜெயக்குமார் | உயிரியல் | - ஞானேந்திரன், பொன். தீவாகரன் |
| கிறிஸ்தவம் | - வசந்தன், யூட் | வர்த்தகம் | |
| அரசியல் | - ஜெனா | பொருளியல் | - பி.சண் |
| நாட. அரங்கு | - மங்களேஸ் | கணக்கீடு | - என். ராஜன் |
| அளவையியல் | - ஆர்.பி. சர்மா | வணிகக்கல்வி | - ரூபன் |
| ஆரம்பம் - 02.05.2010 ஞாயிறு 2 p.m. | | ஆரம்பத்தில் இருந்து கற்பிக்கப்படும் | |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்க... அச்சிட்டு வெளியிடப்பெற்றது.